Uthayan.com

வன்னி : ரூபா.20
யாழ். : ரூபா.20
கொழும்பு : ரூபா.30

# உதயன்

UTHAYAN - A Lively National Tamil Daily

மழைக்கான சாத்தியம் உண்டு.
27°C 26°C

பக்கம் 24 | சுடர்: 28 | கதிர்: 324 | வள்ளுவர் ஆண்டு: 2044 | புரட்டாதி 30, வியாழன் 17.10.2013

# வாக்காளராகப் பதியாமல் விட்ட கிராம அலுவலர் மீது முறைப்பாடு

## அடிப்படை மனித உரிமை மீறல் குற்றச்சாட்டு விசாரிக்கப்படுகிறது

யாழ்ப்பாணம், ஒக்ரோபர் 17
2012 ஆம் ஆண்டு வாக்காளர் பெயர்ப்பட்டியலில் தமது பெயர்கள் இணைக்கப்படாமை அடிப்படை மனித உரிமையை மீறும் செயல் எனத் தெரிவித்து யாழ். வாசிகள் இருவர் மனித உரிமை ஆணைக்குழுவில் முறைப்பாடு செய்துள்ளனர்.
இதனால் தாம் வடக்கு மாகாண தேர்தலில் வாக்களிக்க முடியாமல் போனதாக அவர்கள் குறிப்பிட்டுள்ளனர்.
வாக்காளர் பெயர்ப் பதிவின் போது கிராம சேவையாளர்களிடம் 'பி.சி' படிவத்தைச் சமர்ப்பித்தும் கடந்த ஆண்டு வாக்காளர் பெயர்ப் பட்டியலில் தமது பெயர் இணைக்கப்படாமைக்கு எதிராக இவர்கள் இருவரும் மனித உரிமை ஆணைக்குழுவின் யாழ். பிராந்தியக் கிளையில் முறையிட்டுள்ளனர்.
இல -770, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த, க.சின்னையா சிவரூபன், அவரது மனைவியான சிவரூபன் தக்ஷி ஆகிய இருவருமே இவ்வாறு முறைப்பாடு செய்துள்ளனர்.

> "கிராம சேவையாளரிடம் வாக்காளர் பதிவுக்கான 'பி.சி' படிவத்தைக் கையளித்தோம். அதற்கான ஆதாரமாக 'பி.சி' படிவத்தின் அடித்துண்டு எம்மிடம் வழங்கப்பட்டுள்ளது. ஆனால் பட்டியலில் பெயரில்லை.

"2012ஆம் ஆண்டு வாக்காளர் பெயர்ப்பட்டியல் பதிவு நடவடிக்கையின் போது ஜே/74 கிராம சேவையாளரிடம் வாக்காளர் பதிவுக்கான 'பி.சி' படிவத்தைக் கையளித்தோம். அதற்கான ஆதாரமாக 'பி.சி' படிவத்தின் அடித்துண்டு எம்மிடம் வழங்கப்பட்டுள்ளது" என்று அவர்கள் கூறியுள்ளனர்.
ஆனால் 2012 ஆம் ஆண்டு வாக்காளர் பெயர்ப்பட்டியலின் பிரகாரம் இடம்பெற்ற மாகாண சபைத் தேர்தலின்போது வாக்காளர் பெயர்ப் பட்டியலில் அவர்களது பெயர் இருக்கவில்லை.
"இதனால் நாம் வாக்களிக்க முடியாது போயுள்ளது. நாம் வாக்காளர்களாக விண்ணப்பித்தும் காரணமின்றி பெயர் நீக்கப்பட்டமை அடிப்படை மனிதஉரிமை மீறல்" என்று குறிப்பிட்டே மனிதஉரிமை ஆணைக்குழுவில் அவர்கள் முறைப்பாடு செய்துள்ளனர்.
இது தொடர்பான விசாரணைகளை மனிதஉரிமை ஆணைக்குழு முன்னெடுத்துள்ளது.
யாழ். மாவட்டத்தின் மொத்த சனத்தொகையில், சிறுவர்கள் தவிர 18 வயதும், அதற்கு மேற்பட்ட அனைவரும் வாக்காளர்களாகப் பதிவு செய்திருக்க வேண்டும். ஆனால் 20 ஆயிரம் பேர்வரை அவ்வாறு வாக்காளர்களாகப் பதிவுசெய்யப்படாமல் விடுபட்டுள்ளனர் என்று கூறப்படுகிறது.
கிராமசேவையாளர்களின் தவறும் இதற்கான முக்கிய காரணம் என்று சமூகஆர்வலர்கள் குற்றம் சுமத்துகின்றனர்.
மேலும் தற்போதைய புதிய வாக்காளர் பெயர்ப்பட்டியலிலும் 26 ஆயிரம் பேர் நீக்கப்பட்டுள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது. (த-ஐ-5)

# கடல் சீற்றப் பாதிப்பின் விவரம் முதல்வருக்கு

### கையளித்தார் மாகாணக் கடற்றொழில் அமைச்சர்

யாழ்ப்பாணம், ஒக்.17
முல்லைத்தீவு மற்றும் வடமராட்சி கிழக்கு பகுதிகளில் கடல் சீற்றத்தினால் பாதிக்கப்பட்ட மக்கள் தொடர்பான விவரங்களை வடக்கு முதலமைச்சரிடம் கையளித்து அவர்களுக்கான நிவாரண உதவிகளை உடனடியாக வழங்குவது தொடர்பில் கலந்துரையாடியுள்ளதாக வடக்கு மாகாண மீன்பிடி, போக்குவரத்து, கைத்தொழில், வர்த்தகம், கிராம அபிவிருத்தி அமைச்சர் பாலசுப்பிரமணியம் டெனீஸ்வரன் தெரிவித்தார்.
வடக்கு மாகாண முதலமைச்சர் க.வி. விக்னேஸ்வரன், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா. சம்பந்தன், நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ. சுமந்திரன் ஆகியோருடன் கொழும்பில் நேற்று புதன்கிழமை காலை இது குறித்துக் கலந்துரையாடியதாக அமைச்சர் டெனீஸ்வரன்கூறினார்.
"போரினாலும், சுனாமியாலும் பாதிக்கப்

21

# வடக்கு - கிழக்கு இணைவை அரசு தடுத்து விட முடியாது

### முதலமைச்சர் விக்னேஸ்வரன் உறுதிபட தெரிவிப்பு

யாழ்ப்பாணம், ஒக்.17
வடக்கும், கிழக்கும் இணைந்து செயற்பட நினைத்தால் அரசு அதனைக் கட்டாயம் நிறைவேற்றியாக வேண்டும். இதனைப் பிரிவினைவாதம் பேசுவதாகவோ, போராட்டத்தைத் தூண்டுவதாகவோ நினைத்து வடக்கு - கிழக்கில் வாழும் தமிழ், முஸ்லிம் மக்களை அரசு துன்பத்தில் விட்டுவிடக் கூடாது என்று வடக்கு மாகாண முதலமைச்சர் க.வி.விக்னேஸ்வரன் தெரிவித்துள்ளார்.



கொழும்பு கொச்சிக்கடை அருள்மிகு ஸ்ரீ வீரமாகாளி அம்மன் தேவஸ்தானத்தில் நேற்றுமுன்தினம் செவ்வாய்க்கிழமை இரவு இடம்பெற்ற விசேட வழிபாட்டில் கலந்துகொண்ட பின்னர் கருத்துத் தெரிவிக்கையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.
அங்கு அவர் மேலும் தெரிவித்ததாவது:-
கடந்த காலத்தில் முஸ்லிம் தலைமைகள்

21

தமிழக மீனவர் பிரச்சினையில் இந்திய மத்திய அரசு பாரபட்சம் 06

பட்டினியால் தவிக்கும் மக்கள்; உணவாக மாறும் நாய், பூனை! 07

வென்றது யாழ்.சென்றல் 22

சச்சினின் முடிவால் கவலை 23

# 3 தினங்களில் 1,500 பேர் பதிவு

### காணாமற்போனோர் தொடர்பில்

யாழ்ப்பாணம்,ஒக். 17
யாழ்ப்பாணம் மற்றும் கிளிநொச்சி மாவட்டங்களில் கடந்த மூன்று தினங்களாக காணாமற்போனோரைப் பதிவு செய்யும் நடவடிக்கைகள் இடம்பெற்றன. காணாமற்போன ஆயிரத்து 500 பேர் பற்றிய விவரங்கள் இதுவரை பதிவு செய்யப்பட்டன.
முல்லைத்தீவில் நேற்று மேற்கொள்ளப்பட்ட பதிவு நடவடிக்கைகளைக் குழப்பும் வகையில் புலனாய்வாளர்கள் எனக் கூறிக்கொண்டோர் செயற்பட்டனர் என்று தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் மாகாணசபை உறுப்பினர் து.ரவிகரன் தெரிவித்தார்.
இந்தப் பதிவு நடவடிக்கைகள் தொடர்ச்சியாக இன்று யாழ்ப்பாணம், கிளிநொச்சி, முல்லைத்

21

# யாழ். நகரில் குண்டு மீட்பு

யாழ்ப்பாணம், ஒக்.17
யாழ். போதனா வைத்தியசாலைக்குப் பின்புறமாக முன்னர் இராணுவத்தினர் பயன்படுத்தி வந்த வீடு ஒன்றின் மலக்குழியிலிருந்து ஆர்.பி.ஜி வகைக் குண்டு ஒன்று நேற்று புதன்கிழமை மீட்கப்பட்டுள்ளது.
இராணுவத்தினரால் மீட்கப்பட்ட அந்தக் குண்டு பின்னர் செயலிழக்க வைக் கப் பட்டதாகத் தெரிவிக்கப்பட்டது.
வைத்தியசாலைக்குப் பின்புறமாக விக்டோ

21

# இனி ஒருபோதும் நடக்காது வடக்கு - கிழக்கு இணைப்பு

### அடித்துக் கூறுகிறது பொதுபலசேனா

யாழ்ப்பாணம், ஒக்.17
வடக்கையும், கிழக்கையும் ஒன்றிணைத்துத் தனி நாட்டுக் கோரிக்கையை நடைமுறைப்படுத்தத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு நினைத்தால், அது ஒரு போதும் நடவாது என்றும் அதற்கான பதிலடியைக் கொடுப்போம் என்றும் பொதுபலசேனா அமைப்பு தெரிவித்துள்ளது.
இது தொடர்பாகப் பொது பலசேனா அமைப்பின் தலைவர் கிரம விமலஜோதி தேரர் தெரிவித்ததாவது:-
தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு வடக்கு மாகாணத்தில் வரலாற்று வெற்றியைப் பெற்றுள்ளமை வரவேற்கத்தக்கது. ஆனால், தமது வெற்றியை அவர்கள் தவறாகப் பயன்படுத்துகின்றமையைஏற்றுக்கொள்ள முடியாது. வடக்கில்ஆட்சியமைத்து மக்களுக்

21

# பேனா வடிவிலான பிஸ்டல் மீட்பு



கொழும்பு,ஒக் 17
பேனா வடிவில் அமைந்த பிஸ்டல் ரகத் துப்பாக்கி ஒன்றை சிலாபம் பொலிஸார் மீட்டுள்ளனர். இந்தத் துப்பாக்கி வெளிநாட்டில் தயாரிக்கப்பட்டதென்று ஆரம்பக்கட்ட விசாரணைகளிலிருந்து தெரிய வருவதாகப் பொலிஸார் தெரிவித்தனர்.
முந்தல் பிரதேசத்தில் இடம்பெற்ற கொள்ளைச் சம்பவங்களுடன் தொடர்புடையவர்கள் என்ற சந்தேகத்தில் கைதானவர்கள் பிரதான சந்தேகநபர்

21

# மாகாண சபை உறுப்பினர்கள் 3 பேர் நேற்றுப் பதவியேற்பு

யாழ்ப்பாணம்,ஒக். 17
தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் வடக்கு மாகாணசபை உறுப்பினர்களாக பதவியேற்காத 4 உறுப்பினர்களில் 3 பேர் நேற்று வவுனியாவில் சட்டத்தரணி முன்பாகப் பதவிப்பிரமாணம் செய்துள்ளனர்.
வடக்கு மாகாணசபைக்கு தேர்வு செய்யப்பட்ட தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினரின் பதவியேற்பு வைபவம் கடந்த 11 ஆம் திகதி வெள்ளிக்

21



# ஆனையிறவு வரை பரீட்சார்த்த ரயில்

யாழ்ப்பாணம், ஒக்.17
ஆனையிறவு வரையான ரயில் பாதைப் புனரமைப்பு பணிகள் நிறைவுபெற்றுள்ளதை அடுத்து பரீட்சார்த்த ரயில் சேவை கள் ஆனையிறவு வரையில் இடம்பெற்று வருகின்றன.
ஓமந்தையிலிருந்து கிளிநொச்சி வரையான ரயில் பாதையின் புனரமைப்புப் பணிகள் நிறைவு பெற்றுக் கடந்த மாதம் 14 ஆம் திகதி, கிளிநொச்சி வரை ரயில் சேவை விரிவாக்கப்பட்டது.
இதன் பின்னர் ஆனையிறவு வரையான ரயில் பாதைப் புனரமைப்புப் பணிகள் முன்னெடுக்கப்பட்டன. கிளிநொச்சியிலிருந்து, ஆனையிறவு வரையான ரயில் பாதை புனரமைப்பு

21

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்






கோப்பாய் ஆசிரியர் கலாசாலையின் புகழ்பூத்த அதிபர்களில் ஒருவரும், தென்மராட்சி வலயப் பிரதிக் கல்விப் பணிப்பாளராகப் பணியாற்றியவருமான ஆர்.ஸ்கந்தமூர்த்தியின் மணிவிழா, நல்லூர் துர்க்கா மணி மண்டபத்தில் வெகு சிறப்பாக நடைபெற்றது.
மண்டபம் நிறைந்து வழியும் அளவுக்கு மூத்தோர்கள், பல்துறை சார் அதிகாரிகள் நிரம்பி வழிந்தனர்.
நல்லை ஆதீன முதல்வர், விழா நாயகரும் அவரின் அன்னையும் மேடையில் வீற்றிருப்பதனையும் விழாவில் திரண்டிருந்த அபிமானிகள் கூட்டத்தில் ஒரு பகுதியினரையும் படங்களில் காணலாம்.
(படங்கள்: தர்சன்)

## விவாதிகள் ஒன்றியத்தின் விவாத சுற்றுப் போட்டி



யாழ்ப்பாணம், ஒக்.17
றோயல் கல்லூரி பழைய தமிழ் விவாதிகள் ஒன்றியம் பாடசாலை மாணவர்களின் ஆளுமை சிந்தனைத் திறன் மற்றும் பேச்சாற்றல் என் பவற்றை வளர்த்தெடுக்கும் முகமாக இரண்டாம் தடவையாக அகில இலங்கை ரீதியிலான மாபெரும் விவாதச் சுற்றுப் போட்டிகளை நடத்தவுள்ளது.
எதிர்வரும் 18 ஆம், 19 ஆம் திகதிகளில் றோயல் கல்லூரியில் நடைபெறும் இந்த நிகழ்வில் அனைத்து பாடசாலைகளும் பங்குபற்ற இயலுமெனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ந)

# பிரிட்டிஷ் பிரஜையின் கொலை விசாரணையை துரிதப்படுத்துக

## இலங்கை அரசிடம் கோரிக்கை



கொழும்பு,ஒக் 17
இலங்கையில் இரண்டு வருடங்களுக்கு முன்னர் விடுமுறையில் வந்தபோது கொலை செய்யப்பட்ட பிரிட்டிஷ் பிரஜையான குரம் ஷேய்க் குறித்த புலன் விசாரணைகளை துரிதப்படுத்துமாறு பிரிட்டன் இலங்கையைக் கோரியுள்ளது.

**"பொதுநலவாய மாநாட்டில் பிரிட் டன் பிரதமர் கலந்துகொள்வது குறித்து மனித உரிமை அமைப்புக்களும், சில பிரிட்டன் நாடாளுமன்ற உறுப்பினர்களும் அதிருப்தி அடைந்துள்ளனர்.**

அடுத்த மாதம் இலங்கையில் நடக்கவிருக்கும் பொதுநலவாய மாநாட்டில் பிரிட்டன் பிரதமர் டேவிட் கமரூன் கலந்துகொள்வது, இந்த வழக்கு விசாரணைகளில் முன்னேற்றத்தை ஏற்படுத்தும் என்று எதிர்பார்ப்பதாக இலங்கைக்கான பிரிட்டன் தூதுவர் தெரிவித்துள்ளார்.
இலங்கையில் நடக்கவிருக்கும் பொதுநலவாய மாநாட்டில் பிரிட்டன் பிரதமர் கலந்துகொள்வது குறித்து மனித உரிமை அமைப்புக்களும், சில பிரிட்டன் நாடாளுமன்ற உறுப்பினர்களும் அதிருப்தி அடைந்துள்ளனர்.
ஆனால், குரம் ஷேய்க்கின் கொலை வழக்கில் நீதி கிடைப்பதற்குப் பிரிட்டன் இந்த மாநாட்டைப் பயன்படுத்திக்கொள்ள வேண்டும் என்று இலங்கைக்கான பிரிட்டன் தூதுவர், ஜோன் ரன்கின் கூறியுள்ளார். இது குறித்த வழக்கு விசாரணை துரிதமாக நடக்க வேண்டும் என்று அவர் கூறியுள்ளார்.
றொச்டேலைச் சேர்ந்த செஞ்சிலுவைச் சங்க அதிகாரியான ஷேய்க், 2011இல் இலங்கை சுற்றுலா விடுதி ஒன்றில் குத்தி, சுட்டுக் கொலை செய்யப்பட்டார்.
அவரது தோழியான ரஷ்யாவைச் சேர்ந்த விக்டோரியா கச்சேவா பாலியல் ரீதியாகத் தாக்கப்பட்டார்.
ஆளும் கட்சியைச் சேர்ந்த நகர சபைத் தலைவர் ஒருவர் உட்பட மூன்று குற்றவாளி களின் மரபணுக்களுடன் சம்பவ இடத்தில் கிடைத்த மரபணு மாதிரி பொருந்துவதாகப் பொலிஸார் கூறுகிறார்கள்.
இந்த விடயத்தில் நீதி விசாரணைகள் நடக்கும் வேகம் குறித்து பிரிட்டனுக்குத் திருப்தி கிடையாது என்று தூதுவர் கூறியுள்ளார்.
"இந்தச் சம்பவம் கிட்டத்தட்ட 22 மாதங்களுக்கு முன்னர் நடந்ததாகும். உடனடியாக கைது நடந்து, அதிகாரிகளும் அடுத்தடுத்த உறுதி மொழிகள் வழங்கியுள்ள போதிலும், இன்னமும் எவர் மீதும் இதுவரை குற்றச்சாட்டுகள் சுமத்தப்படவில்லை என்பதுடன், குற்றவாளிகள் தற்போது சுதந்திரமாக நடமாட அனுமதிக்கப்பட்டுள்ளார்கள்" என்றார் பிரிட்டன் தூதுவர்.
இலங்கையின் மனித உரிமைகள் நிலவரம் குறித்து பிரிட்டனுக்கு மகிழ்ச்சி கிடையாது என்பதை இலங்கைக்கான தனது பயணத்தின்போது தான் வலியுறுத்துவேன் என்று கடந்த வாரம் பிரதமர் டேவிட் கமரூன் நாடாளுமன்றத்தில் கூறியுள்ளார்.
குரம் ஷேய்க் விவகாரம் குறித்த விடயத்தை எழுப்புவதற்காக அது குறித்த முழுமையான தகவல்களை அவர் கோரியுள்ளார். (த)

## மேலும் 33 தமிழ் அகதிகளை திருப்பி அனுப்பியது ஆஸி.

கான்பரா,ஒக் 17
ஆஸ்திரேலியாவில் புதிதாகப் பதவியேற்றுள்ள ரொனி அபோர்ட் அரசு, சட்டவிரோதமாகப் படகுகள் மூலம் அங்கு சென்ற தமிழ் அகதிகளைச் சிறப்பு விமானங்கள் மூலம் இலங்கைக்குத் தொடர்ச்சியாகத் திருப்பி அனுப்பி வருகிறது. நேற்று முன்தினமும் 33 தமிழ் அகதிகள், இலங்கைக்குத் திருப்பி அனுப்பப்பட்டனர்.
சிறப்பு விமானம் மூலம் பலத்த பாதுகாப்புடன் இவர்கள் கட்டுநாயக்க விமான நிலையத்தை வந்தடைந்தனர்.
இவர்களில் பெரும்பாலானோர் யாழ்ப்பாணத்தைச் சேர்ந்தவர்கள் என்றும், திருகோணமலையில் இருந்து படகு மூலம் ஆஸ்திரேலியா சென்றவர்கள் என்றும் தகவல்கள் தெரிவிக்கின்றன.
நேற்றுமுன்தினம் திருப்பி அனுப்பப்பட்ட அகதிகளில் 8 பெண்களும், 25 ஆண்களும், 8 சிறுவர்களும் அடங்கியுள்ளனர்.
ஆஸ்திரேலியாவினால் திருப்பி அனுப்பப்பட்ட 40 அகதிகள், கடந்த திங்களன்றும் கொழும்புக்கு வந்திருந்தனர். அவர்களைப் பொலிஸார் கைது செய்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (த)

# நல்லிணக்கப் பந்து இப்போது வடக்கிலிருந்து தெற்கு நோக்கி

## மஹிந்த அதனைப் புரிந்துகொள்ள வேண்டுமென்கிறார் மனோ



யாழ்ப்பாணம், ஒக்.17
மாகாண சபை என்பது தேசிய இனப்பிரச்சினைக்கான ஒரு தீர்வு அல்ல என்றபோதும் அதில் ஆர்வத்துடன் பங்கு பற்றி வாக்களித்ததன் மூலம் வடக்கு மாகாணத் தமிழ் மக்கள் ஒரே நாட்டுக்குள் வாழ விரும்புகின்றோம் என்ற செய்தியை தெற்கு சிங்கள மக்களுக்கு அனுப்பியுள்ளார்கள்.
தற்போது தென்னிலங்கையை நோக்கி நல்லிணக்கப் பந்து வடக்கிலிருந்து நட்புணர்வுடன் எறியப்பட்டுள்ளது என்பதை சிங்கள மக்களும், மஹிந்த அரசும் புரிந்துகொள்ள வேண்டும் என்று ஜனநாயக மக்கள் முன்னணியின் தலைவர் மனோ கணேசன் தெரிவித்துள்ளார்.
தனியார் தொலைக்காட்சியொன்றின் அரசியல் விவாத நிகழ்வில் கலந்துகொண்டு கருத்துத் தெரிவிக்கையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.
அதில் அவர் மேலும் தெரிவித்ததாவது:-
வடக்கு மக்களால் தெரிவு செய்யப்பட்ட மாகாண சபையின் முதல்வர், பல்வேறு விமர்சனங்களுக்கு மத்தியிலும், அலரி மாளிகைக்கு வந்து ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ முன்னிலையில் பதவிப்பிரமாணம் செய்துள்ளார்.
இதன் மூலம் அவர் இலங்கை அரசுக்கு தெளிவான செய்தியை கொடுத்துள்ளார். தமிழ் மக்கள் தங்களது நல்லிணக்கத்தை வெளிப்படுத்தி விட்டனர்.
தற்போது நல்லிணக்கத்துக்கான பந்து தெற்கிலே சிங்கள மக்களிடமும், சிங்கள மக்களின் அமோக ஆதரவை பெற்றுள்ளதாகக் கூறிக்கொள்ளும் அரசிடமுமே இருக்கின்றது.
மாகாண சபை எங்களுக்கான தீர்வு அல்ல என்பது தமிழர் முடிவு. ஆனால் இதை ஒரு ஆரம்பப் புள்ளியாக வைத்து நாம் பயணிக்கின்றோம் எனவே அதையும் இல்லாமல் செய்ய முயலாதீர்கள்.
இந்த நாட்டு சிங்களத் தலைவர்கள், தமிழ்த் தலைவர்களுக்கு வழங்கிய வாக்குறுதிகளை நிறைவேற்றாமல் ஏமாற்றிய காலம் மலையேறிவிட்டது. ஜனாதிபதி, ஐ.நா செயலர் பான் கீ மூனுக்கு 13 ஆம் திருத்தத்தை முழுமையாக நடைமுறைப்படுத்தி, அதை மேலும் அபிவிருத்தி செய்து முன் கொண்டு செல்வதாக எழுத்து மூலம் உறுதி வழங்கியுள்ளார்.
மாகாண சபையோ, பிராந்திய சபையோ பெயர்கள் முக்கியம் அல்ல. அதிகாரப் பகிர்வு என்ற கொள்கை தான் முக்கியம்.
அதை இந்த நாட்டுக்கு இந்தியா கொண்டு வரவில்லை. சரித்திரத்தைப் படித்து உண்மையை தெரிந்துகொள்ளுங்கள். பண்டா செல்வா ஒப்பந்தம் வந்தபோது, டட்லி - செல்வா ஒப்பந்தம் வந்த போது ஜவஹர்லால் நேரு வரவில்லை. அவை முழுக்க முழுக்க உள்நாட்டு அதிகாரபகிர்வுத் திட்டம். ஆகவே அதிகாரப் பகிர்வு கொள்கையை அந்நிய சக்திகளான இந்தியா, அமெரிக்கா அல்லது ஐ.நா. சபை ஆகியவை இலங்கைக்குக் கொண்டு வந்து இந்த [illegible] குப் புறம்பாகப் பேசாதீர்கள் என்றார். (த-5)

## வவுனியாவில் நேற்று மழை

நீண்ட நாள்களுக்குப் பின்னர் வவுனியாவில் பரவலாக மழை பெய்துள்ளது. இதன் மூலம் இந்த வருடத்துக்கான பெரும்போக நெற்செய்கையை ஆரம்பிக்க வழி கிடைத்துள்ளதாக விவசாயிகள் தெரிவித்துள்ளனர்.
காற்றுடன் கூடிய மழையால் சில இடங்களில் மின்சாரம் தடைப்பட்டதுடன் மரங்களும் முறிந்து விழுந்துள்ளன. (ஐ-402)

## இன்று விடுமுறை முஸ்லிம் பாடசாலைகளுக்கு

மட்டக்களப்பு, ஒக்.17
நாட்டிலுள்ள அனைத்து முஸ்லிம் பாடசாலைகளுக்கும் இன்று வியாழக்கிழமை விசேட விடுமுறை வழங்கப்பட்டுள்ளது.
புனித ஹஜ் பெருநாளை முன்னிட்டே இந்த விசேட விடுமுறை வழங்கப்பட்டுள்ளது என்று கல்வி அமைச்சு அறிவித்துள்ளது.
இதற்கு பதிலாக எதிர்வரும் 26ஆம் திகதி சனிக்கிழமை பாடசாலைகளை நடத்து மாறும் கல்வி அமைச்சு அதிகாரிகளுக்கு ஆலோசனை வழங்கியுள்ளது.
வலயக் கல்விப் பணிப்பாளர்கள் மற்றும் அதிபர்கள் விடுத்த வேண்டுகோளுக்கு அமைய இந்த விடுமுறை அறிவிக்கப்பட்டுள்ளது.

## மரத்துடன் மோதியது பஸ் மல்லாவியில் 15 பேர் காயம்



துணுக்காய், ஒக்.17
மல்லாவியில் இருந்து நட்டாங்கண்டல் சென்றுகொண்டிருந்த தனியார் பஸ் ஒன்று மரத்துடன் மோதி விபத்துக்குள்ளாகியதில் அதில் பயணித்த 15 பேர் காயங்களுடன் மல்லாவி மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.
நேற்று முற்பகல் 10.30 மணியளவில் இந்த பஸ் மல்லாவியிலிருந்து நட்டாங்கண்டல் நோக்கிப் பயணித்தது. 20 பயணிகள் அந்த பஸ்சில் இருந்தனர். இந்த நிலையில் முற்பகல் 11.50 மணியளவில் பஸ் நட்டாங்கண்டலை நெருங்கிய போது முன்சில்லு ஒன்று காற்றுப்போனது. இதனால் அந்த பஸ் நிலை தடுமாறியதுடன் வீதியோரத்தில் நின்ற பாலை மரத்துடன் மோதியது. இதன் போது பஸ்ஸின் வலது பக்கம் மோசமாகச் சேதமடைந்ததுடன் சாரதியும் 14 பயணிகளும் கடுமையான காயங்களுக்கு உள்ளானார்கள்.
நட்டாங்கண்டல் மருத்துவமனையில் மருத்துவர் இல்லாததால் காயமடைந்தவர்கள் அம்புலன்ஸ் வாகனங்களிலும் தனியார் வாகனங்களிலும் ஏற்றப்பட்டு மல்லாவி மருத்துவமனைக்குக் கொண்டு செல்லப்பட்டனர்.
தகவல் அறிந்ததும் சம்பவ இடத்துக்கு விரைந்த மல்லாவிப் பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டனர்.
நட்டாங்கண்டல் வீதிகள் சேதமடைந்து மோசமான நிலையில் காணப்படுவதால் இவ்வாறான விபத்துச் சம்பவங்கள் இடம்பெறுவதாக மக்கள் தெரிவித்தனர். (த-க-415)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உயிரோடு இருப்பவரை சாகடித்த தேர்தல் திணைக்களம் 'சாதனை'

யாழ்ப்பாணம், ஒக்.17
வவுனியா மாவட்டத்தில் உயிருடன் உள்ள ஒருவருக்கு "இறப்பெய்தியவர் என அறிவிக்கப்பட்டுள்ளது" எனத் தெரிவித்து, வடமாகாண சபைத் தேர்தலின் போது வாக்காளர் அடையாள அட்டை விநியோகிக்கப்பட்டுள்ளது.

வவுனியா, தோணிக்கல், வியாசர் வீதி, 11 'ஏ' என்ற முகவரியைச் சேர்ந்த ஶ்ரீதர் குமாரவேலு இராசையா என்பவருக்கே இவ்வாறு "இறப்பெய்தியவர் என அறிவிக்கப்பட்டுள்ளது" என்று வாக்காளர் அடையாள அட்டை விநியோகிக்கப்பட்டுள்ளது.

குறித்தநபர் உயிருடன் இன்னமும் உள்ள நிலையிலேயே இத்தகைய வாக்காளர் அட்டை விநியோகிக்கப்பட்டுள்ளது. இதனால் அந்த நபர் வடமாகாண சபைத் தேர்தலின்போது வாக்களிக்க முடியாத நிலை ஏற்பட்டதாகக் குறிப்பிட்டுள்ளார்.

இந்த விடயம் தொடர்பாக வவுனிய மாவட்ட உதவித் தேர்தல்கள் ஆணையாளர் பொ.குகநாதனிடம் தொடர்பு கொண்டு கேட்ட போது:


'இறப்பெய்தியவர் என்று அறிவிக்கப்பட்டுள்ளது" அல்லது வெளிநாடு சென்றுள்ளார் என்று பதியப்பட்டவாறு வாக்காளர் அட்டை கிடைத்தால் அதைக் கொண்டு சென்று சம்பந்தப்பட்டவர் வாக்களிக்க முடியும்.

ஒரு சில கிராம சேவையாளர்கள் தனிப்பட்ட பழி வாங்கல்களுக்காகவோ கடமை அலட்சியம் காரணமாகவோ, தான் சார்ந்துள்ள கட்சிக்கு எதிரானவர்கள் தொடர்பில் பொய்யான தகவல்களை வழங்குகின்றனர்.

கிராம சேவையாளர்கள் வழங்கும் தகவல்களை வைத்தே தேர்தல் திணைக்களம் வாக்காளர் அட்டையில் இவ்வாறு குறிப்பிடுகின்றது.

எனவே சம்பந்தப்பட்ட நபர் நேரடியாக என்னிடம் முறைப்பாடு செய்தால் தேர்தல்கள் ஆணையாளருடன் கலந்துரையாடி குறித்த கிராம சேவையாளர், பிரதேச செயலாளருக்கு எதிராக சட்ட நடவடிக்கை மேற்கொள்ள முடியும்.

அல்லது குறித்த நபர் தனது அடிப்படை உரிமை மறுக்கப்பட்டுள்ளதாக மனித உரிமை ஆணைக் குழுவில் முறைப்பாடு செய்தால், அந்த விசாரணைகளுக்கு பூரண ஒத்துழைப்பு வழங்கப்படும் - என்றார். (வ-5)



யாழ்.ஒஸ்மானியா கல்லூரியில் நேற்று புதன்கிழமை காலை ஹஜ் பெருநாள் தொழுகை இடம்பெற்றது. யாழ்ப்பாணத்திலுள்ள முஸ்லிம் மக்கள் கலந்துகொண்டு தொழுகையில் ஈடுபட்டதுடன் மௌலவி மஹ்மூத் ஜும்மா பிரசங்கத்தை நிகழ்த்தினார். (வ-10-20)

## பயிர்ச்சிகிச்சை முகாமில் வடக்கு வவசாய அமைச்சர்



அச்சுவேலி, ஒக்.17
புத்தூரில் நடைபெற்ற பயிர்ச் சிகிச்சை முகாமை வடக்கு மாகாண விவசாய அமைச்சர் பொ.ஐங்கரநேசன் நேரில் பார்வையிட்டு விவசாயிகள் மற்றும் அதிகாரிகளுடன் கலந்துரையாடினார்.

விவசாயிகள் தமது குறைபாடுகள், தேவைகள் என்பவற்றை அமைச்சருக்கு விலாவாரியாக எடுத்துக்கூறினர். இரண்டு மணி நேரம் நிகழ்வில் தரித்து நின்று நிலைமைகளை அவதானித்தார் அமைச்சர்.

புத்தூர் கமநல சேவை நிலையத்தில் கடந்த திங்கட்கிழமை நடமாடும் பயிர்ச் சிகிச்சை முகாம் யாழ். மாவட்ட விவசாயத் திணைக்களத்தால் நடத்தப்பட்டது.

நடமாடும் முகாம் நடைபெற்றுக்கொண்டிருக்கும் போது முகாமைப் பார்வையிடுவதற்காக அமைச்சர் வந்து சேர்ந்தார். எந்தவிதமான மாலை மரியாதையும் இன்றி வாசலில் வரவேற்கப்பட்டு நடமாடும் முகாமுக்கு அழைத்துவரப்பட்ட அமைச்சர்,

விவசாயத் திணைக்கள உயர் அதிகாரிகளுடன் முகாமின் அமைப்பு முறை மற்றும் பயன்பாடு, செயற்பாட்டு நிலைமை தொடர்பாக கலந்துரையாடியதுடன் பயிர்ச் சிகிச்சை முகாம் நடைமுறைகளை நேரில் பார்வையிட்டு விளக்கங்களைக் கேட்டறிந்தார். (வ-11)

# மறுசீரமைக்கப்பட்ட வீதிகளில் பொருத்தப்படுகின்ற மின்விளக்குகள்

யாழ்ப்பாணம், ஒக்.17
மறுசீரமைக்கப்பட்டு 'காப்பெற்' வீதியாக மாற்றப்பட்ட யாழ்.குடாநாட்டின் பிரதான வீதிகளில் மின் விளக்குகள் பொருத்தும் பணி ஆரம்பிக்கப்பட்டுள்ளது. முக்கிய சந்திகள் மற்றும் நகராங்களை அண்டிய பகுதிகளில் மட்டும் இவை பொருத்தப்படும் என்று அதிகாரிகள் கூறுகின்றனர்.

வீதி அபிவிருத்தி அதிகார சபையின் 'சி-7' திட்டத்தில், யாழ்.பருத்தித்துறை வீதி, யாழ்.காங்கேசன்துறை வீதி, யாழ்.பலாலி வீதி, புத்தூர்-மீசாலை வீதி ஆகிய நான்கு வீதிகளைப் புனரமைக்கும் பணி இடம்பெற்று வருகின்றது.

வீதிகள் அகலிக்கப்பட்டு காப்பெற் வீதிகளாக மாற்றப்பட்டுள்ளன. தற்போது குறித்த வீதிகளில் வீதிச் சமிக்ஞை பலகைகள் பொருத்தும் நடவடிக்கைகளும் வீதிக் குறியீடுகளை வரையும் நடவடிக்கைகளும் இடம்பெற்று வருகின்றன. மேலும் குறித்த 4 வீதிகளின் பிரதான சந்திகள், நகரங்களை அண்டிய பகுதிகளில் வீதி விளக்குகள் பொருத்தும் செயற்றிட்டமும் ஆரம்பிக்கப்பட்டுள்ளது. மின்சாரசபையின் மின் கம்பங்களில் வீதி விளக்குகள் பொருத்தப்படாமல் பிரத்தியேகமாக கம்பங்கள் அமைக்கப்பட்டு அவற்றிலேயே வீதி விளக்குகள் பொருத்தும் பணி இடம்பெறுகின்றது.

இரு கம்பங்களுக்கிடையே 15 மீற்றர் வித்தியாசம் இருக்கும் விதத்தில். வீதியின் இரு மருங்கிலும் இந்தக் கம்பங்கள் அமைக்கப்படுகின்றன.

குறித்த வீதி விளக்குகள் அமைக்கப்பட்ட பின்னர் மாநகர, நகர மற்றும் பிரதேச சபைகளினால் பொருத்தப்பட்ட வீதி விளக்குகள் அகற்றப்பட்டு அவை வீதி அபிவிருத்தி அதிகார சபையின் மின் விளக்குகள் பொருத்தப்படாத ஏனைய பிரதேசங்களில் பொருத்தப்படவுள்ளன.

இந்த விளக்குகளைப் பொருத்தி அதற்கான இணைப்புக்களை பெற்றுக்கொள்ளும் நடவடிக்கைகள் அனைத்தும் வீதி அபிவிருத்தி அதிகார சபையால் முன்னெடுக்கப்படும். அதன் பின்னரான மாத வாடகையை அந்தப் பகுதி களுக்குப் பொறுப்பான மாநகர நகர, பிரதேச சபை என்பனவே செலுத்த வேண்டும்.

இந்தப் பணிகள் எதிர்வரும் டிசெம்பர் மாதம் 8 ஆம் திகதிக்கு முன்னர் நிறைவடையும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (வ-51)

> "வீதி விளக்குகள் அமைக்கப்பட்ட பின்னர் மாநகர, நகர மற்றும் பிரதேச சபைகளினால் பொருத்தப்பட்ட வீதி விளக்குகள் அகற்றப்பட்டு அவை வீதி அபிவிருத்தி அதிகார சபையின் மின் விளக்குகள் பொருத்தப்படாத ஏனைய பிரதேசங்களில் பொருத்தப்படவுள்ளன.



# நெடுந்தீவு சங்கக்கிளைகளில் மாயமாகிய பணம் திரும்புகிறது

யாழ்ப்பாணம், ஒக். 17
நெடுந்தீவிலுள்ள மூன்று பலநோக்குக் கூட்டுறவுச் சங்கக் கிளைகளில் வரவு-செலவுக் கணக்கில் மாயமாகிய சுமார் ஒன்பது இலட்சம் ரூபா பணத்தைத் திருப்பிச் செலுத்துமாறு அந்த மூன்று சங்கங்களின் முகாமையாளர்களுக்கு நீதிமன்று உத்தரவிட்டுள்ளது. நீதிமன்றில் வழக்குத் தாக்கல் செய்யப்பட்டதையடுத்து குற்றத்தை ஒப்புக்கொண்ட மூவரும் அந்தப் பணத்தைச் செலுத்தி வருகின்றனர்.

ஊர்காவற்றுறை நீதிமன்றில் நீதிவான் ஆர்.எஸ். மகேந்திரராஜா முன்னிலையில் இந்த வழக்கு விசாரிக்கப்பட்டது.

ஒரு சங்கக்கிளையில் 3 இலட்சத்து 13 ஆயிரத்து 708 ரூபா 33 சதமும், மற்றைய சங்கக்கிளையில் 3 இலட்சத்து 93 ஆயிரத்து 692 ரூபா 15 சதமும், மூன்றாவது சங்கத்தில் ஒரு இலட்சத்து 95 ஆயிரத்து 97 ரூபா 34 சதமும் மாயமாகி இருந்தமை கணக்காய்வின் போது தெரியவந்தது.

பணம் மாயமாகியதற்கான காரணத்தைத் தெளிவுபடுத்துமாறு அல்லது அதனை மீளச் செலுத்துமாறும் பொது முகாமையாளரால் கிளை முகாமையாளர்களுக்கு அறிவிக்கப்பட்டது. எனினும் மூன்று வருடங்களுக்கும் [illegible] எந்தவித நடவடிக்கையும் எடுக்கவில்லை. மூவருக்கும் எதிராக ஊர்காவற்றுறை நீதிமன்றில் வழக் குத் தாக்கல் செய்யப்பட்டது. மூவரும் தம்மீதான குற் றத்தை ஒப்புக்கொண்டு பணத்தை திருப்பிச் செலுத்த ஒப்புக் கொண்டனர்.

> ஊர்காவற்றுறை நீதிமன்றில் நீதிவான் ஆர்.எஸ். மகேந்திரராஜா முன்னிலையில் இந்த வழக்கு விசாரிக்கப்பட்டது.

இதனடிப்படையில் மூவரும் பிணையில் விடுவிக்கப்பட்டனர். அதன்படி அவர்கள் மூவரும் செலுத்த வேண்டிய பணத் தொகையை பகுதி பகுதியாகச் செலுத்த நீதிமன்று உத்தரவிட்டது.


இதன்படி முதற்கட்டமாக மூவரும் சேர்ந்து 66 ஆயிரம் ரூபா பணம் செலுத்தியுள்ளனர். அடுத்த தவணைக் [illegible] செலுத்துவதற்காக வழக்கு அடுத்த மாதம் 14 ஆம் திகதிக்கு ஒத்தி வைக்கப்பட்டுள்ளது. (உ-4)

## சின்னச் சின்னக் கைகள் ஓவியக் கண்காட்சி

யாழ்ப்பாணம், ஒக். 17
ஓவிய ஆசிரியர் எஸ்.சிவதாசனின் மாணவர்கள் வரைந்த ஓவியங்களின் கண்காட்சி கொக்குவில் இந்துக் கல்லூரி சுப்பிரமணியம் மண்டபத்தில் நாளை வெள்ளிக்கிழமையும், மறுநாள் சனிக்கிழமையும் நடைபெறவுள்ளது.

"சின்னச் சின்னக் கைகள்" என்னும் தலைப்பிலான இந்தக் கண் காட்சியில் பிரதம விருந்தினராக தென்மராட் சிக் கல்வி வலய அழகியல் பிரிவு உதவிக் கல்விப் பணிப்பாளர் கோ.கைலாச நாதன் கலந்து கொள்வார்.

இரண்டு நாள்களும் காலை 9.30 மணி தொடக்கம் கண்காட்சி இடம்பெறும்.



ஆர்வமுள்ளவர்கள் கண்காட்சியைக் கண்டுகளிக்குமாறு ஏற்பாட்டாளர்கள் தெரிவித்துள்ளனர். (வ-4)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மரண அறிவித்தல்

## திருமதி தயானபூபதி மகேந்திரராஜா



நெல்லியடியைப் பிறப்பிட மாகவும், நல்லூரைப் வசிப்பிட மாகவும் கொண்ட திருமதி. தயானபூபதிமகேந்திரராஜா நேற்று (16.10.2013) புதன்கிழமை கால மானார்.

அன்னாரின் இறுதிக்கிரியை கள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனை வரும் ஏற்றுக் கொள்ளவும்.

131/4, பருத்தித்துறை வீதி,
நல்லூர்

தகவல்
மகேந்திரராஜா (கணவர்)
(முன்னாள் முகாமையாளர் வர்த்தக திணைக்களம்)

# மணிக்கணக்கில் காக்க வைக்கும் வவுனியா தெற்கு வலய அதிகாரிகள்

### தேவைகளை நிறைவேற்ற முடியாமல் ஆசிரியர்கள் திண்டாட்டம்

யாழ்ப்பாணம், ஒக். 17

வவுனியா தெற்கு வலயக் கல்வி அலுவலகத்துக்குத் தேவைகருதிச் செல்லும் ஆசிரியர்கள், அங்கு உரிய அதி காரிகள் இல்லாத நிலையில் மணிக்கணக்கில் காத்திருந்து விட்டு ஏமாற்றத்துடன் திரும்புவதாக தெரிவிக்கின்றனர்.

புதன் கிழமைகளிலேயே ஆசிரியர்கள் தமது விடயங்கள், கொடுப்பனவு சிட்டை தொடர்பில் தேவை கருதி வலயக் கல்வி அலுவலகத் துக்குச் செல்கின்றனர்.

ஏனைய தினங்களில் சென்றால் அங்குள்ள அதிகாரிகள் புதன் கிழமையில் வருமாறு கூறி அனுப்பிவிடுகின்றனர்.

அவ்வாறு புதன்கிழமைகளில் பாடசாலை நேரம் முடி வடைந்த பின்னர் வலயக் கல்விப் பணிமனைக்குச் சென் றால் அதிகாரிகள் சிலர் அங்குபணியில் இருப்பதில்லை.

மதியம் உணவுக்காகச் செல் வதாகக் கூறி 1.30 மணிக்கு முன்னரே அந்தச் சில அதிகாரிகள் அலுவலகத்திலிருந்து புறப்பட்டுச் சென்று விடுவர். அவர்கள் தமது தனிப்பட்ட பணிகள், குடும்ப வேலைகளை நிறைவு செய்து வலயக் கல்வி அலு வலகப் பணிகள் பிற்பகல் நிறைவு செய் யும் நேரத்தில் தான் அலுவலகத்துக்குத் திரும்புவார்கள். அவர்களுக்காகத் மணிக் கணக்கில் காத்திருக்க வேண்டி யுள்ளது.

அவர்கள் வந்ததும் ஒரு சில ஆசிரியர்களின் தேவை களை மட்டும் நிறைவு செய்துவிட்டு ஏனைய ஆசிரியர்களை பிறிதொரு நாளில் வருமாறு கூறிவிட்டு அலுவலகத்தைப் பூட்டி விட்டுச் சென்றுவிடுவர். என்று பாதிக்கப்பட்ட ஆசிரியர்கள் தெரிவித்துள்ளனர்.

இது தொடர்பில் அந்த வலயக் கல்விப் பணிப்பாளருடன் தொடர்பு கொண்டு கேட்ட போது அவ்வாறு ஒரு சம்பவமும் இடம்பெறுவதில்லை என்று மறுத்தார்.

இதேவேளை இத்தகைய பிரச்சினை பல வலயங்களில் தொடர்ந்து கொண்டிருப்பதாகத் தெரிவிப்படுகிறது. (வ-4)

உதயன்
விளம்பரத் தொடர்புகளுக்கு
advt@uthayan.com
0215671111

# மரண அறிவித்தல்

## திருமதி தங்கம்மா சுப்பையா



மூளாய் மேற்கைப் பிறப்பிடமாகவும் வசிப்பிட மாகவும் கொண்ட திருமதி தங்கம்மா சுப்பையா நேற்று முன்தினம் (15.10.2013) செவ்வாயக்கிழமை கால மானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான விசுவலிங்கம் செல்லாச்சி தம்பதியரின் அன்பு மகளும், காலஞ்சென்ற முருகேசு சுப்பையாவின் அன்பு மனைவியும், காலஞ் சென்றவர்களான மீனாட்சி, குமாரசாமி, விஜய காந்தன் ஆகியோரின் அன்புச் சகோதரியும் , பாஸ்கரன் (கனடா), காலஞ்சென்ற பிரபா கரன், திருமதி கலைவாணி, வசீகரன் (பிரான்ஸ்), கிருபாகரன் (ஆசிரியர்), ஆகி யோரின் பாசமிகு தாயும், கிருஷ்ணபாலன் (நீதிவான், நீதிமன்றம் யாழ்ப்பாணம்), மதி (கனடா), சிவறஞ்சனி (பிரான்ஸ்), யமுனா (ஆசிரியை) ஆகியோரின் அன்பு மாமியும், இராகுலன் (நீதிவான் நீதிமன்றம் , யாழ்ப்பாணம்), கிருத்திகா, சிந்துஜா (கனடா), அர்ச்சகன் (பிரான்ஸ்), ஆரணி (பிரான்ஸ்), அக்ஷியா (பிரான்ஸ்), கஜீ வன், அஸ்வின் ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கரியைகள் நாளை (18.10.2013) வெள்ளிக்கிழமை மு.ப. 11.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைகளுக்காக மூளாய் இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவு ம் .

மூளாய் மேற்கு,
சுழிபுரம் (கிருஷ்ணன் கோயில் றோட்)

தகவல்:
குடும்பத்தினர்.

# மரண அறிவித்தல்கள்

## அம்பலம் நவநீதராசா



நாவலடி உடுப்பிட்டியை பிறப் பிடமாகவும் வதிரியை வசிப் பிடமாகவும் கொண்ட அம்ப லம் நவநீதராசா நேற்று (16.10.2013) புதன்கிழமை காலமானார்.

அன்னார் புஸ்பமோகனா வின் அன்புக் கணவரும் நிரோஜனின் பாசமிகு தகப்ப னும் காலஞ்சென்ற அம்பலம் - பூமணியின் மகனும் இந் திராதேவி, சிவபாக்கியம், நவ யோகரத்தினம் (கனடா), நவகிருஷ்ணமோகன் (சுவிஸ்), நவமோகனராசா (கனடா), நவ யோகேஸ்வரி, இந்திரா காந்தி ஆகியோரின் அன்புச் சகோதரனும் கதிர்காமத்து லிங்கராசா, காலஞ்சென்ற தங்கராசா, மல்லிகா (கனடா), துஷ்யந்தி, தங்கராசா, தெய் வேந்திரம் ஆகியோரின் அன்பு மைத்துனரும் கோபிராஜ், கபில்ராஜ், கஜன்ராஜ், அர்ச் சனா, கயல்வாணி, நரேஷ், சுரேஷ், தர்சன், கௌசல்யா, கிரியன், யுவகாந்தன் ஆகி யோரின் மாமனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (17.10.2013) வியாழக் கிழமை அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பி.ப. 2 மணியள வில் தகனக் கிரியைக்காக வல்வை இந்து மயானத்துக்கு எடுத் துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனை வரும் ஏற்றுக்கொள்ளவும்.

தேவரையாளி,
அல்வாய் மேற்கு, அல்வாய்.

(சி13117)

தகவல்:
குடும்பத்தினர்.

## ஆறுமுகம் சிவப்பிரகாசம் (மாவடித்துறை)



மடத்தடி கிழக்கு வீதி, சாவகச்சேரி வடக்கு சாவகச்சேரியை வதிவிடமாகக் கொண்ட ஆறுமுகம் சிவப்பிரகாசம் நேற்றுமுன்தினம் (15.10.2013) செவ் வாய்க்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான ஆறுமுகம் - தங்கமுத்து தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான பொன்னுக்குட்டி - கற்பகம் தம்பதியரின் அன்பு மருமகனும், காலஞ்சென்ற சரஸ்வதியின் அன்புக் கணவரும், வேலாயுதபிள்ளை, லோகேஸ்வரி, மகாதேவா, கோடீஸ்வரன், லோகேஸ்வரன், காலஞ்சென்ற தியாகேஸ்வரி ஆகி-யோரின் அன்புச் சகோதரனும், ஜெயஸ்ரீ(கனடா), பாலஸ்ரீ (கனடா), இராஜஸ்ரீ (லண்டன்), விஜயஸ்ரீ (கணக்காய்வாளர், கிளிநொச்சி), வாணிஸ்ரீ (யா/ மீசாலை வீரசிங்கம் மத்திய கல்லூரி) ஆகியோரின் பாசமிகு தந்தையும், மணிவண்ணன் (கனடா), ரவீந்திர குமார் (கனடா), ஜெகதீஸ்வரன் (லண்டன்), பிறேமதாஸ் (பப்பி- மின் இணைப்பாளர்), தவராஜா (மக் கள் வங்கி கொடிகாமம்) ஆகியோரின் அன்பு மாமனும், தர்சன், தனுசன், பிரியதர்சினி, தேனுஜா, அபரிதா, சங்கவி, பார்க்கவி, மிதுஸா, தீபிகா, ஜீவிதன் ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கரியைகள் இன்று (17.10.2013) வியாழக்கிழமை பி.ப. 4.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைகளுக்காக சாவகச்சேரி கண்ணாடிப்பிட்டி இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

மடத்தடி கிழக்கு வீதி, சாவகச்சேரி வடக்கு,
சாவகச்சேரி.

தகவல்:
குடும்பத்தினர்.

# மரண அறிவித்தல்

## யோசேப்பு ஜேமிஸ் (மூப்பர்)



புதுக்குடியிருப்பு 9ஆம் வட்டாரத்தைப் பிறப்பிட மாகவும் யோசேப்பு ஜேமிஸ் (மூப்பர்) நேற்று (16.10.2013) புதன்கிழமை காலமானார்.

அன்னார் சூசானத்தின் அன்புக் கணவரும் அன் ரன் பிலிப், அஞ்சலம்மா, அல்வின், அருட்தந்தை சேகர் (OMI) ஆகியோரின் அன்புத் தந்தையும் ஆவார்.

அன்னாரின் நல்லடக்கம் இன்று (17.10.2013) வியாழக்கிழமை அவரின் இல்லத்திலிருந்து பி.ப. 3 மணிக்கு எடுத்து வரப்பட்டு புனித சூசையப்பர் தேவாலயத்தில் இரங்கல் திருப்பலி நிறைவேற்றி புதுக்குடியிருப்பு புனித சூசையப்பர் சேமக்காலை யில் நல்லடுக்கஞ் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர் கள் அனை வரும் ஏற்றுக்கொள்ளவும்.

லிபரா நூல் நிலையம்,
இல.87, அன்னை இல்லம், கிளிநொச்சி. 0774810124

(சி13115)

தகவல்:
அருட்தந்தை ஜேமில்
அல்போன்சேகர் (OMI)

# மரண அறிவித்தல்

## காசிப்பிள்ளை சின்னையா



மட்டுவிலைப் பிறப்பிடமாகவும் அரியாலையை வசிப்பிடமாகவும் கொண்ட காசிப்பிள்ளை சின்னையா நேற்று (16.10.2013) புதன்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற காசிப்பிள்ளை - பாக்கியம் தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்ற இராமு - பாக்கியம் தம்பதியரின் அன்பு மருமகனும், காலஞ்சென்ற கந்தசாமி, தவமணி, குணமணி, தவராசா ஆகியோரின் அன்புச் சகோதரனும், கிளி என்று அழைக்கப்படும் மரகதத்தின் அன்புக் கணவரும், சாந்தி, ராதாகிருஷணன், உருத்திராகிருஷ்ணன் ஆகியோரின் அன்புத் தந்தையும், உதயன், வதனி, மஞ்சுளா ஆகியோரின் அன்பு மாமனும், விக்னேஸ்வரன், சந்திரிக்கா, சந்துரு, காலஞ்சென்ற சீலன், ஜெகன், நூபினி, சுபேசன், த்திறிசாந்தன், டிலக்சன், சஜித்தன், ருசந்தன், துவாரகன், அபிஷா ஆகியோரின் அன்புப் பேரனும், கம்சிகாவின் அன்புப் பூட்டனும் ஆவார்.


அன்னாரின் இறுதிக்கரியைகள் இன்று (17.10.2013) வியாழக்கிழமை பி.ப. 3.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைகளுக்காக சித்துப்பாத்தி இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

021 2211155

தகவல்: குடும்பத்தினர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




யாழ்.மாவட்டக் கூட்டுறவுச் சபையின் புதிய அச்சகக் கட்டடம் கடந்த திங்கட்கிழமை திறந்து வைக்கப்பட்டது. யாழ்.மாவட்டக் கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர் வி.கே.அருந்தவநாதன் கட்டடத்தைத் திறந்து சம்பிரதாயபூர்வமாகப் பணியை ஆரம்பித்து வைத்தார். சபைச் செயலாளர் வேதவல்லி செல்வரெத்தினம், சபையின் உப தலைவர் எஸ்.இலகுநாதன் ஆகியோரும் இதில் கலந்துகொண்டனர்.

## சுகாதாரக் கண்காட்சியும் மருத்துவ முகாமும்

### தென்மராட்சியில் திங்களன்று

தென்மராட்சி, ஒக்.17
தென்மராட்சி கல்வி வலயத்தின் பாடசாலை சுகாதார மேம்பாட்டு செயற்றிட்டத்தின் கீழான சுகாதாரக் கண்காட்சியும் மருத்துவ சிகிச்சை முகாமும் சாவகச்சேரி இந்துக் கல்லூரியில் எதிர்வரும் 21 ஆம் திகதி காலை 8 மணி தொடக்கம் நடைபெறவுள்ளது.
இந்த நிகழ்வில் தெரிவு செய்யப்பட்ட 10 பாடசாலைகளிலிருந்து 200 மாணவர்கள், 100 பெற்றோர், 50 ஆசிரியர்கள், 50 பாடசாலை சுகாதாரக் கழகங்களின் பிரதி நிதிகள் என 400 பேர் கலந்து கொள்ளவுள்ளனர்.
சுகாதாரக் கண்காட்சியுடன் விழிப்புணர்வு செயற்பாடு, மருத்துவப் பரிசோதனை, அறிவூட்டல் நிகழ்வுகள் போன்றவை இடம்பெறும். தொற்றுநோய், போசாக்கு, மன நோய் சுகாதாரம், வாய்ச் சுகாதாரம், தொற்றுநோய், தினிநபர் சுகாதாரம், குடிதண்ணீர் சுகாதாரம், இனப்பெருக்கல் சுகாதாரம், வாழ்க்கைத் தேர்ச்சி, சுதேச மருத்துவம், மாதிரி சிற்றுண்டிச்சாலை போன்ற விடயங்கள் தொடர்பாகவும் தெளிவுபடுத்தல்கள் மேற்கொள்ளப்படும்.

*சாவகச்சேரி இந்துக் கல்லூரியில் எதிர்வரும் 21 ஆம் திகதி காலை 8 மணி தொடக்கம் நடைபெறவுள்ளது.*

இந்த செயற்றிட்டத்துக்கு சாவகச்சேரி இந்துக் கல்லூரி, மகளிர் கல்லூரி, டிறிபேர்க் கல்லூரி, நாவற்குழி ம.வி., கைதடி முத்துக்குமார சுவாமி ம.வி., கைதடி விக்னேஸ்வரா வித்தியாலயம், கைதடி நுணாவில் அ.த.க.பாடசாலை, மட்டுவில் அ.மி.த.க. வித்தியாலயம், மட்டுவில் சரஸ்வதி வித்தியாலயம், மட்டுவில் சந்திரபுரஸ்கந்தவரோதய ம.வி. ஆகியவை தெரிவு செய்யப்பட்டுள்ளன. குறித்த பாடசாலைகளிலிருந்து தலா 20 மாணவர்களும், 10 பெற்றோர், 5 ஆசிரியர்களும், 5 சுகாதார கழகப் பிரதி நிதிகளென தலா 20 பேர் வீதம் தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.
மாகாண கல்வித் திணைக்களமும் சுகாதார கல்வி அமைச்சும் இணைந்து வடமாகாணத்தில் கோட்ட ரீதியாக இந்தச் செயற்றிட்டத்தை முன்னெடுக்க ஏற்பாடுகளை மேற்கொண்டுள்ளன. இந்நிகழ்வில் பல்வேறு மருத்துவ நிபுணர்கள் கலந்து கொள்ளவுள்ளனர் என்றும் தெரிவிக்கப்பட்டது. (வ-9)

## ஆயுள்வேத வைத்தியசாலைக்கு நல்லூரில் நடப்பட்டது அடிக்கல்



யாழ்ப்பாணம், ஒக்.17
நல்லூர் பிரதேச சபையின் புதிய ஆயுள்வேத வைத்தியசாலைக்கான அடிக்கல் திங்கட்கிழமை கோண்டாவில் பகுதியில் உள்ள நல்லூர் பிரதேச சபைக் காணியில் நடப்பட்டது. பிரதேச சபைத் தலைவர் ப.வசந்தகுமார் இந்த அடிக்கல்லை நட்டார்.
இந்த நிகழ்வில் பிரதேச சபை உறுப்பினர்கள், ஊழியர்கள் கலந்து கொண்டனர்.
4 மில்லியன் ரூபா செலவில் அமைக்கப்படவுள்ள, புதிய கட்டடத்தின் பணிகள் மூன்று மாதத்தில் நிறைவடையும் என்று தெரிவிக்கப்பட்டது. (வ-7)

## உருளைக் கிழங்குச் செய்கையை மேம்படுத்த சமாசம் உருவாக்கம்

அச்சுவேலி, ஒக்.17
யாழ்.மாவட்டத்தில் உருளைக் கிழங்குப் பயிர்ச் செய்கையை மேம்படுத்தும் நோக்கில் உருளைக்கிழங்கு செய்கையாளர் கூட்டுறவுச் சங்கங்களின் சமாசம் உருவாக்கப்பட்டுள்ளது.
கோப்பாய் பிரதேச செயலர் பிரிவு, உடுவில் பிரதேச செயலர் பிரிவு, தெல்லிப்பழை பிரதேச செயலர் பிரிவு என்பவற்றில் உருளைக் கிழங்கு செய்கையாளர் கூட்டுறவுச் சங்கங்கள் உருவாக்கப்பட்டு கூட்டுறவுத் திணைக்களத்தில் பதிவு செய்யப்பட்டுள்ளன.
பிரதேச செயலர் பிரிவுகள் தோறும் செயற்பட்டுவரும் இந்த உருளைக்கிழங்கு செய்கையாளர் கூட்டுறவுச் சங்கங்களை ஒருங்கிணைத்து யாழ்.மாவட்ட உருளைக் கிழங்குச் செய்கையாளர்களின் சமாசம் உருவாக்கப்பட்டுள்ளது. சமாசத்தின் ஆரம்பக் கூட்டம் யாழ்.மாவட்ட விவசாயத் திணைக்களத்தில் கடந்த வெள்ளிக்கிழமை நடைபெற்றது. சமாசத்தை பதிவு செய்யப்பட்ட பின்னர் சமாசத்துக்கு பதிவு இலக்கம் வழங்கப்பட உள்ளதாக யாழ்.மாவட்ட கூட்டுறவு உதவி ஆணையாளர் தெரிவித்தார். (வ-11)

# மீசாலைப் பகுதிகளில் கொள்ளையர் அட்டகாசம்

### அச்சத்துடன் விழித்திருக்கும் மக்கள்

தென்மராட்சி, ஒக்.17
மீசாலை மேற்கு, மீசாலை வடக்கு, வேம்பிராய் ஆகிய பகுதிகளில் அண்மைக் காலமாக கொள்ளையர்களின் அட்டகாசம் அதிகரித்துள்ளதால் இரவுவேளைகளில்தாம்விழித்திருக்க வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளதாக அந்தப் பகுதி மக்கள் தெரிவிக்கின்றனர்.
இரவு வேளைகளில் திருடர்கள் 'டோர்ச்' மூலம் வெளிச்சத்தில் வேவு பார்த்துச் சென்றுவிட்டு நள்ளிரவு வேளைகளில் வீடுகளுக்குள் புகுந்து தங்களது கைவரிசையைக் காட்டி வருவதாகத் தெரிவிக்கப்படுகிறது.
மீசாலை மேற்கில் உள்ள வீடொன்றினுள் ஞாயிறு இரவு புகுந்தகொள்ளையர்கள் வீட்டின் வெளியே பொருத்தப்பட்டிருந்த மின் விளக்குகளை கழற்றி எடுத்து விட்டு வீட்டினுள் புகுந்து அங்கிருந்தவர்களை தாக்கி அறையொன்றில் அடைத்து வைத்துவிட்டு சங்கிலி, மோதிரம், காப்பு ஆகியவற்றை அபகரித்துச் சென்றுள்ளனர்.
கடந்த வியாழக்கிழமை மீசாலை வடக்கில் உள்ள கடையொன்றில் புகுந்த திருடர்கள் அங்கிருந்து ஒரு லட்சம் ரூபா பெறுமதியான பொருள்களைத் திருடிச் சென்றுள்ளனர்.
சனிக்கிழமை மீசாலை வடக்கு, வேம்பிராய் ஆகிய இடங்களில் திருடர் கோஷ்டியொன்று திருட்டு முயற்சியில் ஈடுபட்டதாகவும் வீட்டுக்காரர்கள் விழித்துக் கொண்டதால் தப்பி யோடியதாகவும் தெரிவிக்கப்பட்டது.
இவை தொடர்பாக பொலிஸ் நிலையத்தில் முறைப் பாடு செய்யப்பட்டதும் மோப்ப நாய்களுடன் வரும் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்ட போதும் இதுவரை எவரும்கைதாகவில்லை. (வ-9)



சுகாதார அமைச்சர் சத்தியலிங்கம், கல்வி அமைச்சர் குருகுலராஜா மற்றும் பொருளாதார அமைச்சர் ஐங்கரநேசன் ஆகியோர் தமது அமைச்சுப் பதவிகளை பொறுப்பேற்ற பின்னர் அவர்களை யாழ்.மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் ஈ.சரவணபவன் நேரில் சந்தித்து தனது வாழ்த்துக்களைத் தெரிவித்தார். (வ)

# கிராமப்புற வைத்தியசாலைகளில் மருத்துவர் பற்றாக்குறை

### வடக்கு சுகாதார அமைச்சின் செயலர் கருத்து

யாழ்ப்பாணம், ஒக்.17
வடமாகாணத்தில் 615 மருத்துவர்களும் 45 மருத்துவ நிபுணர்களும் கடமையில் உள்ள போதும் கிராமப்புற வைத்தியசாலைகளில் தொடர்ந்தும் மருத்துவர்களுக்கு பற்றாக்குறை நிலவி வருகின்றது.
இவ்வாறு வடமாகாண சுகாதார அமைச்சின் செயலாளர் இரவீந்திரன் தெரிவித்தார்.
வடமாகாண சபையின் சுகாதார, சுதேச மருத்துவத் துறை அமைச்சரின் கடமைகளைப் பொறுப்பேற்கும் நிகழ்வு திங்கட்கிழமை பண்ணையில் உள்ள அமைச்சுப் பணிமனையில் இடம்பெற்றது. இதில் தலைமையுரை நிகழ்த்தும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.
தொடர்ந்து அவர் தெரிவித்ததாவது:
வடமாகாண சபைத் தேர்தலின் போது தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு அமோக வெற்றி பெற்று 4 அமைச்சு அதிகாரங்களையும் பெற்றுள்ளது. அந்த வகையில் சுகாதாரத் திணைக்களத்துடன் தொடர்புடைய வைத்தி யக் கலாநிதி சுகாதார, சுதேச மருத்துவத்துறை அமைச்சராகப் பொறுப்பேற்றுள்ளார்.
சுகாதாரத் திணைக்களத்தைப் பொறுத்தவரையில் சுகாதாரம், சுதேச மருத்தவம் என 2 திணைக்களங்கள் உள்ளன. அத்துடன் வடமாகாணத்தில் கிட்டத்தட்ட 100 வைத்தியசாலைகள் உள்ள நிலையில் மத்திய அரசின் நிர்வாகத்தின் கீழ் யாழ். போதனா வைத்தியசாலையும் மாகாணநிர்வாக அமைச்சின் கீழ் ஏனைய 99 வைத்தியசாலைகளும் உள்ளன.
2009 ஆம் ஆண்டு தொடக்கம் சகல வைத்தியசாலைகளினதும் அபிவிருத்திக்காக 5300 மில்லியன் ரூபா நிதி பயன்படுத்தப்பட்டுள்ளது. சகல வைத்தியசாலைகளிலும் அபிவிருத்திகள் மேற்கொள்ளப்பட்டாலும் இன்னமும் பல அபிவிருத்திகள் மேற்கொள்ளப்பட வேண்டிய தேவையுள்ளது.
இதனை மாகாண சபை அமைச்சு பொறுப்பேற்று முக்கிய அபிவிருத்திகளை மேற்கொள்ள வேண்டும். அவர்களுக்கான பூரண ஒத்துழைப்பை நாம் வழங்குவோம். இதனை மக்களுக்கான சேவையாக நினைத்துச் செயற்படுத்த வேண்டும்.
யாழ்ப்பாணத்தில் உள்ள 4 ஆதார வைத்தியசாலைகளில் 3 வைத்தியசாலைகள் ஓரளவுக்கு அபிவிருத்தி செய்யப்பட்டாலும் ஊர்காவற்றுறை ஆதார வைத்தியசாலையை அபிவிருத்தி செய்ய பல முயற்சிகள் முன்னெடுக்கப்பட்ட போதும் அம்முயற்சி கைகூடவில்லை.
அதனை அபிவிருத்தி செய்ய வேண்டிய தேவையுள்ளது.
அத்துடன் மாவட்ட ரீதியாக உள்ள 4 வைத்திய சாலைகளில் மன்னார் வைத் திய சாலையை அபிவிருத்தி செய்ய வேண்டிய தேவையுள்ளது.
முன்னெடுக்கப்பட்ட அபிவிருத்தி வேலைத்திட்டங்கள் சீன அரசின் நிதி உதவியுடனும் உலக வங்கியின் நிதி உதவியுடனும் மேற்கொள்ளப்பட்டன.
இவற்றைவிட 2009 ஆம் ஆண்டு காலப்பகுதியில் 162 மருத்துவர்களும் விசேட மருத்துவ நிபுணர்களும் கடமையில் இருந்த நிலையில் தற்போது 615 மருத்துவர்களும் 49 மருத்துவ நிபுணர்களும் கடமையில் உள்ளனர்.
எனினும் கிராமப்புற வைத்தியசாலைகளில் மருத்துவர் பற்றாக்குறை தொடர்ந்தும் இருந்தே வருகிறது. ஒப்பந்த அடிப்படையில் வயது முதிர்ந்த மருத்துவர்களும் கடமையில் உள்ளனர்.
யாழ்ப்பாணத்தில் 28 பேர் ஒப்பந்த அடிப்படையிலும் ஏனைய இடங்களில் 4 பேரும் என 32 பேர் ஒப்பந்த அடிப்படையில் மருத்துவர்களாக உள்ளனர்.
அத்துடன் இடமாற்ற அடிப்படையில் யாழ்.மாவட்டத்துக்கு 44பேர் கிடைக்கப் பெற்றுள்ளனர்.
எனவே சுகாதாரத்துறையில் நிலவும் குறைபாடுகளை அமைச்சரவை முன்னின்று நிவர்த்தி செய்யவேண்டும்- என்றார். (வ-14-10)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழக மீனவர் பிரச்சினையில் இந்திய மத்திய அரசு பாரபட்சம்

## குற்றஞ்சாட்டுகின்றார் தமிழக முதலமைச்சர்



மீனவர்கள் பிரச்சினை தொடர்பில் தமிழக முதலமைச்சர் தொடர்ச்சியாக இந்தியப் பிரதமருக்கு கடிதங்களை அனுப்பி வருகின்றபோதும், இதுவரை காத்திரமான நடவடிக்கை எதுவும் இந்திய மத்திய அரசால் எடுக்கப்படவில்லை. இந்தப் பிரச்சினை தொடர்பாக தமிழக முதலமைச்சர் எழுதும் 30ஆவது கடிதம் இதுவாகும்.

சென்னை, ஒக்.17

தமிழக மீனவர் பிரச்சினையில் இந்திய மத்திய அரசு பாரபட்சம் காட்டுகின்றது என்று குற்றஞ்சாட்டியுள்ளார் தமிழக முதலமைச்சர் செல்வி ஜெயலலிதா.

இந்த விடயம் தொடர்பாக இந்தியப் பிரதமர் மன்மோகன் சிங்குக்கு எழுதியுள்ள கடிதத்திலேயே இவ்வாறு சுட்டிக் காட்டியுள்ளார் தமிழக முதலமைச்சர்.

அந்தக் கடிதத்தில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளதாவது:

"இலங்கைச் சிறையில் தடுத்து வைக்கப்பட்டுள்ள தமிழக மீனவர்களை விடுவிப்பதற்கு இந்திய மத்திய அரசு நடவடிக்கைகள் எடுக்க வேண்டும். அந்த விடயத்தில் மத்திய அரசு அக்கறையின்றிச் செயற்படுகின்றது என்று கருதுகின்றனர் தமிழக மக்கள். தமிழக மீனவர்கள் மீது இலங்கைக் கடற்படை தொடர்ச்சியாகத் தாக்குதல் மேற்கொண்டுவரும் நிலையில், அதுகுறித்து மத்திய அரசு எதுவித ஆக்கபூர்வ நடவடிக்கைகளையோ அல்லது அது குறித்து இலங்கை அரசைக் கண்டிப்பதற்கான நடவடிக்கைகளையோ மேற்கொள்ளவில்லை.

அதேவேளை, அண்மையில் ஆழ்கடலில் மீன்பிடித்துக் கொண்டிருந்த குஜாரத் மீனவர்கள் மீது பாகிஸ்தான் கடற்படை துப்பாக்கிச் சூடு நடத்தியுள்ளது. மீனவர்களும் பாகிஸ்தான் கடற்படையால் கைது செய்யப்பட்டுள்ளனர். அந்த விடயத்தில் விரைந்து நடவடிக்கை எடுத்த மத்திய அரசு, பாகிஸ்தான் தூதரை அழைத்துக் கடுந் தொனியில் எச்சரித்துள்ளது. குஜாரத் மீனவர்கள் தொடர்பில் விரைந்து நடவடிக்கை எடுத்துள்ள மத்திய அரசு, தமிழக மீனவர்கள் தொடர்பில் எதுவித நடவடிக்கைகளையும் எடுக்காதிருப்பது தமிழர்களின் மனங்களில் கொந்தளிப்பை ஏற்படுத்தியுள்ளது." என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (ற)

## மீனவர் பிரச்சினைக்கு தமிழக அரசே காரணம்

### மத்திய அமைச்சர் நாராயணசாமி குற்றச்சாட்டு



ராமேஸ்வரம், ஒக்.17

தமிழக மீனவர்களின் பிரச்சினை நீடிப்பதற்குத் தமிழக அரசே காரணம் என்று இந்திய மத்திய அமைச்சர் நாராயணசாமி குற்றஞ்சாட்டியுள்ளார்.

இதுகுறித்து அவர் கூறும்போது.

"இலங்கைக் கடற்படையினரால் தமிழக மீனவர்கள் தாக்கப்படுவது நீண்டகாலமாக நடைபெறுகின்றது. அதற்குக் காரணம் தமிழக மீனவர்கள் எல்லைதாண்டி மீன்பிடிப்பதுதான் என்று இலங்கை அரசு கூறுகின்றது. ஆனால் மீனவர்கள் அதை மறுக்கின்றார்கள். இலங்கைக்குப் பயணம் மேற்கொண்டிருந்த இந்திய வெளியுறவுச் செயலர் சல்மான் குர்ஷித் இதுகுறித்து இலங்கை அமைச்சர்களுடன் விரிவாக ஆராய்ந்துள்ளார். மீன்பிடி எல்லை தொடர்பாக கலந்துரையாடி ஒப்பந்தம் ஒன்றை மேற்கொள்ள வேண்டும் என்றும் வலியுறுத்தியுள்ளார். இதுவரை இவ்வாறான ஏற்பாட்டுக்கு மறுப்புத் தெரிவித்து வந்த இலங்கை அரசு தற்போது அதற்கு ஒப்புக்கொண்டுள்ளது. அதேவேளை, இருநாட்டு மீனவர்களுக்கும் இடையே சந்திப்பொன்றை மேற்கொள்ள ஏற்பாடுகளை மேற்கொள்ள வேண்டும் என்று தமிழக அரசிடம் நாம் கோரியிருந்தோம். அந்த விடயம் குறித்து தமிழக அரசுக்கு இரு தடவைகள் கடிதங்கள் அனுப்பப்பட்டுள்ளன. எனினும் அவற்றுக்கு தமிழக அரசால் இதுவரை தகுந்த பதில் வழங்கப்படவில்லை.

கடந்த மாதம் பிரதமருக்குக் கடிதம் எழுதியுள்ள தமிழக முதலமைச்சர் எதிர்வரும் டிசெம்பர் மாதம் பேச்சுக்களுக்கான ஏற்பாடுகளை மேற்கொள்ள முடியும் என்று தெரிவித்துள்ளார். அதுவரை இவ்வாறான பிரச்சினைகள் ஏற்படாமல் இருக்கும் என்பதில் நாம் உறுதிகூற முடியாது. இருநாட்டு மீனவர்களும் விரைவாகக் கலந்துரையாடுவதே பிரச்சினைக்குத் தீர்வாக அமையும்" என்று தெரிவித்துள்ளார். (ற)

## கூடங்குளம் அணு உலைக்கு மிரட்டல்

சென்னை, ஒக்.17

கூடங்குளம் அணுஉலைக்கு வெடிகுண்டு மிரட்டல் விடுக்கப்பட்டுள்ளதை அடுத்து அங்கு பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டுள்ளது.

கேரள நக்சல் அமைப்பு ஒன்று இந்தத் தாக்குதலை நடத்தத் திட்டமிட்டுள்ளது என்று உளவுத்துறை விடுத்த எச்சரிக்கையை அடுத்தே, இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

அணு உலையைச்சுற்றி துப்பாக்கி ஏந்திய பொலிஸார் பாதுகாப்புப் பணியில் ஈடுபட்டுள்ளனர்.

அணு உலையை அண்மித்த கடற்பகுதியில் 500க்கும் மேற்பட்ட பொலிஸார் படகு மூலம் பாதுகாப்பு பணியில் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர் என்று மாவட்ட பொலிஸ் கண்காணிப்பாளர் விஜயேந்திர பிதாரி தெரிவித்துள்ளார்.(ற)

# தமிழக மீனவர்களிடம் பாகுபாடு காட்டவில்லை

### ஜி.கே.வாசன் கூறுகின்றார்



சென்னை, ஒக்.17

இந்திய மத்திய அரசு தமிழக மீனவர்கள், குஜராத் மீனவர்கள் என்று யாரையும் பாகுபாடு பார்த்துச் செயற்படவில்லை என்று தெரிவித்துள்ளார் மத்திய அமைச்சர் ஜி.கே.வாசன்.

நேற்றுச் சென்னை விமான நிலையத்தில் ஊடகவியலாளர்களுக்குக் கருத்துத் தெரிவிக்கும்போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

இதுகுறித்து அவர் மேலும் தெரிவித்ததாவது:

"தமிழக மீனவர்கள் இலங்கைக் கடற்படையால் தாக்கப்படுவது கண்டனத்துக்குரியது. இலங்கைச் சிறையில் உள்ள மீனவர்களை மீட்க மத்திய அரசு உரிய நடவடிக்கை எடுக்கும். தமிழக மீனவர்கள், குஜ ராத் மீனவர்கள் என்று மத் திய அரசு யாரையும் பாகுபாடு பார்க்கவில்லை." என்றார்.

தூத்துக்குடி கடலில் கைது செய்யப்பட்டுள்ள அமெரிக்கக் கப்பல் குறித்துக் கருத்துத் தெரிவித்த அவர், "அதுகுறித்த முழுமையான விவரங்கள் இதுவரை தெரியவில்லை. துறைசார்ந்த அதிகாரிகள் அது குறித்து விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்" என்றார். (ற)

## மோடி என்கின்ற நீர்க்குமிழி விரைவில் வெடித்துவிடும்

நரேந்திர மோடி என்ற நீர்க்குமிழி விரைவில் வெடித்து விடும் என்று கூறியுள்ளார் மத்திய சட்டத் துறை அமைச்சர் கபில் சிபல்.

இதுகுறித்து அவர் மேலும் கூறும்போது,


"இயற்கையிலேயே ஒன்று வேகமாக உயரும் போது அது நிச்சயம் வீழ்ந்தே ஆக வேண்டும். எவ்வளவு வேகமாக உயருகிறதோ அவ்வளவு வேகமாக வீழ்வதே இயற்கை. அனைத்து நீர்க்குமிழிகளும் நிச்சயம் வெடித்தே ஆகும். அதேப்போல தான் நரேந்திர மோடியும். மோடி என்ற நீர்க்குமிழியும் விரைவில் வெடித்து விடும்" என்று தெரிவித்துள்ளார். (ற)

## இந்தியா -பாக். எல்லையில் மோதல்: ஒருவர் சாவு

புதுடில்லி, ஒக்.17

இந்தியா - பாகிஸ்தான் எல்லைப் பகுதியில் இந்திய இராணுவத்தின் மீது நடத்தப்பட்ட துப்பாக்கிப் பிரயோகத்தில் இந்திய இராணுவத்தைச் சேர்ந்த ஒருவர் உயிரிழந்துள்ளார். ஆறு பேர் காயமடைந்துள்ளனர்.

ஜம்மு காஷ்மீர் மாநிலத்தின் பூஞ்ச் மாவட்டத்தில் உள்ள பாலகாட் பகுதியில் இந்தத் தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது. குறித்த தாக்குதல் பலமணி நேரம் நடந்தது என்றும், இந்தியத் தரப்பிலும் பதிலடி கொடுக்கப்பட்டது என்றும் கூறப்படுகின்றது. (ற)



பக்ரீத் திருநாள்: தொழுகையில் ஈடுபட்டிருக்கும் முஸ்லிம் மக்கள் - ஜும்மா பள்ளிவாசல், புதுடில்லி.

**நிலக்கரி ஊழல்**

## பிரதமர்தான் குற்றவாளி

புதுடில்லி, ஒக்.17

"நிலக்கரிச் சுரங்க முறைகேடு தொடர்பானவழக்கில்நான்எந்தத் தவறும் செய்யவில்லை. என் மீது தவறு இருப்பதாக சி.பி.ஐ. கருதினால், அவற்றுக்கு ஒப்புதல் அளித்த இந்தியப் பிரதமர் மீதும் வழக்குப் பதிவு செய்ய வேண்டும்" என்று கூறியுள்ளார் நிலக்கரித் துறையின் முன்னாள் செயலாளர் பி.சி. பரேக்.

இதுகுறித்து மேலும் கூறியுள்ள பி.சி.பரேக், "குறித்த விடயத்தில் அனைத்தும் பிரதமர் ஒப்புதலுடனேயே மேற்கொள்ளப்பட்டன. அவற்றில் தவறுகள் இருப்பதாக சி.பி.ஐ. கருதினால், முதலாவது குற்றவாளியாக இந்தியப் பிரதமரையே கருத வேண்டும். அவரையே விசாரணை செய்ய வேண்டும்" என்று தெரிவித்துள்ளார்.

இதுகுறித்துக் கருத்துத் தெரிவித்துள்ள பா.ஜ.க.,

"பிரதமருக்கும், அவரது அலுவலகத்துக்கும் தெரியாமல் எதுவும் நடைபெற்றிருக்க வாய்ப்பில்லை. நிலக்கரிச் சுரங்க ஒதுக்கீட்டில் ஊழல் நடைபெற்றதாகக் கூறப்படும் காலத்தில் அந்தத் துறை பிரதமர் மன்மோகன் சிங் வசமே இருந்தது. அவரை விசாரிக்காமல், உண்மையை வெளிக்கொண்டு வர இயலாது" என்று தெரிவித்துள்ளது. (ற)

# வெளியே வருகின்றது இந்திய கறுப்புப் பண விவரம்

## ஒப்புக்கொண்டது சுவிட்ஸர்லாந்து: பொருளாதார ஒத்துழைப்பு அமைப்புக்கு வெற்றி

புதுடில்லி, ஒக்.17

சுவிஸ் வங்கிகளில் முடக்கப்பட்டுள்ள இந்திய கறுப்புப் பணம் தொடர்பான விவரங்களை பகிர்ந்து கொள்வதற்கு சுவிஸ் முன்வந்துள்ளது.

வரி தொடர்பான விடயங்களில் பரஸ்பரம் உதவும் வகையில் தகவல்களைப் பகிர்ந்து கொள்ளும் ஒப்பந்தத்தில், சுவிஸர்லாந்து நேற்றுமுன்தினம் கையெழுத்திட்டதை அடுத்தே இந்த முடிவு எடுக்கப்பட்டுள்ளது.

அதையடுத்து, அந்நாட்டு வங்கிகளில் பதுக்கி வைக்கப்பட்டுள்ள இந்தியர்களின் கறுப்புப் பணம் தொடர்பான விவரங்கள் விரைவில் வெளியாகவுள்ளன.

சர்வதேச அளவில் நடக்கும் வரி ஏய்ப்புகளையும் சட்டவிரோத பணப் பரிமாற்றங்களையும் எதிர்த்து பொருளாதார ஒத்துழைப்பு மற்றும் வளர்ச்சிக்கான அமைப்பு போராடி வருகிறது. அந்த அமைப்பின் வரி ஏய்ப்புக்கு எதிரான நடவடிக்கைகளுக்கு ஒத்துழைப்புத் தருவதற்கான ஒப்பந்தத்தில், இந்தியா உட்பட 58க்கும் மேற்பட்ட நாடுகள் கையெழுத்திட்டுள்ள நிலையில் இப்போது சுவிட்ஸர்லாந்தும் கையெழுத்திட்டுள்ளது. (ற)

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

## எகிப்து வன்முறைகள் குறித்து விரிவான விசாரணை தேவை

### வலியுறுத்துகின்றது மன்னிப்புச் சபை

கெய்ரோ, ஒக்.17
எகிப்தில் ஆர்ப்பாட்டம் மேற்கொண்டவர்கள் மீது பொலிஸார் தாக்குதல் நடத்தியமை தொடர்பாக பாரபட்சமற்ற விசாரணைகள் நடத்தப்பட வேண்டும் என்று சர்வதேச மன்னிப்புச் சபை வலியுறுத்தியுள்ளது.
எகிப்தில் முன்னாள் ஜனாதிபதி முகமது முர்ஸிக்கு எதிராக மக்கள் போராட்டத்தில் ஈடுபட்டனர். அதையடுத்து அவருடைய பதவி ஜூலை 3ஆம் திகதி பறிக்கப்பட்டது.
அதன்பின் தாற்காலிக ஜனாதிபதியாக உயர்நீதிமன்ற தலைமை நீதிபதி அத்லி மன் சூர் நியமிக்கப்பட்டார். அதற்கு எதிர்ப்புத் தெரிவித்து முகமது முர்ஸியின் ஆதரவாளர்கள் ஒக்ரோபர் 6ஆம் திகதி போராட்டத்தில் ஈடுபட்டனர். போராட்டத்தில் ஈடுபட்டவர்களை விரட்டுவதற்காக பொலிஸார் தாக்குதல் நடத்தியதில் பலர் உயிரிழந்தனர். (ற)



பிலிப்பைன்ஸின் மத்திய பகுதியில் கடந்த செவ்வாய்க்கிழமை ஏற்பட்ட நிலநடுக்கத்தில் உயிரிழந்தவர்களின் எண்ணிக்கை 102 ஆக அதிகரித்துள்ளது. ரிச்டர் அளவுகோலில் 7.2 அலகுகளாகப் பதிவான அந்த நிலநடுக்கத்தில் ஏராளமானவர்கள் படுகாயங்க ளுக்கு உள்ளாகியுள்ளதால் உயிரிழப்புகள் மேலும் அதிகரிக்கலாம் என்று அஞ்சப்படுகின்றது.

## ஜப்பானில் சூறாவளி

### 13 பேர் சாவு; 50 பேர் மாயம்



டோக்கியோ, ஒக்.17
ஜப்பானைத் தாக்கிய சக்தி வாய்ந்த சூறாவளியால் 13 பேர் உயிரிழந்துள்ளனர். 50க்கும் அதிகமானோர் காணாமற் போயுள்ளனர்.
'விப்ஹா' என்ற பெயரிடப்பட்டுள்ள இந்தச் சூறாவளி பல இடங்களில் கடும் சேதம் விளைவித்துள்ளது.
மீட்புப் பணிகள் நடைபெற்றுக் கொண்டிருக்கும் நிலையில் உயிரிழப்புகள் வெகுவாக அதிகரிக்கக் கூடும் என்று கூறப்படுகின்றது. சூறாவளியை அடுத்து பெய்துவரும் கடும் மழையால் மண்சரிவு களும் ஏற்பட்டுள்ளன என்று மீட்புக் குழுவினர் கூறுகின்றனர்.
சுறாவளியால் பாதிக்கப்பட்டுள்ள பகுதிகளில் மின்சாரம், போக்குவரத்து என்பன துண்டிக்கப்பட்டுள்ளன. அதனால் மீட்புப் பணிகளில் தொய்வு நிலை காணப்படுகின்றது என்று அங்கிருந்து கிடைக்கும் தகவல்கள் தெரிவிக்கின்றன. (ற)

விப்ஹா சூறாவளியால் புகுஷிமா அணு உலை அமைந்துள்ள பகுதியும் கடுமையாகப் பாதிக்கப்பட்டுள்ளது. ஆனால் சூறாவளியால் அணு உலையில் ஏற்பட்ட பாதிப்புகள் குறித்து தகவல் எதுவும் வெளியாகவில்லை. எனினும் முன்னதாக சூறாவளி தாக்கும் பட்சத்தில் அணுக் கதிர்வீச்சுடன் கூடிய நீர் வெளியேறும் அபாயம் காணப்படுகின்றது என்று அணுஉலையை நிர்வகிக்கும் நிறுவனம் அச்சம் வெளியிட்டிருந்தது.

## நல்லுறவுக்கு முதற்படி

### இந்தியப் பிரதமரின் வரவு குறித்து சீனா

**1954 ஆம் ஆண்டுக்குப் பின்னர் இரு நாடுகளின் முக்கிய தலைவர்கள் ஓராண்டுக்குள் பரஸ்பர பயணம் மேற்கொள்வது இதுவே முதல் முறை.**

பீஜிங், ஒக்.17
இந்தியப் பிரதமர் மன்மோகன் சிங்கின் சீனப் பயணம் இரு நாடுகளுக்கும் இடையிலான நல்லுறவின் முதற்படியாக அமையும் என்று தெரிவித்துள்ளது சீனா.
இந்தியப் பிரதமர் மன்மோகன் சிங் எதிர்வரும் 22 ஆம் திகதி முதல் 24 ஆம் திகதி வரை சீனாவுக்குப் பயணம் மேற்கொள்ளவுள்ளார்.
இதுகுறித்துக் கருத்து வெளியிட்டுள்ள சீன வெளியுறவு அமைச்சகத்தின் செய்தித் தொடர்பாளர் 'ஹுவாட்சுன் யிங்,
"இந்தியப் பிரமரின் சீனப் பயணம் இரு நாடுகளுக்கும் இடையே நல்லுறவை வளர்ப்பதற்கு உதவும். சீனாவும் இந்தியாவும் வளரும் நாடுகளில் மிகப் பெரிய நாடுகளாக விளங்குகின்றன. இரு நாட்டு உறவு என்பது வரலாற்றுப் பின்னணி கொண்டது." என்று தெரிவித்துள்ளார்.
1954 ஆம் ஆண்டுக்குப் பின்னர் இரு நாடுகளின் முக்கிய தலைவர்கள் ஓராண்டுக்குள் பரஸ்பர பயணம் மேற்கொள்வது இதுவே முதல் முறையாகும். (ற)

## வியட்நாமில் புயல் தாக்கம் 5 பேர் சாவு



ஹனோய், ஒக்.17
வியட்நாமின் மத்திய பகுதியில் நேற்றுமுன்தினம் ஏற்பட்ட கடும் புயலால் 5 பேர் உயிரிழந்துள்ளனர். பலர் காயங்களுக்கு உள்ளாகியுள்ளனர்.
மணிக்கு 133 கி.மீ. வேகத்தில் வீசிய புயலைத் தொடர்ந்து அங்கு கடும் மழை பெய்து வருகின்றது. சாலைகள் அனைத்தும் வெள்ளத்தில் மூழ்கியுள்ளன. அதனால் மீட்புக் குழுவினர் கடும் சிரமங்களை எதிர் கொண்டு வருகின்றனர் என்று கூறப்படுகின்றது.
இதுகுறித்துக் கருத்துத் தெரிவித்துள்ள வியட்நாம் தேசிய பேரிடர்த் துறை அதிகாரிகள், "கடலோரப் பகுதிகளில் உள்ள ஒரு லட்சத்து 20 ஆயிரம் பேர் பாதுகாப்பான இடங்களில் தங்க வைக்கப்பட்டுள்ளனர்" என்று தெரிவித்துள்ளனர்.
கடந்த மாதம் வியட்நாமில் ஏற்பட்ட புயலில் 2 லட்சம் வீடுகள் சேதமடைந்தன. பலர் உயிரிழந்தனர். செப்ரெம்பர் மாத ஆரம்பத்தில் இருந்து இதுவரை வியட்நாமில் வெள்ளப் பாதிப்புக்கு 40 பேர் உயிரிழந்துள்ளனர் என்று கூறப்படுகின்றது. (ற)

## பிடிக்க முடியாத மின்னஞ்சல்

### ஆரம்பிக்கின்றது பிரேஸில்



டில்மா ரூல்ஸப்

நியூயோர்க், ஒக்.17
அமெரிக்கா மற்றும் பிரிட்டன் ஆகிய நாடுகள் மின்னஞ்சல் தகவல்களை உளவு பார்க்கின்றன என்று வெளியாகியுள்ள தகவல்களை அடுத்து புதிய மின்னஞ்சல் சேவையைத் ஆரம்பிப்பதற்கு பிரேஸில் அரசு திட்டமிட்டுள்ளது.
புதிதாக ஆரம்பிக்கப்படவுள்ள மின்னஞ்சல் சேவை உளவு பார்க்க முடியாத பாதுகாப்பு ஏற்பாடுகளுடன் ஆரம்பிக்கப் படும் என்றும் பிரேஸில் அரசு அறிவித்துள்ளது.
இந்தத் தகவல்களை உறுதி செய்துள்ள அந்நாட்டு ஜனாதிபதி டில்மா ரூல்ஸப், அரசின் இணையப் பாதுகாப்புப் பிரிவு குறித்த மின்னஞ்சல் திட்டத்தை ஆரம்பிக்கும் முயற்சிகளில் ஈடுபட்டுள்ளது என்று தெரிவித்துள்ளார். (ற)

## பட்டினியால் தவிக்கும் மக்கள்; உணவாக மாறும் நாய், பூனை!

### சிரியாவில் பெரும் அவலம்

டமாஸ்கஸ், ஒக்.17
சிரிய உள்நாட்டுப் போர் உக்கிரமடைந்துள்ள நிலையில் அங்குள்ள மக்கள் பெரும் உணவுப் பற்றாக்குறையை எதிர் நோக்கியுள்ளனர். கடும் மோதல்கள் காரணமாக வீடுகளை விட்டு வெளியே வர முடியாத நிலையில் மக்கள் உள்ளனர். அதையடுத்து அங்குள்ள முஸ் லிம் மதகுருமார் மக்களின் பசியைப் போக்குவதற்காகப் புதிய உத்தரவொன்றைப் பிறப்பித்துள்ளனர்.
"பசியால் தவிக்கும் நீங்கள் பூனை, நாய், கழுதைகள் என்பவற்றை உண்டு உங்கள் பசியைப் போக்கிக் கொள்ளுங்கள்' என்பது தான் அந்த உத்தரவு. அதையடுத்து வேறுவழியில்லாத நிலையில் மக்கள் அவற்றை உணவாக்கிக் கொள்ளத் தொடங்கியுள்ளனர். தமது இருப்பிடங்களுக்கு அருகே உள்ள விவசாய நிலங்களுக்குச் சென்று அங்குள்ள விலங்குகளை பிடிக்கும் முயற்சிகளில் பலர் ஈடுபட்டுள்ளதைக் காணக் கூடியதாக உள்ளது என்று அங்கிருந்து கிடைக்கும் தகவல்கள் தெரிவிக்கின்றன.
முஸ்லிம்களின் முக்கிய பண்டிகையான பக்ரீத் திருநாள் தற்போது கொண்டாடப்படுகின்றது. அந்தத் திருநாளின் போது முஸ்லிம் மக்கள் ஏனையோருக்குப் பெரும் விருந்து ஏற்பாடு செய்வது வழக்கம். அவ்வாறானஒருசூழலில்சிரியாவின் அவலநிலை கவலை தரும் விடயமாக அமைந்துள்ளது.
இந்தநிலை தொடருமானால் இறந்தவற்றைக் கூட உண்டு உயிர் வாழும் நிலை சிரியாவில் ஏற்படும் என்று அச்சம் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ற)

## மில்லியன் கணக்கானோர் என்.எஸ்.ஏ. கைப்பிடிக்குள்

### எட்வேர்ட் ஸ்நோடன் வெளியிட்ட ஆவணங்களில் ஆதாரங்கள்

நியூயோர்க், ஒக்.17
மின்னஞ்சல் வழங்கும் நிறுவனங்களின் வழங்கிகளை ஊடறுத்து மில்லியன் கணக்கானவர்களின் தொடர்புகளை அமெரிக்க உளவுப் பிரிவுகளில் ஒன்றான தேசிய பாதுகாப்பு அமைப்பு (என்.எஸ்.ஏ) சேகரித்துள்ளது என்று தகவல்கள் வெளியாகியுள்ளன.
தேசிய பாதுகாப்பு அமைப்பின் முன்னாள் பணியாளரான எட்வேர்ட் ஸ்நோடன் வெளியிட்டுள்ள ஆவணங்களில் அதற்கான ஆதாரங்கள் இணைக்கப்பட்டுள்ளன என்று 'வொஷிங்டன் போஸ்ட்' நாளிதழ் தகவல் வெளியிட்டுள்ளது.
"ஸ்நோடனின் ஆவணங்களில் இருந்து கிடைக்கப்பெற்ற தகவல்களின்படி, கடந்த [illegible] ளின் மின்னஞ்சல்களை என்.எஸ்.ஏ. சேகரித்துள்ளது.
அவ்வாறு சேகரிக்கப்படும் விவரங்கள் சர்வதேச அளவில் ஏதேனும் பயங்கரவாத அமைப்புகளுடன் தொடர்புள்ளதா என்பது ஆராயப்படுகின்றது. யாஹூ, ஜீமெயில், பேஸ்புக், ஹொட் மெயில் போன்ற இணையத்தள சேவைகள் மூலம் அனுப்பப்படும் தகவல்களைக் கொண்டே இந்தத் தகவல்கள் என்.எஸ்.ஏயால் சேகரிக்கப்படுகின்றன. இந்தச் செயற்பாடு நாள்தோறும் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றது. இதுபோன்ற செயற்பாடுகளுக்கு உலக நாடுகள் சிலவும் உடந்தையாக உள்ளன" என்று கூறப்படுகின்றது.



எனினும் அந்தத் தகவல்களை மறுத்துள்ளது என்.எஸ்.ஏ. அதன் செய்தித் தொடர்பாளர் இதுகுறித்துத் கூறுகையில்,
"சாதாரண மக்களின் விவரங்களைச் சேகரிப்பது எமது நோக்கம் அல்ல. பயங்கரவாதிகளுடன் தொடர்புடையவர்களை மட்டும்தான் நாங்கள் கண்காணிக்கின்றோம். குறிப்பிட்ட முகவரிகளை மட்டுமே கையகப்படுத்தி தகவல்களைச் சேகரிக்கின்றோம்" என்று தெரிவித்துள்ளார். (ற)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாராட்டி வாழ்த்துகின்றோம்



யா/யாழ்ப்பாணக் கல்லூரியில்
2013 தரம் 5 புலமைப் பரிசில் பரீட்சையில்
170 புள்ளிகளைப் பெற்றுக் கொண்ட எமது செல்வம்
பல்வேறு கல்வியியல் ஆக்கங்களை பத்திரிகை, சஞ்சிகைகளில்
எழுதிவரும் இளம் எழுத்தாளர்
செல்வன் சுவேந்திரன் ஆகீசன்
அவர்களைப் பாராட்டி வாழ்த்துகின்றோம்.
அவருக்கு வழிகாட்டிய ஆசிரியரையும், அதிபரையும்
மனதாரப் பாராட்டுகின்றோம்.
உலக உளநல நாளை முன்னிட்டு சுகாதார அமைச்சினால்
அகில இலங்கை ரீதியாக நடத்தப்பட்ட
கவிதைப் போட்டியில் 2ஆம் இடத்தைப் பெற்ற
யா/வேம்படி மகளிர் உயர் பாடசாலையில் பயிலும் இளம்
எழுத்தாளர்,ஆக்க இலக்கியவாதி
செல்வி ஆர்த்திகா சுவேந்திரன்
அவர்களையும் வாழ்த்துகின்றோம்.



பல கலையும் கற்றுப் பட்டங்கள் பெற்று
நல்வாழ்வு வாழ வாழ்த்துவோர்:
அம்மம்மா (தொல்புரம் கிழக்கு)
அப்பம்மா (உடுவில்)
சின்னமாமா குடும்பம் (கோண்டாவில்)
பெரிய மாமா குடும்பம் (கனடா)
அத்தை குடும்பம் (டென்மார்க்)
(32872) (7.6)

# மட்டு. மாவட்டத்தில் ஊழலை ஒழியுங்கள்

## அருண் தம்பிமுத்து கூறுகிறார்

போர் முடிவுற்று 4 வருடங்க ளுக்குள் 40 ஆயிரம் கோடி ரூபாவை அரசு மட்டக்களப்பில் செலவு செய்துள்ளது. எனினும் அந்த நிதி எங்கு, எப்படிச் செலவு செய்யப்பட்டுள்ளது என்று தெரியாதுள்ளது.

அந்த அளவுக்கு மட்டக்களப்பில் ஊழல் மலிந்து காணப்படுகின்றது. இந்தநிலை மட்டக்களப் பில் இருந்து ஒழிய வேண்டும்.

இவ்வாறு ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் மட் டக்களப்பு மாவட்ட அமைப்பாளரும் ஜனாதிபதி யின் இணைப்பாளருமான அருண் தம்பிமுத்து தெரிவித்தார்.

கன்னன்குடா மகா வித்தியாலய மண்டபத்தில் திங்கட்கிழமை அந்தப் பகுதி கிராம மக்களுடன் அபிவிருத்தி தொடர் பான கலந்து ரையா டல் நடைபெற்றது.

இந்தக் கலந்துரை யாடலில் கலந்து கொண்டு உரையாற் றியபோதே அவர் இவ்வாறு கூறினார்.

அங்கு அவர் மேலும் தெரிவித்ததாவது:

மட்டக்களப்பில் மாற் றம் வரவேண்டும்; ஒதுக்கீடு செய்யப் படும் பணம் மக்களைச் சென்றடைய வேண்டும்; இந்தநிலை உருவாக வேண்டுமானால் மட்டக்களப்பில் நிலவும் ஊழல் ஒழிய வேண் டும். அரசால் ஒதுக்கீடு செய்யப்படும் பணம் மக்களைச் சென்றடைவ தில்லை.



மட்டக்களப்பின் அவல நிலைக்கு சிறந்த எடுத்துக்காட்டாக மட்டக் களப்பு போதனா வைத்தியசாலை காணப் படுகின்றது. மக்களுக்கு சிறந்த சேவை அங்கு வழங்கப்படுவதில்லை.-என் றார். (ச)

## 43 ஆவது இடத்தில் இலங்கை

கொழும்பு.ஒக்.17

'பட்டினி'யில் ஆபத் தான நிலையில் தற் போதும் இலங்கை உள் ளது. 2013 ஆம் ஆண் டுக்கான பட்டினி சுட் டியில் இலங்கை 43 ஆவது இடத்திலுள்ளது என்று மதிப்பிடப்பட் டுள்ளது.

கீழ்மட்டத்திலிருந்து முன்னேறி, உலக பட்டினி சுட்டி 2013 இல் 63 ஆம் இடத் துக்கு வந்துள்ள இந் தியாவில் பட்டினி கிடப் போரின் எண் ணிக்கை குறைந்துள்ளது.

எனினும் இந்தியாவா னது சீனா, பாகிஸ் தான், பங்களா தேஷ், இலங்கை ஆகிய நாடு களை விடப் பின்தங் கியே உள்ளது.

உலகப் பட்டினி சுட்டி யில் சீனா, பட்டினி மட்டத்தில் 6ஆம் இடத் தில்உள்ளது. இலங்கை 43 ஆவது, பாகிஸ் தான் 57ஆவது, பங் களாதேஷ் 58 ஆவது என்ற தரநிலைகளைப் பெற்று கடுமையான பட்டினி மட்டத்திலி ருப்பதை வெளிப்ப டுத்தியுள்ளன.

இந்த சுட்டி அபி விருத்தியடைந்து வரும் 120 நாடுகளின் பட்டினிமட்டத்தை காட் டுகின்றது. இந்த சுட் டியை தயாரிக்கும் போது மந்த போஷணை உடை யோரின் விகிதாசா ரம், ஐந்து வயதுக்கு குறைந்த பிள்ளைக ளில் நிறை குறைந்த பிள்ளைகளின் விகிதா சாரம், ஐந்து வயதுக்கு குறைந்த பிள்ளைக ளின் மரண வீதம் ஆகிய மூன்றும் சம அளவில் கருத்தில் எடுக்கப்பட்டன.

பாராட்டி வாழ்த்துகின்றோம்





கந்ததாசன் சர்கித்யன் புள்ளிகள்-175
லக்சாயினி தேவபாலன் புள்ளிகள்-163
கார்த்திகாயினி சோதிநாதன் புள்ளிகள்-154

2013 ஆம் ஆண்டு நடைபெற்ற தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சையில் சித்தியடைந்த எமது அன்புச் செல்வங்களான யா/ நெல்லியடி மெ.மி.த.க. பாடசாலை மாணவன் கந்ததாசன் சாகித்யன் 175 புள்ளிகளையும், யா/வட இந்து ஆரம்ப பாடசாலை மாணவி லக்சாயினி தேவபாலன் 163 புள்ளிகளையும் யா/ தம்பசிட்டி மெ.மி.த.க. பாடசாலை மாணவி செல்வி. கார்த்திகாயினி சோதிநாதன் 154 புள்ளிகளையும் பெற்றதையிட்டு பாராட்டி வாழ்த்துவதோடு, இவர்களின் வெற்றிக்கு ஊக்கமளித்த அதிபர், ஆசிரியர்களுக்கும் எமது நன்றியைத் தெரிவித்துக் கொள்வதோடு தொடர்ந்து பல்கலையும் கற்று சிறப்புடன் வாழ இறைவனை வேண்டுகிறோம்.

வாழ்த்துவோர்:
(32701) (4.6.3) சோதிநாதன் ஜெயவேணி குடும்பம்.

பாராட்டி வாழ்த்துகின்றோம்



யா/ கரம்பொன் சிறிய புஷ்ப மகளிர்
மகா வித்தியாலய மாணவி
செல்வி டிலக்சினி ஜெயகாந்தன்
2013 தரம் 5 புலமைப்பரிசில்
பரீட்சையில் 156 புள்ளிகளை பெற்று
பாடசாலைக்கு பெருமை தேடித்தந்துள்ளார்.
இவருடன் பரீட்சையில் 100 புள்ளிகளுக்கு
மேல் பெற்ற மாணவர்களையும்
பாராட்டுகின்றோம்.
வாழ்த்துவோர்:
பாடசாலை அபிவிருத்திச் சங்கம்,
யா/ கரம்பொன் சிறிய புஷ்ப ம.ம.வித்தி.

சேவை நலன் பாராட்டு



எமது பாடசாலையில் கல்வி சாரா
ஊழியராக 25 வருடங்கள்
சேவையாற்றி 17.10.2013 இன்று
ஓய்வு பெறுகின்ற
இராசதுரை தர்மகுலசிங்கம்
அவர்கள் தனது ஓய்வுக்காலத்தில்
சீருடனும் சிறப்புடனும் அரியாலை
நீர்நொச்சித் தாழ்வு சித்தி
விநாயகர் அருள் பெற்று
பல்லாண்டு காலம் வாழ
வாழ்த்துகின்றோம்.
அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள்.
யா/கனகரத்தினம் ம.ம.வி

அக மகிழ்ந்து நன்றி கூறி வாழ்த்துகின்றோம்




எமது புதல்வியான
நவீஸ்வரன் அனுசிகா
2013 தரம் 5 புலமைப்பரிசில்
பரீட்சையில்
யா/மீசாலை வீரசிங்கம்
ஆரம்ப பாடசாலையில்
166 புள்ளிகளையும்,
எமது புத்திரனான
நவீஸ்வரன் வீர்த்தனன் 2009 தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சையில் கிளி/ கலவெட்டித் திடல் நாகேஸ்வர வித்தியால யத்தில் 127 புள்ளிகளையும் பெற்று சித்தியடைந்தமையை இட்டு மகிழ்வடைவதோடு எம் பிள்ளைகளின் சிறப்பிற்கு காரணமான இரு பாடசாலைகளின் அதிபர்கள், ஆசிரியர்கள் மற்றும் சுதாகரன் ஆசிரியர் அனைவருக்கும் உளம் நிறைந்த நன்றிகளைத் தெரிவித்து வாழ்த்துகின்றோம்.
வாழ்த்துபவர்கள்- அப்பா நவீஸ்வரன், அம்மா சுபாஜினி, அன்ரி பேபிரக்சனா, சித்தி, சித்தப்பா, அத்தைமார், ரவி, சபேசன், அஜந்தன் மாமா, பூட்டம்மா, அப்பம்மா.
கலவெட்டித்திடல் புளியம் பொக்கனை
மீசாலை வடக்கு, தட்டாங்குள வீதி, கொடிகாமம்.
(37560)(6.4)

GTV Enterprises (Pvt)Ltd
Authorized Foreign Money Exchange
(Permit No. ECD/MC/0175
Opening Ceremony

கடந்த இரண்டு தசாப்த காலத்திற்கு மேலாக உணவு உற்பத்தி மற்றும் வெளிநாடுகளுக்கான பொதிகள் சேவையினை மேற்கொண்டுவரும் G.T.V Enterprises (Pvt) Ltd. மகாராஜா Food Products நிறுவனம் தனது வாடிக்கையாளர்களின் நலன்கருதி மற்றுமொரு சேவையாக "அரச அங்கீகாரம் பெற்ற வெளிநாட்டு நாணய மாற்றுனர் சேவை" நிலையத்தினை நாளை (18.10.2013) வெள்ளிக்கிழமை முதற் கட்டமாக யாழ்ப்பாணத்தில் ஆரம்பிக்கவுள்ளது.
மேற்படி நாணயமாற்று சேவை நிலையத்தினை இலங்கை வங்கியின் சிரேஷ்ட ஆலோசகரும் முன்னாள் பொது முகாமையாளருமான உயர்திரு B.F.C. பெர்ணாண்டோ அவர்கள் யாழ்ப்பாணம், கஸ்தூரியார் வீதி, இல. 225இல் காலை 9.00 மணிக்கு வைபவ ரீதியாக ஆரம்பித்து வைக்கவுள்ளார்.
இந்த ஆரம்ப வைபவத்தில் எ மது வாடிக்கையாளர்கள் அனைவரையும் கலந்து சிறப்பிக்குமாறு அன்புடன் அழைக்கின்றோம். தொடர்ந்தும் உங்கள் ஆதரவினையும் வேண்டி நிற்கின்றோம்.

மற்றும் விஷேட புதிய சேவையாக...
மேலும் பொதிகள் சேவையில் ஒரு புதிய பரிமாணமாக லண்டனுக்கு தமது சேவையினை விரிவுபடுத்தும் நோக்கில் கடல் மார்க்கமாக பொதிகள் அனுப்பும் சேவையினை ஆரம்பித்துள்ளோம். அதற்கேற்ப ஒவ்வொரு மாதமும் 30ஆம் திகதி பொதிகள் அனுப்பப்படும்.
இச்சேவைக்கான கட்டணம் 1 கிலோவிற்கு ரூபா 125/= மட்டுமே.
இச்சேவைக்காக பொதிகள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதி ஒவ்வொரு மாதமும் 25ஆம் திகதி ஆகும்.
இச்சேவை மூலம் 30 தினங்களில் உங்கள் பொதிகள் உரியவருக்கு கையளிக்கப்படும்.

முகாமைத்துவம்
G.T.V Enterprises (Pvt)Ltd (Head)
Maharajah Food Product
Wellawatta, Colombo-06.

கிளை
225, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
தொ.பே : 021 222 4338 (பார்சல் சேவை),
021 221 7224 (நாணய மாற்று சேவை)
(C/13108) (7.6)

பாராட்டி வாழ்த்துகின்றோம்



அனலை தீவு தெற்கு,
அ.த.க.பாடசாலையில்
2013 தரம் 5 புலமைப்பரிசில்
பரீட்சையில் 163 புள்ளிகளைப் பெற்று
சித்தியடைந்த எமது ப.நோ.கூ.
சங்கத்தின் கிளை முகாமையாளர்
பரமேஸ்வரன் தம்பதியரின்
அன்புப் புதல்வன்
செல்வன் சஜீத் அவர்களை
பாராட்டி வாழ்த்துவதோடு மேலும்
படித்து பட்டங்களைப் பெற
இறைவனை வேண்டுகின்றோம்.
வாழ்த்துவோர்:
தலைவர்,
பணிப்பாளர்கள், பணியாளர்கள்,
அனலை தீவு ப.நோ. கூ. சங்கம்.
(32901)(3.6.45)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பொலிஸார் அதிரடி கசிப்புடன் சிக்கினார் ஒருவர்

அக்கராயன், ஒக்.17
கிளிநொச்சி அக்கராயன் பொலிஸாரின் அதிரடி நடவடிக்கையால் கோணாவில் யூனியங்குளத்தில் கசிப்பு உற்பத்தியாளர் ஒருவர் கைது செய்யப்பட்டதுடன் கசிப்பு உற்பத்திக்குப் பயன்படுத்தப்பட்ட உபகரணங்களும் கைப்பற்றப்பட்டுள்ளன.
கிளிநொச்சிப் பொலிஸ் அதிகாரி எட்வின் மகேந்திரா, உதவிப் பொலிஸ் அதிகாரி கிரிசாந்த ஆகியோரின் பணிப்பின் பேரில் அக்கராயன் பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி சதுரங்க தலைமையிலான பொலிஸ் குழுவினரே கசிப்பு உற்பத்தியாளரொருவரைக் கடந்த 12 ஆம் திகதி கைது செய்துள்ளனர்.
மேலும் இதே தினம் வன்னேரிக்குளம், கரித்தாஸ் குடியிருப்பு ஆகிய கிராமங்களிலும் கசிப்பு உற்பத்தியாளர்கள் கைது செய்யப்பட்டனர். பின்னர் இவர்கள் அனைவரும் கிளிநொச்சி நீதிமன்றில் முன்னிலைப்படுத்தப்பட்டனர்.
கசிப்பு மற்றும் சட்டவிரோத மதுபான விற்பனை தொடர்பாக மக்கள் கூடுதல் விழிப்புணர்வுடன் செயற்பட்டு பொலிஸாருக்குத் தகவல்களை வழங்கியுதவுமாறு அக்கராயன் பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி வேண்டுகோள் விடுத்துள்ளார்.
வன்னேரிக்குளம் கிராமத்திலும் கசிப்பு உற்பத்தி அதிகரித்துள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டது. (க-18)

# முல்லைத்தீவு இ.போ.ச. சேவைகள் மக்களுக்கு போதுமானதாக இல்லை

### விரிவுபடுத்தக் கோருகின்றனர் மாவட்ட மக்கள்

அக்கராயன், ஒக்.17
**இலங்கை போக்குவரத்துச் சபையின் முல்லைத்தீவு டிப்போவுக்கு போதிய பஸ் வசதிகள் இல்லாததால் பஸ் நிலையம் இல்லை எனவும் இதனால், இதனூடாக சேவைகளை பெறும் மக்கள் பல்வேறு சிரமங்களை எதிர்கொண்டு வருகின்றனர் என்றும் தெரிவிக்கப்பட்டது.**
கொக்கிளாய், கொக்குத்தொடுவாய் முதல், மாந்தை கிழக்கு வரையான சகல பகுதிகளிலும் மக்கள் மீள்குடியமர்ந்து நான்கு வருடங்களாகியுள்ளன. ஆனால் இந்தப் பகுதிகளுக்கான சீரான போக்குவரத்துச் சேவைகள் இதுவரை ஏற்படுத்தப்படவில்லை. இதனால் பெருமளவான குடும்பங்கள் பல்வேறு சிரமங்களை எதிர்நோக்கி வருகின்றன.
முல்லைத்தீவு மாவட்டத்தின் புதுக்குடியிருப்பு, ஒட்டுசுட்டான், கரைதுறைப்பற்று, துணுக்காய், மாந்தை கிழக்கு, வெலிஓயா ஆகிய பிரதேசங்களுக்கான போக்குவரத்து சேவைகள் எவையும் சீரான முறையில் இல்லை என்றே மக்கள் கூறுகின்றனர்.
முல்லைத் தீவுக்கான பிரதான பஸ் நிலையம் இதுவரை உரிய இடத்தில் அமைக் கப்படவில்லை. 1990 க்கு முன்னர் முல்லைத்தீவு நகரில் இயங்கிய இ.போ.ச.பஸ் நிலையம் போர் காரணமாக 2011 ஆம் ஆண்டின் பிற்பகுதியில் இருந்து 2012 ஆம் ஆண்டு வரையும் அதே இடத்தில் இயங்கியது. தற்போது மாவட்டச் செயலகத்தின் முன்பாகத் தற்காலிக மாக இயங்கி வருகின்றது. இத னால் பயணிகள் குறித்த பஸ் நிலை யத்தில் இருந்து அதிக பணம் கொடுத்து பிரதான சந்தை, மற்றும் கடைகளுக்குச் செல்லும் நிலை ஏற்பட்டுள்ளது.
குறித்த டிப்போவுக்கு 35 வரையான பஸ்கள் தேவையானபோதும் 5 புதிய பஸ்களும் 7 பழைய பஸ்களும் உள்ளடங்கலாக 12 பஸ்களே உள்ளன. இதில் அநேகமானவை பாவனைக் குதவாத பஸ்களாக உள்ளன. இவற்றைக் கொண்டு ஒரு பிரதேச செயலர் பிரிவின் தேவைகளைக் கூட நிறைவு செய்ய முடியாதுள்ளது.

**முல்லைத்தீவு மாவட்டத்தின் புதுக்குடியிருப்பு ஒட்டுசுட்டான், கரைதுறைப்பற்று, துணுக்காய், மாந்தை கிழக்கு, வெலிஓயா ஆகிய பிரதேசங்களுக்கான போக்குவரத்து சேவைகள் எவையும் சீரான முறையில் இல்லை என்றே மக்கள் கூறு கின்றனர். இலங்கைப் போக்குவரத்துச் சபையின் முல்லைத்தீவு சபைக்கு 12 பஸ்களே உள்ளன. இதில் கூடுதலானவை, பாவனைக்குதவாத பஸ்களாக உள்ளன.**

அத்துடன் 42 சாரதி களும் 42 நடத்துநர்களும் தேவை யான போதும் 20 நடத்துநர்களும், 16 சாரதிகளுமே உள்ளனர். பொறியியல் பகுதிக்கு 8 பேர் தேவையான போதும் 4 பேர் மாத்திரமே உள்ளனர் என்று முல்லைத்தீவு டிப்போவில் பணிபுரியும் ஒருவர் தெரிவித்தார்.
இந்த விடயம் தொடர்பில் முல்லைத்தீவு டிப்போ முகாமையாளரை தொலைபேசியில் தொடர்பு கொண்ட போது:-
'நான் இப்போது அவசர அலுவலாக உள்ளேன் தொலைபேசியில் தகவல் தர முடியாது. நீங்கள் வேண்டுமானால் நேரில் டிப்போவுக்கு வாருங்கள்' என்று கூறி விட்டு அழைப்பைத் துண்டித் துக் கொண்டார். (ஜ-6)

## மின்சாரம் வழங்கப்படாத நிலையில் கண்டாவளை பெரியகுளம் கிராமம்

கிளிநொச்சி, ஒக்.17
கிளிநொச்சி கண்டாவளைப் பிரதேச செயலர் பிரிவின் கீழ் உள்ள பெரியகுளம் கிராமத்துக்கு இதுவரை மின்சார வசதி வழங்கப்படாததால் இரவு வேளைகளில் இந்தக் கிராமம் இருளில் மூழ்கிக் காணப்படுவதாக மக்கள் கவலையுடன் தெரிவித்துள்ளனர்.
கடந்த 2010 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் இந்தக் கிராமத்தில் மக்கள் மீள்குடியமர்ந்த போதும் இது வரை எந்தவிதமான அபிவிருத்திப் பணிகளும் இங்கு முன்னெடுக்கப்படவில்லை. குறித்த கிராமத்தில் சுமார் 300 குடும்பங்கள் வாழ்ந்து வருகின்றன. மேலும் இந்தக் கிராமத்தின் பிரதான வீதி முதல் ஏனைய குடியிருப்பு வீதிகள் வரை புனரமைக்கப்படாத நிலையிலேயே காணப்படுகின்றன.
அத்துடன் மின்சார விநியோகமும் இதுவரை மேற்கொள்ளப்படவில்லை. ஆனால் அயல் கிராமங்களான புளியம் பொக்கணை, நாகேந்திரபுரம், தருமபுரம் கிழக்கு, தருமபுரம் மேற்கு ஆகிய கிராமங்களில் ஓரளவு அபிவிருத்திகள் மேற்கொள்ளப்பட்டதுடன் மின்விநியோகமும் வழங்கப்பட்டு வருகின்றது.
இதனால் தமது கிராமம் திட்டமிட்டுப் புறக்கணிக்கப்பட்டு வருவதாக இங்கு வசிக்கும் மக்கள் கடும் விசனம் தெரிவித்துள்ளனர். (க-6)



தேசிய டெங்கு ஒழிப்பு வாரத்தை முன்னிட்டு கூமாங்குளம் இளைஞர் கழகத்தினால் டெங்கு ஒழிப்பு தொடர்பான விழிப்புணர்வுப் பரப்புரை நடவடிக்கையொன்று கூமாங்குளம் கிராம மட்டத்தில் கடந்த 13 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை முன்னெடுக்கப்பட்டது. இந்த நிகழ்வில் கூமாங்குளம் இளைஞர் கழகத்தினருடன் வவுனியாப் பொலிஸாரும், கூமாங்குளம் சித்திவிநாயகர் வித்தியாலயத்தைச் சேர்ந்த மாணவர்களும் கலந்து கொண்டனர். இதன்போது மக்களுக்கு டெங்கு நோய் தொடர்பாகவும் டெங்கு ஒழிப்புத் தொடர்பாகவும் துண்டுப் பிரசுரம் வாயிலாக பரைப்புரை செய்யப்பட்டது. (க-435)

மாற்றுவலுவுடையவர்

## பிச்சையெடுத்த பணத்தை தட்டிப்பறித்த திருடன்

வவுனியா பஸ் நிலையத்தில் பிச்சை எடுத்துப் பிழைத்து வரும் மாற்றுவலுவுடைய ஒருவரின் பணத்தை இரக்கமற்ற ஒருவர் திருடிச் சென்றுள்ளார்.
வவுனியா பஸ் நிலையத்தில் பிச்சை எடுப்பது தடை செய்யப்பட்ட போதிலும் பலர் இன்னமும் இந்தத் தொழிலில் ஈடுபட்டு வருகின்றனர். பொருளாதார ரீதியில் வறுமைக் குட்பட்டவர்களும், மாற்றுவலுவுடைய சிலரும், நோய்களுக்கான சிகிச்சைகளுக்கெனப் பணம் சேகரிப்பவர்களும் இத்தகைய நடவடிக்கைகளில் ஈடுபட்டுள்ளனர்.
மாற்றுவலுவுடைய ஒருவர் தனது பிள்ளையுடன் பிச்சையெடுப்பதை வழக்கமாகக் கொண்டுள்ளார். இவர் பிச்சையெடுத்த பணத்தை தனது சேட் பொக்கற்றுக்குள் வைத்திருந்தபோது இனந்தெரியாத ஒருவர் அதனைத் திருடிச் சென்றுள்ளார். இதனால் பாதிப்புக்குள்ளான பணத்தைப் பறி கொடுத்தவர் நீதி கோரி அழுது குளறினார். இதனையடுத்து அந்தப் பகுதியில் பெரும் சனத்திரள் கூடியது.



எனினும் பணத்தை எவர் திருடினார் என்பதை எவரும் உறுதியாகக் கூறவில்லை. மேலும் தமது பணம் பறி போனதை எவரும் தடுத்து நிறுத்தவில்லையெனக் கூறி அவர் மண்ணில் புரண்டு அழுதமை அங்கு கூடிநின்ற பலருக்கும் வேதனையைக் கொடுத்தது. (க-402)


# பொது நோக்கு மண்டபத்தை புனரமைக்குமாறு கோரிக்கை

முல்லைத்தீவு, ஒக். 17
முல்லைத்தீவு மாவட்டம் முள்ளியவளைப் பகுதியில் சேதமடைந்த நிலையில் காணப்படும் பொது நோக்கு மண்டபத்தைப் புனரமைத்து வழங்குமாறு மக்கள் வேண்டுகோள் விடுத்துள்ளனர். முள்ளியவளைப் பகுதியில் வசிக் கும் சுமார் 435 குடும்பங்களின் தேவைகளைப் பூர்த்தி செய்யக் கூடிய இந்தப் பொதுநோக்கு மண்டபம் சேதமடைந்த நிலையில் காணப்படுகிறது. இதனால் பொது நிகழ்வுகள் நடத்துவதில் மக்கள் சிரமங்களை எதிர்கொண்டு வருகின்றனர்.
முள்ளியவளை வடக்கு 4ஆம் வட்டாரத்தில் [illegible] சேதமடைந்த பொதுநோக்கு மண்டபம் மக்கள் குடியமர்ந்து நான்கு ஆண்டுகள் கடந்த நிலையிலும் இன்றுவரை புனரமைக்கப்படாத நிலையில் காணப்படுகின்றது. இதனையே புனரமைத்து வழங்குமாறு இந்தப்பகுதி மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். இது தொடர்பாக இந்தப்பகுதியிலுள்ள கிராம அபிவிருத்திச் சங்கத்தினர் ஏற்கனவே முல்லைத்தீவு அரச அதிபருக்குக் கடிதமொன்றையும் அனுப்பி வைத்துள்ளனர்.

**முள்ளியவளைப் பகுதியில் வசிக்கும் சுமார் 435 குடும் பங்களின் தேவைகளைப் பூர்த்தி செய்யக் கூடிய வகையில் பொதுநோக்கு மண்டபம் ஒன்று இல்லாத நிலை காணப்படுகிறது.**

குறித்த பொதுநோக்கு மண்டபம் புனரமைக்கப்படுமேயானால் முள்ளிய வளை வடக்கு கிராம அலுவலர் பிரிவின் கீழ் உள்ள சுமார் 435 குடும்பங்கள் நன்மையடையும் வாய்ப்புக்கள் உள்ளன. இந்த மண்டபத்தின் மூலமாக முன்பள்ளி, தாய்,சேய் போசாக்குச் செயற்பாடுகள் மற்றும் ஏனைய பொது நிகழ்வுகள் ஆகிய தேவைகளைப் பூர்த்தி செய்ய முடியுமெனவும் மக்கள் தெரிவித்துள்ளனர். (க-6)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org



ஹஜ் பெருநாள் தொழுகை நேற்று புதன்கிழமை நிந்தவூர் தேசிய பாடசாலை மைதானத்தில் .... (ச-30)

## பரீட்சை பெறுபேற்றில் மட்டு. வலயம் வீழ்ச்சி

மட்டக்களப்பு, ஒக்.17
இந்த வருடம் நடைபெற்ற தரம் ஐந்து புலமைப்பரிசில் பரீட்சைப் பெறு பேற்றில் மட்டக்களப்பு கல்வி வலயம் கடந்த ஆண்டினை விட வீழ்ச்சி கண்டுள்ளது என்று இலங்கை ஆசிரியர் சங்கம் கவலை வெளியிட்டுள்ளது.
மட்டக்களப்பு மத்தி கல்வி வலயத்தின் பரீட்சைப் பெறுபேறும் உயர்வடைந்துள்ளது. அதேவேளை நகர்ப்புறப் பாடசாலைகளைக் கொண்ட மண்முனை வடக்கு கோட்டத்தின் பரீட்சை பெறுபேறுகள் சென்ற ஆண்டை விட கடும் வீழ்ச்சி கண்டுள்ளன என்று அவர் கூறினார்.
இந்தப் பரீட்சைப் பெறுபேறுகள் வலயத்தின் வினைத்திறனற்ற அரசியல் நியமனங்களை எடுத்துக்காட்டியுள்ளது என்று அவர் குறிப்பிட்டார். (ச)

## அம்பாறையில் நீர்ப்பாசன வாரம்

கிழக்கு மாகாண நீர்ப்பாசனத் திணைக்களம், மத்திய அரசின் நீர்ப்பாசனத் திணைக்களத்துடன் இணைந்து அம்பாறை மாவட்டத்தில் நீர்ப்பாசன வாரத்தை நடத்தவுள்ளது என்று கிழக்கு மாகாண வீதி அபிவிருத்தி, நீர்ப்பாசன அமைச்சர் எம்.எஸ்.உதுமாலெப்பை தெரிவித்தார்.
இது குறித்து அவர் மேலும் தெரிவித்ததாவது:-
போரின் பின்னர் கிழக்கு மாகாணத்தின் மூன்று மாவட்டங்களிலும் உள்ள நீர்ப்பாசனத் திட்டங்களை புனரமைத்து அபிவிருத்தி செய்யும் நடவடிக்கையை எமது அமைச்சு முன்னெடுத்து வருகின்றது.
போர் மற்றும் இடர்களால் அதிகளவில் பாதிக்கப்பட்ட மூவின மக்களும் நன்மை பெறும்வகையில் இந்தமூன்று மாவட்டங்களிலும் நீர்ப்பாசன வாரங்கள் நடத்தப்பட்டு போரால் அதிகளவில் பாதிப்புக்குள்ளான வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களை துரிதமாக கட்டியெழுப்புவதற்கு அதிகாரிகள் நடவடிக்கை எடுத்து வருகின்றனர். (ச)

## மலைப்பாம்பு உருவில் வயிற்றில் பெருங்குடல்

### சம்மாந்துறையில் வெற்றிகரமாக அறுவைச் சிகிச்சை



நோயாளி ஒருவரின் வயிற்றில் மலைப் பாம்பின் உருவில் சுருண்டு வீங்கிக் காணப்பட்ட பெருங்குடல் சத்திர சிகிச்சை மூலம் அகற்றப்பட்டது. இதன் மூலம் அந்த நோயாளி காப்பாற்றப் பட்டுள்ளார்.
சாதனை மிக்க இந்தச் சத்திரசிகிச்சை சம்மாந்துறை அன்வர் இஸ்மாயில் ஆதார வைத்தியசாலையில் இடம் பெற்றுள்ளது.
சத்திர சிகிச்சை நிபுணர் ஏ. டபிள்யூ. எம். சமீம் இந்த அபூர்வ சத்திர சிகிச்சையை மேற்கொண்டு நோயாளியின் உயிரைக் காப்பாற்றியுள்ளார்.
சம்மாந்துறை ஆதார வைத்தியசாலையில் சிகிச்சைக்காக சேர்க்கப்பட்ட குறித்த நோயாளியின் வயிற்றினுள் இருந்த பெருங்குடல் மலைப் பாம்பின் உருவில் இராட்சத உருவில் ஆபத்தான கட்டத்தில் இருந்ததை அவதானித்து வியப்படைந்தோம். நாம் விரைந்து செயற்பட்டு மிகவும் நுட்பமாக சத்திர சிகிச்சையை மேற்கொண்டு அதனை முற்றாக அகற்றினோம் என்று சத்திர சிகிச்சை நிபுணர் ஏ. டபிள்யூ. எம். சமீம் தெரிவித்தார். (ச)

# சம்பூர் மக்களை மீள்குடியமர்த்துக

### துரிதப்படுத்த நீதிமன்றம் உத்தரவு

திருகோணமலை,ஒக்.17
சம்பூர் பகுதியில் அனல்மின் நிலையம் ஒன்றை அமைப்பதற்கு அனுமதி வழங்கியுள்ள உயர்நீதிமன்றம், அந்தப் பகுதியில் இருந்து இடம்பெயர்ந்துள்ள மக்களை மீளக்குடியமர்த்துவதற்கு துரிதமான நடவடிக்கைகளை எடுக்குமாறு அரசுக்கு உத்தரவிட்டுள்ளது.
2006 ஆம் ஆண்டில் இடம் பெயர்ந்த தம்மை தமது இருப்பிடங்களில் மீளக்குடியமர நடவடிக்கை எடுக்குமாறு கோரி சம்பூர்வாசிகள் சிலரால் தாக்கல் செய்யப்பட்ட மனுவை விசாரித்தபோதே இந்த உத்தரவை நீதிமன்றம் பிறப்பித்துள்ளது.
சம்பூர் மக்களில் பெரும்பாலானோர் மீளக்குடியமர்த்தப்பட்டுள்ளனர். சிலரே இன்னமும் குடியமர்த்தப்பட வில்லை என்று கூறிய அரச தரப்புச் சட்டத்தரணி, அவர்களையும் மீளக் குடியமர்த்த நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. அதற்கான இடங்கள் அடையாளம் காணப்பட்டுவிட்டன என்று நீதிமன்றத்தில் குறிப்பிட்டார்.
ஆனால், அதனை நிராகரித்த மனுதாரர் தரப்புச் சட்டத்தரணி, சுமார் 200 குடும்பங்கள் இன்னமும் மீளக் குடியமர்த்தப்படவில்லை.
அதற்கான இடங்களும் அடையாளம் காணப்படவில்லை என்று கூறினார்.
இந்தவாதத்தை ஏற்றுக் கொண்ட நீதியரசர்கள் மக்களை குடியமர்த்துவதற்கான இடங்களை அவர்களுக்கு அடையாளம் காட்ட உடனடி நடவடிக்கை எடுக்குமாறு அரச சட்டத்தரணிக்கு உத்தரவிட்டார். (ச)

"மக்களை குடியமர்த்துவதற்கான இடங்களை அவர்களுக்கு அடையாளம் காட்ட உடனடி நடவடிக்கை எடுங்கள்.



# வடக்கு மாகாணசபைக்கு வழங்குங்கள் அதிகாரங்களை

## அரச பொது ஊழியர் சங்கம் வேண்டுகோள்

வாக்களிப்பதன் மூலம் தமது பிரதிநிதிகளைத் தெரிவு செய் யும் ஜனநாயக உரிமையை வடபகுதி மக்கள் ஈட்டத் தாம் வழி வகுத்ததாக மார்தட்டும் அரசு, அந்த உரிமை மூலம் ஆட்சி அதிகாரத்தைப் பெற்றுள்ள வடமாகாண சபைக்கு முழு அதிகாரங்களையும் வழங்கிச் சிறப்பாக செயற்பட வழிவகுக்க வேண்டும்- இவ்வாறு அகில இலங்கை அரச பொது ஊழியர் சங்கத் தலைவர் எஸ்.லோகநாதன் தெரிவித்தார்.
அகில இலங்கை அரச பொது ஊழியர் சங்கத்தின் முகாமைத்துவ சபைக் கூட்டம் கல்முனை சனசமண்டபத்தில் நடைபெற்றது.
இந்தக் கூட்டத்தில் கலந்துகொண்டு உரையாற்றிய போதே அவர் இவ்வாறு கூறினார்.அங்கு அவர் மேலும் தெரிவித்ததாவது:-
மீளாத துன்ப, துயரங்கள், இராணுவ அடக்குமுறை, காணிகள் இழப்பு, காணாமல்போன சொந்தங்கள், விதைக்கப்படும் புத்தர் சிலைகள், ஆக்கிரமிப்புக்கள் போன்றவற்றால் பாதிக்கப்பட்டு வாழ்ந்த வடபகுதி மக்கள் தமக்கு கிடைத்த துரும்புச் சீட்டான வட மாகாண சபைத் தேர்தலில் பொங்கி எழுந்து தம் உணர்வலைகளை வெளிப்படுத்தினர்.
இதன் காரணமாக வரலாற்று வெற்றியை வடமாகாண சபைத் தேர்தல் தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கு பெற்றுக் கொடுத்திருக்கின்றது.

**உரிமையா? சலுகையா?**

உரிமையா? சலுகையா? என்ற மோதல் தேர்தல் காலங்களில் வரும் போதெல்லாம் எம் தமிழ் மக்கள் எப்போதுமே உரிமைதான் எமது இலக்கு என்பதை நிலை நிறுத்தி வருவதுபோல் இம்முறையும் தமது திடசங்கற்பத்திலிருந்து அவர்கள் சிறிதும் பிறழவில்லை.
போர்ச் சூழ்நிலை முடிவுக்கு வந்த பின்னர், வடக்கு மக்கள் [illegible] நான்காவது தேர்தலாகவும் [illegible] மாகாண சபைக்கான முதலாவது தேர்தலாகவும் நடைபெற்று முடிந்த தேர்தல் அமைந்தது.
இந்த நிலையில் ஏனைய மூன்று தேர்தல்களிலும் பதிவான வாக்களிப்பு வீதத்திலும் பார்க்க இம்முறை வாக்களிப்பு வீதம் அதிகரித்துள்ளது.
அத்தோடு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் வாக்குவங்கியும் அதிகரித்திருந்தமை தெட்டத் தெளிவான ஒன்று.
இதனால் தான் நம்மை அடக்கி, ஒடுக்கி, அடிமைச் சமூகமாக என்றும் வைத்திருக்க வேண்டுமெனக் கனவு கண்டு கொண்டிருந்த பேரினவாதிகள் கதிகலங்கிய நிலையிலுள்ளனர்.

**அதீத நம்பிக்கை**

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு மீது தமிழ் மக்கள் கொண்டுள்ள அதீத நம்பிக்கையாலும் சுயநிர்ணயம், உரிமை, தேசியம் என்பவற்றை அடிப்படையாக வைத்துமே வடக்கு தமிழ் மக்கள் இத்தேர்தல் மூலம் [illegible] மாகாண சபை நிர்வாகத்தை சீரிய முறையில் கூட்டமைப்பு முன்னெடுக்கு மென் பதில் மக்கள் நம்பிக்கை கொண் டுள்ளனர்.

**மார்தட்டும் அரசு**

இந்நிலையில் வடக்கில் ஜனநாயகத்தைத் தழைத்தோங்கச் செய்வதாகவும், அதில் ஓர் அங்கமாக மாகாண சபைத் தேர்தலில் வாக்களிக்கும் ஜனநாயக உரிமைக்கு வழிவகுத்ததாகவும் அரசு மார்தட்டிக் கொண்டிருக்கின்றது.
அவ்வாறெனில் வடக்கு மாகாண சபைக்கு 13 ஆவது அரசமைப்புத் திருத்தத்தின் படியான முழு அதிகாரங்களையும் வழங்கித் தனது ஜனநாயக முன்மாதிரியை உறுதிப்படுத்த அரசு முன்வர வேண்டும்.

**கிழக்குத் தீர்மானம்**

இதேவேளை அரசமைப்புக்கான 13 ஆவது திருத்தத்தை வலுப்படுத்த வேண்டுமென்ற தீர்மானம் கிழக்கு மாகாணசபையில் நிறைவேற்றப்பட்டுள்ளமை வரவேற்கத்தக்க விடயமாகும். முஸ்லிம் காங்கிரஸின் குழுத் தலைவர் ஏ.எம்.ஜெமீலினால் இதற்கான தனிநபர் பிரேரணை முன்வைக்கப் பட்டு, முஸ்லிம் காங்கிரஸ், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு உறுப்பினர்கள் சேர்ந்து, ஐ.தே.கட்சி உறுப்பினர்களது ஆதரவுடனும் பதினைந்து மேலதிக வாக்குகளால் தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளது.
கிழக்கு தமிழ்-முஸ்லிம் சிறுபான்மை மக்களின் அரசியல் பாதையில் இந்தத் தீர்மான நிறைவேற்றம் புதிய பரிமாணமாகக் கொள்ளப்படும் அதேவேளை, தனிநபர் பிரேரணையை முன்வைத்த முஸ்லிம் காங்கிரஸ் குழுத் தலைவர் ஏ.எம்.ஜெமீலுக்கு நன்றி பாராட்டவும் நாம் கடமைப்பட்டுள்ளோம்.
கிழக்கு மாகாண சபையில் தமிழ்-முஸ்லிம்கள் இணைந்த ஆட்சி மலர வேண்டுமென்ற அவா, தமிழ், முஸ்லிம் மக்களிடையே மேலோங்கி நிற்கும் நிலையில் இந்தப் பிரேரணை நிறைவேற்றம் எதிர்காலம் குறித்த நம்பிக் கையை ஊட்டுகின்றது- என்றார். (ச-30)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பௌத்த மதகுரு பாலியல் துஷ்பிரயோகம் பாதிக்கப்பட்ட சிறுவன் வைத்தியசாலையில்

வவுனியா அட்டமஸ்கட பகுதியில் பௌத்த மதகுருவால் நடத்தப்பட்டு வரும் சிறுவர் இல்லமொன்றில் பராமரிக்கப் பட்டு வந்த 12 வயதுடைய சிறுவனொருவன் குறித்த பௌத்த மதகுருவினால் பாலியல் துன்புறுத்தலுக்குள்ளாக்கப் பட்ட நிலையில் வவுனியா வைத்தியசாலையில் சிகிச்சைக்காக சேர்க்கப்பட்டுள்ளான்.

இவ்விடயம் தொடர்பில் மேலும் தெரியவருவதாவது.

வவுனியா அட்டமஸ்கட பகுதியில் உள்ள விகாரையொன்றின் வவுனியாவில் சம்பவம் நடத்தப்பட்டு வந்த சிறுவர் இல்லமொன்றில் பராமரிக்கப்பட்டு வந்த சிறுவனொருவன் நீண்ட நாள்களாக ஓரினச் சேர்க்கைக்கு உட்படுத்தப்பட்டு வந்துள்ளான். இதனால் அச்சிறுவன் சிறுநீர் கழிப்பதற்கு அவன் சிரமப்பட்டமையினால் வவுனியா வைத்தியசாலையில் சிகிச்சைக்காகச் சேர்க்கப் பட்டிருந்தார்.

இந்த நிலையிலேயே அச் சிறுவன் விகாராதிபதியால் நீண்ட நாள்களாக பாலியல் துன்புறுத்தலுக்கு உள்ளாக்கப் பட்டு வந்தது தெரியவந்துள்ளது.

இது குறித்து வவுனியா வைத்தியசாலையினால் வவுனியா பொலிஸாருக்கு தெரியப்படுத்தப்பட்டுள்ளதுடன் சிறுவனின் தாயாரால் வவுனியா பொலிஸில் முறைப்பாடும் செய்யப்பட் டுள்ளது.

எனினும், இதுவரை சம்பந்தப்பட்ட பௌத்த குரு கைது செய்யப்படவில்லை என்றும் இச்சம்பவம் தொடர்பாக தகவல் தெரிவிக்க சிறுவர் நன்னடத்தை அதிகாரிகள் தயக்கம் காட்டி வருகின்றனர் என்றும் மக்கள் விசனம் தெரிவித்துள்ளனர்.



கொச்சிக்கடை ஸ்ரீ இராமநாதன்மாவத்தை ஸ்ரீ வீரமாகாளி அம்பிகை ஆலயத்தில் ஆலய அறங்காவலர் மற்றும் அறங்காவலர் சபையினரால் வடமாகாணசபை முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரன நேற்று கௌரவிக்கப்பட்டார். மாநகரசபை உறுப்பினர் வேலணை வேணியன் முதல்வருக்கு வாழ்த்துப்பாமாலை வழங்கினார். (சதாசிவம்)

# போரழிவுகள் குறித்து கணக்கெடுக்க முடிவு



போர் காலத்தில் ஏற்பட்ட மரணங்கள், காணாமல் போனவர்கள் மற்றும் ஆள்களுக்கும் சொத்துகளுக்கும் உண்டான சேதங்கள் தொடர்பாக ஒரு விசேட கணக்கெடுப்பை அரசு நடத்த வுள்ளது.

இந்தக் கணக்கெடுப்பு நவம்பர் 30 தொடக்கம் டிசெம்பர் 10 வரை நடைபெறும் என்று பொதுநிர்வாக மற்றும் உள்நாட்டலுவல்கள் அமைச்சின் பேச்சாளர் ஒருவர் தெரிவித்துள்ளார்.

2014 ஆம் ஆண்டு மார்ச் மாதம் நடக்கவுள்ள ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் ஆணைக்குழுவின் அமர்வுக்கு முன் கற்றறிந்த பாடங்களுக்கான நல்லிணக்க ஆணைக் குழுவின் பரிந்துரைகளின் படி நட்டஈடு வழங்கு வதற்காக அரசு இந்த கணக்கெடுப்பை நடத்தவுள்ளது.

இந்த விசேட கணக்கெடுப்பு 1983 இலிருந்து மே 2009 இல் யுத்தம் முடியும் வரையுள்ள காலத்தை அடக்கியதாக இருக்கும். இந்தக் கணக்கெடுப்பு நவம்பர் 30 தொடக்கம் டிசெம்பர் 10 வரை நடைபெறும்.

வீட்டுக்கு வரும் கிராம அதிகாரிக்கு துல்லியமான தகவலை வழங்குவதன் மூலம் பொதுமக்கள் இக் கணக்கெடுப்புக்கு உதவ வேண்டும் எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

# ஏ.ரி.எம். பண மோசடி செய்தவர் மாட்டினார்




குருநாகல், வாரியப்பொல - பமுணாகொட்டுவ பிரதேசத்தில் உள்ள நபர் ஒருவரின் ஏ.ரி.எம். அட்டையை பயன்படுத்தி பண மோசடியில் ஈடுபட்ட நபர் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

சந்தேகநபர் கடந்த மாதம் 22ஆம் திகதி இந்த பண மோசடி செய்துள்ள நிலையில் நேற்றுமுன்தினம் மாலை 4 மணியளவில் பமுணா கொட்டுவ பிரதேசத்தில் கைது செய்யப்பட்டுள்ளார் என பொலிஸார் தெரிவித்தனர்.

ஏ.ரி.எம். அட்டை மூலம் பண மோசடி செய்த நபர், குறித்த ஏ.ரி.எம். அட்டைக்கு உரியவரின் அயலவர் என பொலிஸார் குறிப்பிட்டனர்.

சந்தேகநபர் ஒரு இலட்சத்து அறுபத்து ஓராயிரம் ரூபாவை மோசடி மூலம் பெற்றுள்ளார். மேலதிக விசாரணைகளைப் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

# வட்டி வீதத்தை குறைத்தது மத்திய வங்கி



ශ්‍රී ලංකා මහ බැංකුව
இலங்கை மத்திய வங்கி
CENTRAL BANK OF SRI LANKA

வங்கி வட்டி விகிதாசாரத்தை தீர்மானிக்கும் வட்டி விகிதாசார கொள்கைகளை மேலும் தளர்த்துவதற்கு இலங்கை மத்திய வங்கி நடவடிக்கை எடுத்துள்ளது.

இதன் பிரகாரம் மீள் கொள்வனவு வீதம் 6.5 சதவீதத்திலும் நேர்மாற்று மீள்கொள்வனவு வீதம் 8 தசம் ஐந்து சதவீதத்திலும் பேணப்படவுள்ளன

அபிவிருத்திப் பணிகளுக்கான கடன் அளவை அதிகரிக்கும் நோக்கத்திற்காக கடந்த காலங்களில் பல்வேறு சந்தர்ப்பங்களில் இலங்கை மத்திய வங்கி நிதிக் கொள்கைகளை தளர்த்தும் நடவடிக்கை எடுத்தது.

பணவீக்கம் குறைந்துள்ள நிலையில் பொருளாதார வளர்ச்சி வேகத்தை அதிகரிப்பதற்காகவே வட்டி விகிதாசார கொள்கைகளைத் தளர்த்த நடவடிக்கை எடுத்ததாக மத்திய வங்கி குறிப்பிட்டுள்ளது.

இதேவேளை, கொழும்பில் நேற்று முன்தினம் நடைபெற்ற கொள்கை கற்கை நிலையத்தின் வருடாந்த சம்மேளனத்தில் இலங்கையின் பொருளாதார அபிவிருத்தி தற்போது எதிர் கொண்டுள்ள சவால்கள் தொடர்பில் கவனம் செலுத்தப் பட்டது.

# புலிகளுக்கு நிதி வழங்கிய குற்றச்சாட்டு சுவிஸ் பிரஜையை விடுவித்தது நீதிமன்று



சுவிஸ் பிரஜையும் பேர்ன் மாநிலத்தில் 'தாய் வீடு' பண மாற்று நிறுவனத்தின் உரிமையாளருமான நடராஜா கருணாகரன் கொழும்பு மேல் நீதிமன்றத்தினால் நேற்று முன்தினம் விடுதலை செய்யப் பட்டுள்ளார்.

தமிழீழ விடுதலைப் புலிகளுக்கு நிதியுதவி வழங்கினார் என்று குற்றம் சாட்டப்பட்டே சட்டமா அதிபரினால் கொழும்பு மேல் நீதிமன்றத்தில் இவருக்கு எதிராக வழக்குத் தாக்கல் செய்யப்பட்டிருந்தது.

இந்த வழக்கில் அரச தரப்பு சாட் சியங்களையும் குற்ற ஒப்புதல் வாக்கு மூலத்தையும் நிராக ரித்த மேல் நீதிமன்ற நீதிபதி லலித் ஜயசூரிய அவரை நேற்று முன்தினம் செவ்வாய்க் கிழமை விடுதலை செய்தார்.

மனுதாரர் சார்பில் சிரேஷ்ட சட்டத் தரணி கே.வி. தவராசா நீதிமன்றத்தில் முன்னிலையாகி வாதிட்டார். சந்தேகநபரான நட ராஜா கருணாகரன் இலங்கை வங்கியுடன் பண மாற்று வர்த்தக ஒப்பந்தத்தில் கையெ முத்திட இலங்கை வங்கியின் வேண்டுகோளையடுத்து இலங்கை வந்தார்.

அவர் கொழும்பு இன்டர் கொண்டினல் ஹோட்டலில் தங்கியிருக்கையில் 2010 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 19 ஆம் திகதி பயங்கரவாதத் தடுப்புப்பிரிவுப் பொலிஸாரினால் கைது செய்யப்பட்டார் என்பது குறிப்பிடத்தக்கது.

# ஆஸி. நாடுகடத்திய 16 பேருக்கு மறியல்



ஆஸ்திரேலியாவில் இருந்து திருப்பி அனுப்பப்பட்ட நிலையில், நாட்டை வந்தடைந்த இலங்கைப் புகலிடக் கோரிக் கையாளர்களில் 16 பேர் விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளனர்.

இலங்கைக்கு கடந்த திங்கட்கிழமை திருப்பியனுப்பப் பட்ட இந்தக் குழுவினர் நேற்று முன்தினம் நீதிமன்றத்தில் முன்னிலைப்படுத்தப்பட்டனர்.

சுமார் 40 சட்டவிரோத குடியேற்ற வாசிகள் ஆஸ்திரேலியாவில் புகலிடக் கோரிக்கை நிராகரிக்கப்பட்ட நிலையில் நாட்டுக்குத் திருப்பி அனுப்பப் பட்டனர். இவர்களில் 12 பெண்களும், 8 குழந் தைகளும் அடங்குகின்றனர்.

இந்தக் குழுவினர் கடந்த மாதம் 7 ஆம் திகதி புல்மோட்டையில் இருந்து படகுமூலம் கிறிஸ்மஸ் தீவுகளுக்கு சட்டவிரோதமாக சென்றுள்ளனர்.

இவ்வாறு சட்டவிரோதமாக ஆஸ்திரேலியாவுக்குச் செல்லமுயற்சித்த 16 பேர் விளக்கமறியலில் வைக்கப் பட்டதுடன், ஏனையவர்கள் பிணையில் விடுவிக்கப்பட் டுள்ளனர்.

# சிறுமியுடன் குடும்ப வாழ்க்கை புத்தளத்தில் இளைஞன் கைது

15 வயது சிறுமியை பாதுகாவலர்களிடம் இருந்து கடத்திச் சென்று அவ ளுடன் குடும்ப வாழ்க்கையில் ஈடுபட்டு வந்த 22 வயது இளைஞன் கைது செய்யப்பட்டுள்ளார் என புத்தளம் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

புத்தளம் பொலிஸ் பிரிவில் தலுவ - நிந்தெனிய பகுதியில் வசித்து வந்த சிறுமி கடந்த மார்ச் 3 ஆம் திகதி குறித்த கடத்தப்பட்டுள்ளார். சிறுமியின் தாய், மகளை தனது தாயிடம் ஒப்படைத்துவிட்டு வெளிநாட்டில் வேலைக்குச் சென்றுவிட்டார்.

பாட்டி வீட்டில் வளர்ந்து வந்த சிறுமி இளைஞர் ஒருவருடன் காதல் தொடர்பு பேணி வந்துள்ளார். அதன் விளைவாக அந்த இளைஞர்சிறுமியை பாட்டிக்குத் தெரியாது கடத்திச் சென்று குடும்ப வாழ்க்கையில் ஈடுபட்டு வந்துள்ளார்.

# சொத்து விவரத்தை தோற்றோர் இன்னமும் சமர்ப்பிக்கவில்லை

## தேர்தல்கள் செயலகம் தெரிவிப்பு




நடைபெற்று முடிந்த மாகாண சபைத் தேர்தலில் போட்டியிட்டு தோல்வியடைந்த வேட்பாளர்களில் பலர் தமது சொத்துக்கள் தொடர்பான விவ ரங்களை இதுவரையில் சமர்ப்பிக்கவில்லை என தேர்தல்கள் செயலகம் குறிப்பிட்டுள்ளது.

உள்ளூராட்சி சபைத் தேர்தல் சட்டங்களுக்கு அமைய, அவர்கள் தமது சொத்துகள் தொடர்பான விவரங்களை சமர்ப்பிக்க வேண்டுமென மேலதிக தேர்தல்கள் ஆணையாளர் ஆர்.எம். ஏ.எல்.ரத்நாயக்க தெரிவித்துள்ளார்.

இதுதொடர்பில் கவனம் செலுத்துமாறு அவர்களுக்கு அறிவித்துள்ளதாகவும் மேலதிக தேர்தல்கள் ஆணையாளர் சுட்டிக்காட்டியுள்ளார்.

இதேவேளை, தேர்தலில் வெற்றி பெற்ற அனைவரும் தமது சொத்துக்கள் தொடர்பான விவரங்களை தேர்தல்கள் செயலகத்துக்கு சமர்ப்பித்துள்ளனர் என்று ஆர்.எம்.ஏ.எல். ரத்நாயக்க கூறியுள்ளார்.

# இலத்திரனியல் அ'அட்டை அதிகாரிகளுக்குப் பயிற்சி



இலத்திரனியல் தேசிய அடையாள அட்டையை விநியோகிப்பது தொடர்பில் அதிகாரிகளுக்கு பயிற்சி வழங்கும் நடவடிக்கைகள் ஆரம்பிக்கப் பட்டுள்ளன.

இதன் முதற்கட்டமாக, திணைக்களத்தில் இணைத்துக்கொள்ளப்பட்டுள்ளபட்டதாரிகள் பயிற்றுவிக்கப்படவுள்ளனர் என்று ஆட்பதிவுத் திணைக்களம் தெரிவித்துள்ளது.

இலத்திரனியல் தேசிய அடையாள அட்டைக்கு மக்களின் தரவுகளை பெற்றுக் கொள்வது தொடர்பில் இதன் போது பயிற்சிகள் வழங்கப்படவுள்ளன எனத் தெரிவிக்கப் படுகின்றது.

அதன்பின்னர், மக்களிடம் தரவுகளை சேகரிக்கும் நடவடிக்கைகளை தாமதமின்றி ஆரம்பிக்கவுள்ளதாகவும் ஆட்பதிவுத் திணைக்களம் தெரிவித்துள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்
தலைமையகம்: 361, கஸ்தூரியார்வீதி, யாழ்ப்பாணம்
செய்தி: 021-222 9933, 222 9944, 5679933, 5679944
விளம்பரம்: 021-5671111 விநியோகம்: 021-5677222
செய்தி: 021-2229944, விளம்பரம்: 021-2229731
செய்தி : news@uthayan.com கருத்து: comments@uthayan.com
விளம்பரம்: advt@uthayan.com

## பெரும்போக்குத் தனம் மேலோங்கின் வினைப்பயன் 'பூமராங்' காக மாறும்!

தமிழ் மக்களின் உணர்வலைகள் உட்படத் தொடர்புடைய அனைத்துக் காரணிகளையும் கருத்தில் கொண்ட பின்னரே, கொழும்பில் பொதுநலவாய மாநாட்டில் பங்கு பற்றுவது குறித்துத் தீர்க்கமான முடிவு எடுக்கப்படும்.

இந்த மாநாட்டில் கலந்துகொள்வது குறித்து இந்தியப் பிரதமர் மன்மோகன் சிங் வெளியிட்ட முதலாவது கருத்து நிலை இது.

பிரதமர் மன்மோகன்சிங்கிடமிருந்து ஒரு சாதகமான அறிவிப்பைப் பெற்றுவிடுவதற்கு, இலங்கை வெளிவிவகார அமைச்சர் பீரிஸ் மேற்கொண்ட டில்லிப் பயணங்கள் வெற்றியளிக்கவில்லை. உரிய நேரத்தில் இந்தியாவின் அறிவிப்பு வெளிவரும் என்று சமீபத்தில் இலங்கை வந்து திரும்பிய இந்திய வெளிவிவகார அமைச்சர் சல்மான் குர்ஷித் தெரிவித்திருந்தார். முதல் தடவையாக இந்தியாவின் முடிவுக்கான சமிக்ஞைகள் இப்போது தென்படத் தொடங்கியுள்ளன.

இலங்கை மீது மனித உரிமை மீறல் குற்றங்களைச் சுமத்தியுள்ள தமிழ் நாட்டின் அனைத்துக் கட்சிகளும் இலங்கையில் நடைபெறும் பொதுநலவாய மாநாட்டை இந்தியா பகிஷ்கரிக்க வேண்டும் என்று கோருகின்றன. இதற்காக தமிழ்நாட்டில் தொடர் போராட்டங்கள் நடத்தப்படுகின்றன. பிரதான எதிர்க்கட்சியான பி.ஜே.பியும் பகிஷ்கரிப்புக் கோரிக்கையை விடுத்து வருகிறது. மத்தியில் ஆட்சி புரியும் காங்கிரஸ் தலைவர்கள் சிலரிடமும் பகிஷ்கரிப்புக்கு ஆதரவான கருத்து நிலவுகிறது.

இந்த எதிர்ப்புகளை மீறி மாநாட்டில் இந்தியா கலந்து கொள்ளுமானால் அடுத்த ஆண்டு நடைபெறும் தேர்தலில் தமிழ்நாட்டில் தனது ஆதரவுத் தளத்தை காங்கிரஸ் முற்றாக இழந்துவிடலாம். நரேந்திரமோடி தலைமையில் பி.ஜே.பி. தனது ஆதரவைப் பெருக்கிக் கொள்ளும் செயல் திட்டங்களை ஆரம்பித்துள்ள நிலையில், தமிழ்நாட்டு மக்களின் ஆதரவை மன்மோகன் சிங் இழந்துவிடத் தயாராக இருப்பார் என்று எதிர்பார்க்க முடி யாது.

கடந்த காலங்களில் இலங்கைப் பிரச்சினையில் இந்தியாவின் செயற்பாடுகள் தமிழ் மக்களின் நம்பிக்கையைப் பெற்றுக்கொள்ளும் விதத்தில் அமைந்திருக்கவில்லை. ஆனால் வடமாகாணசபைத் தேர்தலின் பின்பு 13ஆவது அரசமைப்புத் திருத்தத்தை இலங்கை முழுமையாக அமுல்செய்யவேண்டும், 13க்கு அப்பால் சென்று தீர்வு காணவேண்டும் என்று இந்தியா அடிக்கடி வலியுறுத்தி வருகிறது.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பை புறக்கணிக்க முடியாத நிலைமையை வடமாகாணத் தேர்தலும் இந்தியாவுக்கு ஏற்படுத்தியிருக்கலாம். பொதுநலவாயத்தின் அடிப்படைக் கொள்கைகளை இலங்கை அரசு அப்பட்டமாக மீறியிருக்கிறது. இதில் எந்தவித சர்ச்சைக்கும் சந்தேகத்துக்கும் இடமில்லை என்பது கூட்டமைப்பின் நிலைப்பாடு. அதனை இந்தியாவிடம் அது இடித்துரைத்துள்ளது.

சுயநலத்தைக் கருத்தில் கொள்ளாமல் மாநாட்டில் கலந்துகொள்வதில்லையென்று கொள்கை அடிப்படையில் கனடா எடுத்துள்ள தீர்மானத்தைப் போன்று, இந்தியாவும் மேற்கொள்ள வேண்டும் என்று கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர் சுமந்திரன் கருத்து வெளியிட்டுள்ளமை ஊன்றிக் கவனிக் கப்பட வேண்டியதாகும்.

இந்தியாவின் முடிவு பெரும்பாலும் உறுதியாகிவிட்டது என்பதாகவே தெரிகிறது. கனடா போன்று இந்தியாவும் அமைச்சர் ஒருவரை அனுப்பக்கூடும். கனடாப் பிரதமரின் வழியில் இந்தியப் பிரதமரும் மாநாட்டைப் பகிஷ்கரிப்பாரானால், இலங்கைக்கு ஏற்படும் பெரும் ராஜதந்திரத் தோல்வியாகவே இதனைக் கருதவேண்டும்.

தனது செயற்பாடுகள் எதுவும் தவறானவை அல்ல என்ற பெரும் போக்குத் தனத்துடன் இலங்கை அரச பிரதானிகளும், அதன் ஆலோசகர்களும் ஆலாய்ப் பறந்தாலும், அரசியல் வினைப் பயன் "பூமராங்" போன்று திரும்ப வந்து தாக்கும் என்ற யதார்த்தத்தை (Realistic) உணராத வரை, இத்தகைய நெருக்கடிகளும் தாக்கங்களும் வழமையாகிவிடும்.

# தலைமீது வலிந்து தாங்கும் சுமைகள்

சிங்கள மூலம்: மவ்பிம
தமிழில்: வீ.எஸ்.ரீ

கிறிஸ் நாட்டில் ஒலிம்பிக் போட்டிகள் இடம் பெற்ற வேளையிலும், ஒலிம்பிக் கிராமத்தை அண்டிய பகுதிகள் யாவும் நவீன மயப்படுத்தப்பட்டன; அழகு படுத்தப்பட்டன. அதற்காக பெருந்தொகை அரச நிதி செலவிடப்பட்ட வேளையில், கிறிஸ் நாட்டுப் பொதுமக்களும் 'நாங் கள் செலுத்தும் வரிப் பணத்தைக் கொண்டே அரசு இத்தகைய ஆடம்பரச் செலவினங்களை மேற்கொள்கிறது' என்று குற்றஞ்சாட்டி விமர்சித்தார்கள்.

முச்சகரவண்டியொன்றை வாடகைக்கு அமர்த்திக் கொண்டு ஓரிடத்துக்குப் பயணித்துக் கொண்டிருந்தபோது, பாதையில் கிளம்பிய புழுதியால் சிரமப்பட்டு "மூச்சு விட முடியவில்லையே" என்று அலுத்துக் கொண்டார் அந்த முச்சக்கரவண்டியின் சாரதி. தொடர்ந்து "எதற்காகத்தான் இந்தப் பாதைகளை உடைத்து மீண்டும் திருத்துகிறார்களோ தெரியாது" என்றும் பிரலாபித்துக் கொண்டார் அவர்.

கொழும்பு நகர வீதி ஓரங்களிலுள்ள நடைபாதைகள் கடந்த சில நாள்களாக செப்பனிடப்பட்டு வர்ணச் சிமெந்துக் கற்கள் பதிக்கப்படுகின்றன.

"பொதுநலவாய நாடுகளின் உச்சி மாநாட்டுக்கு முன்னதாக வெளிப்புற எல்லை மதில்களுக்கு வர்ணப்பூச்சுப் பூசி அழகுபடுத்துமாறு எமக்கு அறிவித்திருக்கிறார்கள்" என்று றோஸ்மீட் பிளேஸ் வீதிக்குத் திரும்பும் வழியிலுள்ள வீடுகளில் உரிமையாளர்கள் சிலர் பெருமூச்சோடு தெரிவித்தனர்.

இத்தனை அத்தனை தடபுடல் ஏற்பாடுகளுக்கும் காரணமான பொதுநலவாய நாடுகளின் தலைவர்களது மாநாட்டுக்கு வருகை தரவிருக்கும் பிரிட்டனின் முடிக்குரிய இளவரசர் சார்ள்ஸ் இலங்கையில் தங்கியிருக்கும் நாள்களில் கொழும்பு கறுவாக்காடு றோஸ்மீட் பிளேஸில் - முன்னர் பண்டார நாயகா குடும்பத்தினரின் வாசஸ்தலம் இருந்த இடத்தில் - தற்போது அமைந்துள்ள டின்ரர்லஸ் ஹோட்டலிலேயே தங்கவுள்ளாராம். அந்தக் ஹோட்டலை அண்டியுள்ள பகுதிகளிலுள்ள வீடுகள், அலுவலகங்களின் வெளி மதிற்சுவர்கள் அழகுபடுத்தப்பட்டுவருவது இளவரசர் சார்ளிக் கண்களுக்கு கொழும்பு நகரின் வனப்பை எடுத்துக்காட்டுவதற்காகவே.

இதற்காக அரசு செலவிடும் பணம் எமது வரிப்பணமல்லவா? என்ற கேள்வி பொது மக்களிடமிருந்து பெருமூச்சுடன் வெளிப்படுகிறது.

இதேபோன்ற விதத்தில்தான் கிறிஸ் நாட்டில் ஒலிம்பிக் போட்டிகள் இடம் பெற்ற வேளையிலும், ஒலிம்பிக் கிராமத்தை அண்டிய பகுதிகள் யாவும் நவீன மயப்படுத்தப்பட்டன; அழகு படுத்தப்பட்டன. அதற்காக பெருந்தொகை அரச நிதி செலவிடப்பட்ட வேளையில், கிறிஸ் நாட்டுப் பொதுமக்களும் 'நாங்கள் செலுத்தும் வரிப் பணத்தைக் கொண்டே அரசு இத்தகைய ஆடம்பரச் செலவினங்களை மேற்கொள்கிறது' என்று குற்றஞ்சாட்டி விமர்சித்தார்கள்.

அரசின் மீதான அந்த நாட்டுப் பொது மக்களது அதிருப்தி படிப்படியாக உயர்வடைந்து கிறிஸ் நாட்டுப் பொது மக்களை அரசுக்கு எதிராகக் கொதித்தெழ வைத்தது.

ஆனாலும் கிறிஸ் நாட்டை நிர்வகித்த அரசோ, ஒலிம்பிக் போட்டிகளை ஆடம்பரமாக நடத்திக்காட்டி உலக நாடுகள் மத்தியில் பெருமதிப்பைத் தேடிக்கொள்ளும் நோக்குடன் செயற்பட்டது. அரசின் அத்தகைய கட்டுப்பாடற்ற செலவீனம் காரணமாக, நாட்டின் திறைசேரி குறுகிய காலத்தில் வெறுமையாக நேர்ந்தது. நாட்டில் கடும் பொருளாதாரச் சிக்கல் தலைதூக்கியது. திறைசேரியில் பணம் இல்லாமையால் பதினையாயிரம் வரையான அரச ஊழியர்கள் வீடுகளுக்கு அனுப்பப்பட்டனர். அரச ஊடகங்கள் யாவும் அரசினால் மூடப்பட்டன. பொருளாதாரச் சிக்கல் உயர்வடைந்ததையடுத்து, அரச தரப்புக்குள்ளேயே அரசியல் சிக்கல்கள் உருவாகின. அரசின் கூட்டணிக் கட்சிகள் அரசிலிருந்து வெளியேறப் போவ தாக மிரட்ட ஆரம்பித்தன. வங்கிகளின் செயற்பாடுகள் யாவும் கண் முன்னா லேயே வீழ்ச்சி கண்டன.

பொதுநலவாய நாடுகளின் மாநாட்டை கொழும்பில் நடத்தப் போய் இலங்கை அரசும் கிறிஸ் நாட்டில் இடம்பெற்றமை போன்ற சிக்கலில் மாட்டிக் கொள்ள நேரிடும்மா எனச் சிலர் சந்தேகிப்பதைத் தவறெனக் கருத முடியாதுள்ளது.

தற்போது பொதுநலவாய நாடுகளின் அமைப்பின் நிர்வாகச் செயற்பாடுகளுக்கு பெருமளவில் நிதியைச் செலவிடும் கனடா, இம்முறை இலங்கையில் மாநாட்டை நடத்துவதை ஆரம்பத்திலிருந்தே தான் எதிர்த்து வந்ததாகவும், அதன் காரணமாக மாநாட்டில் கனடியப் பிரதமர் கலந்து கொள்ளப் போவதில்லை எனவும் உறுதிபடத் தெரிவித்துவிட்டது. அதுமட்டுமன்றி அமைப்பை நடத்திச் செல்வதற்காகத் தான் வழங்கிவரும் பெருந்தொகையிலான நிதி வழங்கலைக் குறைத்துக் கொள்ளப் போவதாகவும் மிரட்டியுள்ளது. பொதுநலவாய நாடுகளின் அமைப்பின் செயலாளர், இலங்கை அரசுக்கு ஆதரவான விதத்தில் பக்கச் சார்பாகச் செயற்படுவதாகவும் கனடா குற்றஞ் சாட்டியுள்ளது.

கனடாவின் இத்தகைய அச்சுறுத் தலைத் தமது கைகளில் எடுத்துக் கொண்ட பிரிட்டன் அரச தரப்பு நாடாளுமன்ற உறுப்பினர்களில் சிலர், கொழும்பில் இடம்பெறவுள்ள மாநாட்டில் கலந்து கொள்ளும் பிரிட்டன் பிரதமர் கமரூனின் முடிவைக் கண்டித்து விமர்சித்துள்ளனர். அது மட்டுமன்றி பொதுநலவாய நாடுகளின் அமைப்பை நடத்திச் செல்ல பிரிட்டன் வழங்கிவரும் நிதி உதவியைக் குறைத்துக் கொள்ள பிரிட்டன் அரசு தீர்மானித்துள்ளதாக அண்மையில் அந்த நாட்டு வார பத்திரிகைகள் செய்தி வெளியிட்டுள்ளன.

அடுத்த மாதம், நவம்பரில் கொழும்பில் இடம்பெறவுள்ள பொதுநலவாய நாடுகளின் தலைவர்களது மாநாட்டில் வைத்து ஜனாதிபதி மஹிந்த, எதிர்வரும் இரண்டு ஆண்டுகளுக்கான அந்த அமைப்பின் தலைமைப் பதவியைக் கையேற்கவுள்ளார். அந்த இரண்டு ஆண்டு கால இடைவெளியில் பொதுநலவாய நாடுகளின் அமைப்பின் செயலர் அலுவலகத்தை நிர்வாக ரீதியில் செயற்பட வைக்கும் பொறுப்பு அதன் தலைவர் என்ற ரீதியில் ஜனாதிபதி மஹிந்தவைச் சாரப் போகிறது. தற்போதைய நிலையில் அமைப்பை நிர்வகிப்பதற்காகத் தாம் வழங்கிவரும் நிதி உதவியை கனடா மற்றும் பிரிட்டன் ஆகிய நாடுகள் நிறுத்திக் கொண்டால், அமைப்பின் நிர்வாகத் தேவைக்கான நிதியை எந்த விதத்திலாவது தேடிக்கொள்ள வேண்டிய பெரும்பொறுப்பும் மஹிந்தவின் தலை மீது விழ நேரிடும்.

பொதுநலவாய நாடுகளின் தலைவர்களது மாநாட்டை இலங்கையில் நடத்தப்போய் இலங்கையும் கிறிஸ் நாட்டைப் போன்று பொருளாதாரச் சிக்கலில் மாட்டிக் கொள்ள நேரிடக்கூடும் என சிலர் எதிர்வு கூறல் தெரிவித்துள்ளனர். மரத்தால் விழுந்தவனை மாடேறி மிதித்தது போன்று பொதுநலவாய நாடு களின் அமைப்பை நிர்வகிக்க நிதி தேட வேண்டிய நிலை ஏற்பட்டால் அது பிச்சைக்காரனின் பிட்சா பாத்திரத்தில் சனீஸ் வரன் உட்கார்ந்ததைப் போன்ற நிலையையே ஜனாதிபதி ராஜபக்ஷவுக்கு ஏற்படுத்தும்.

உண்மையில் பொதுநலவாய நாடுகளின் தலைவர்கள் மாநாட்டை இலங்கையில் நடத்த பிரிட்டனை இணங்க வைப்பதற்கு இந்தியா கடும் முயற்சி எடுத் தமை, நாட்டின் வட பகுதியின் அரசியல் அதிகாரத்தை தனது கட்டுப்பாட்டில் எடுத்துக் கொள்ளும் உள்நோக்கத்திலேயே ஆகும். அது மட்டுமன்றி சம்பூர் அனல் மின் நிலையம் போன்ற தனக்கு இலாபமளிக்கும் வேலைத் திட்டங்களைப் பெற்றுக் கொள்ளும் சுயநல நோக்கிலாகும். பிரிட்டன் மகாராணி பங்குபற்றாத மாநாடாக இந்தக் கொழும்பு மாநாடு அமையப் போகிறது. பிரிட்டன் பிரதமரோ தாம் மாநாட்டில் கலந்து கொண்டு ஜனாதிபதி மஹிந்தவுக்கு காட்டமான செய்தியொன்றை விடுக்கப் போவதாகச் சூளுரைத்து வருகிறார். பிரிட்டன் பிரதமர் கமரூன் கூட நவநீதம்பிள்ளை போன்று குற்றம் குறை கண்டுபிடித்துக் குற்றஞ்சாட்டி விமர்சித்து விட்டுப், போவதற்கே மாநாட்டுக்கு வருகை தரவுள்ளார். அதற்குப் பின்னர் பொதுநலவாய நாடுகளின் அமைப்பின் பலவான்களான கனடாவும், பிரிட்டனும் அந்த அமைப்பை மஹிந்தவின் தலை மீது சுமத்திவிட்டு கைகளைக் கழுவிக் கொள் ளப் போகின்றன.

வழிபாட்டுக்கெனச் சென்ற தேவாலயத்தின் கூரை இடிந்து தலைமீது விழுந்ததெனக் கதையொன்று உண்டு. பொதுநலவாய நாடுகளின் அமைப்பின் தலைமைப் பொறுப்பை ஏற்க ஆவலோடு காத்திருக்கும் ஜனாதிபதி மஹிந்தவுக்கு அத்தகையதொரு இக்கட்டுநிலை ஏற்படக் கூடுமா என்பது குறித்து தற்போது எதனையும் உறுதியாகக் கூற முடியாதுள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உலக வறுமை ஒழிப்பு தினம்

பீ.ஏ.அந்தோனிமார்க்

உலகில் 40 சத வீதமானோரும், இலங்கையில் 55 சத வீதமானோரும், வறுமையின் பிடியில் சிக்கி உள்ளார்கள். 2000 ஆம் ஆண்டு செப்ரெம்பர் 17 ஆம் திகதி 189 நாடுகள் ஒன்று சேர்ந்து நியூயோர்க் நகரில் 2015 ஆம் ஆண்டு முடிவடைய முன்னர் உலகின் வறுமையை குறைக்க வேண்டுமென்ற ஐ.நா. மிலேனியம் அபிவிருத்தி இலக்கை பிரகடனப்படுத்தினர். இலங்கையின் அப்போதைய ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவும் இந்த மாநாட்டில் பங்குபற்றி அந்தப் பிரகடனத்தில் கையொப்பமிட்டார்.

உலக சனத்தொகை 700 கோடியையும் தாண்டியுள்ளது. 2012 ஆம் ஆண்டு புள்ளி விவரங்களின்படி இலங்கையின் குடிசனம் 20 கோடிக்குச் சற்று அதிகமாகும். அதாவது 20 கோடியே 277597 பேர் ஆகும். இவற்றில் கிராம வாசிகள் தொகை 17 கோடிக்கு அதிகமாகும். ஆனாலும் 2008 ஆம் ஆண்டு கணக்கெடுப்பின்படி 13 கோடிக்கும் அதிகமான மக்கள் மிகவும் வறிய கிராம வாசிகளாவர். இதன்படி 55 சதவீதமான மக்கள் வறுமையின் பிடியில் சிக்கியுள்ளனர். ஐ.நா. மிலேனியம் அபிவிருத்தி இலக்கின் படி வருடா வருடம் 2 கோடி 60 லட் சம் மக்களின் வறுமையை அகற்ற முடியுமென அறிவிக்கப்பட்டது. ஆனாலும் வருடா வருடம் 21 லட்சம் மக்களின் வறுமையை மட்டுமே போக்க முடிந்ததாக அறிய வந்துள்ளது. எனவே வறுமையைக் குறைக்க இன்னமும் பல ஆண்டுகள் செல்லும்.

1948 ஆம் ஆண்டு மனித உரிமைச் சட்டங்களின் பரிணாம வளர்ச்சியாக உணவு பாதுகாப்பு அடிப்படை உரிமைகளில் ஒன்றாக பிரகடனப்படுத்தப்பட்டுள்ளது. அதன்படி குடிமக்களின் உணவுத் தேவைகளைப் பூர்த்தி செய்ய வேண்டியது அந்தந்த நாட்டு அரசின் கடமையாகும். நமது நாட்டின் தேவையை நிறைவு செய்வதற்கு புதுமையான நவீன செயற்பாடுகள் தேவை. நீண்ட காலம் நிலைத்து நிற்கக் கூடியதான கொள்கை அடிப்படையிலான விவசாய செயல்திற்றிட்டங்களை நடைமுறைப்படுத்துவதன் மூலம் தேவையான உணவுகளை உற்பத்தி செய்ய முடியும். இந்த நோக்கங்களைப் பற்றி ஒரு திட்டவட்டமான தெளிவும் இருக்க வேண்டும்.

அப்படி இல்லாவிட்டால் குறைந்த உற்பத்தியைத்தான் பெறமுடியும். கொள்கைத் திட்டங்களை உருவாக்கும் போது மிலேனிய அபிவிருத்தியின் இலக்குகளை உள்வாங்க வேண்டும். இவை வறுமையை ஒழிப்பதற்குப் பெரும் பங்களிப்பைச் செய்யும்.



1. வறுமையை அடியோடு அகற்றுதல்.

2. சர்வதேச தர அடிப்படையில் கல்வியைப் பெறுதல். நாட்டில் இடம் பெற்ற போரினால் சிறு வர்களின் கல்வி பாதிக்கப்பட்டுள் ளது. வன்னிப் பிரதேசத்தில் 72,000 க்கு மேற்பட்ட சிறுவர்கள் பாட சாலைக்குச் செல்வதில்லை. 14 வய துக்குக் குறைந்த சிறுவர்கள் பாடசாலைக்குச் செல்வதை கண்டிப் பான சட்டங்களின் கீழ் கொண்டு வரல்.

3. பாலியல் சமத்துவத்தை மேம்படுத்தி பெண்களுக்கு அதிகாரமளித்தலைப் பலப்படுத்துதல். ஆரம்பக் கல்வி இரண்டாந்தரக் கல்வியை வழங்குவதுடன் பெண்களுக்குரிய சட்டபூர்வமான உரிமைகள், தொழில் வாய்ப்புகள், அரசியல் உரிமைகளை வழங்குதல்.

4. சிசு மரணத்தைக் குறைத்தல்.

5. தாய்மாரின் ஆரோக்கியத்தை மேம்படுத்துதல். பிரசவத்தின் போது தாய் அல்லது பிள்ளையின் இறப்புக்களைக் குறைத்தல். குடும்பக் கட்டுப்பாட்டுச் சேவைகளை மேம்படுத்தல். பிரசவத்துக்கு முன்னதான, பின்னான காலங்களில் தாய்மாருக்கும் சிசுக்களுக்கும் உரிய தரம் வாய்ந்த பராமரிப்புகளை வழங்குதல். தாய்மாரின் போஷாக்கு குறைவை நிவர்த்தி செய்தல்.

6.எச்.ஐ.வி., எயிட்ஸ், மலேரியா, டெங்கு, சிக்குன்குனியா போன்ற நோய்கள் பரவாது தடுத்தல்.

7. பாதுகாப்பான சுற்றாடலை ஏற்படுத்துதல். கொள்கைத் திட்டங்களில் சுற்றாடல் பாதுகாப்பை உள்வாங்கல். சுற்றாடலை பாதுகாத்தலுடன் சுற்றாடல் சம்பந்தமான வழங்களைப் பாதுகாத்து அபிவிருத்தி செய்தல். சுத்தமான குடிதண்ணீரை வழங்குதல். நல்ல சுகாதார சேவையை வழங்குதல். வசதியான வீடுகளைக் கட்டிக் கொடுத்தல். சாதி, சமய, இன, பால் பேத மற்ற சூழலை உருவாக்கல்.

8. அபிவிருத்திக்கு சர்வதேசத்தின் பங்களிப்பைப் பெற்றுக் கொடுத்தல், கடன் வசதி அளித்தல், வியாபாரத் தொடர்புகளை ஏற்படுத்திக் கொடுத்தல், நல்ல சந்தை வாய்ப்பைப் பெற உதவி செய்தல், தொழில்நுட்ப உதவிகளையும் இயந்திர சாதனங்களையும் வழங்குதல், அரசியலில் பெண்களின் பிரதிநிதித்துவத்தைப் பெற்றுக் கொடுத்தல், சுகாதார வசதி, மருத்துவ வசதி இலவசக்கல்வி, இலவச உணவு முத்திரை போன்றவற்றை வழங்குதல். ஆனால் இன்று பிரதேசவாரியாக பார்க்கும் போது சமவளப் பகிர்வு இல்லாத காரணத்தால் வருமானத்தில் பெரும் வித்தியாசங்கள் காணப்படுகின்றன.

வறுமை, நோய்த்தடுப்பு, சிறுவர்களின் போஷாக்கின்மை, கர்ப்பிணித் தாய்மாருக்கு இரத்தக் குறைவால் ஏற்படும் நோய்கள், பெண்களின் வேலைவாய்ப்பின்மை, தொழில் நிலையங்களில் வழங்கப்படும் குறைவான ஊதியம், தரக் குறைவான கல்வி போன்றன பிரதேசவாரியாக சமத்துவம் இல்லாது வித்தியாசமாகக் காணப்படுகின்றன.

வடக்கு-கிழக்கு மாகாணங்களில் சகல தொழில் வளங்களை இழந்து தலைநிமிர முடியாத நிலையில் தொழில் வசதிகள் இன்றி பலர் நடைப் பிணமாக வாழ்கின்றார்கள். போரி னால் கணவன், மனைவி, பிள்ளை களைப் பறிகொடுத்து உள நோய்க்கு உட்பட்டு வாழ்கிறார்கள். இவர்களின் தொழில் முயற்சியான சொந்த வீடுகள், வயல் காணிகள், மீன்பிடிக்கும் கடல் பிரதேசங்கள் இராணுவத் தினாலும் பெரும் பான்மை சிங்களவர்களாலும் பலாத்காரமான முறையில் ஆக்கிர மிக்கப்பட்டு தமிழர்களின் வருமானங்கள் சூறையாடப் படுகின்றன. ஜனநாயக முறைப்படி இவை நிறுத்தப்பட்டு தமிழ் மக்கள் தங்கள் வாழ்விடங்களில் குடியேறி கடல் தொழிலையும் விவசாயத்தை யும் சுதந்திரத்துடன் செய்வதற்கு இலங்கை அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும். சகல பிரதேசங்களிலும் வருமானம் சமத்துவமாக இல்லை. முன்னேற்றங்களை அவதானிக்கும் போது வருமானமற்ற கிராமங்கள் அதிகரித்து வருகின்றன. இதனால் இலங்கையின் தேசிய வருமானத்தில் பெரும் பாதிப்பு ஏற்பட வாய்ப்புகள் உண்டு.

வடக்கு, கிழக்கு மாகாணங்களில் தொடர்ச் சியான போரினாலும், இடப்பெயர்வு கண்ணிவெடிகளாலும், சுனாமியாலும், தொற்று நோய்களின் பெருக் கத்தினாலும் வறுமை மேலும் மேலும் அதிகரித்துள்ளது. ஆனா லும் 75 வீதமான மக்கள் தண்ணீர் வசதி உடைய மக்களாக வாழ்ந் தாலும் சில மாவட்டங்களில் குடி தண்ணீர் வசதியற்ற ஏழை மக்கள் பலர் வாழ்கின்றார்கள். வடமாகாணத்தில் கிணறுகள் பாழ் அடைந்து இருப்பதனால் அங்கு குடிதண்ணீ ருக்கு பஞ்சம் நிலவுகிறது. இது அம் பாறையில் 25 வீதமும், நுவரெலி யாவில் 20 வீதமும், புத்தளத்தில் 19 வீதமும், அநுராதபுரத்தில் 17 வீதமும் ஆகும். நிறைகுறைவான 5 வயதுக்கு கீழ்ப்பட்ட சிறுவர்களின் விவரம் தேசிய ரீதியில் இலங்கை யில் சராசரி 29 வீதமாகும். நுவரெலியா, பதுளை, அம்பாந்தோட்டை, புத்தளம் போன்ற மாவட் டங்களில் இது 40 வீதம் ஆகும். வடக்கு,கிழக்கு மாகாணங்களில் போர் பிரதேசங்களில் நிறை குறைந்த சிறுவர்களின் தொகை மிகவும் அதிகமாகும். பிறக்கும் குழந்தைகளின் இறப்பு வீதம் 2001 ஆம் ஆண்டு புள்ளி விவரங்களின் படி ஒரு லட்சம் பேருக்கு 41 பேர் ஆகும். இலங்கை ஓர் விவசாய நாடு.

நமக்கு தேவையான உணவுகளை உள்நாட்டிலேயே உற்பத்தி செய்ய முடியும். நாம் உற்பத்தி செய்யும் உணவு நமது தேவைக்கே போதுமானதல்ல. எனவே உணவுப் பொருள்களை வெளிநாடுகளில் இருந்து பெருந்தொகை பணத்தை செலவு செய்து இறக்குமதி செய்கிறோம். காரணம் உணவு உற்பத்திக்கு ஏற்படும் உயர் உற்பத்திச் செலவாகும். இதற்குக் காரணம் உரம், கிருமிநாசினி, விதைகள், உள்ளீடுகள் போன்றவற்றின் விலையேற்றம். நைதரசன் கலந்த உரங்களை இறக்குமதி செய்வதற்கு 40 கோடி ரூபா வருடா வருடம் செலவு செய்கிறோம். நைதரசனை உற்பத்தி செய்யும் பயிர் வகைகளைப் பயிரிடுவதன் மூலம் நைதரசன் கலந்த உரவகைகளின் இறக்குமதியைக் குறைக்கலாம். விவசாயத்துக்கு நீர்பாய்ச்சும் குளங்கள் வடக்கு, கிழக்கு மாகாணங்களில் உள்ளன. இவற்றை முறையாக பராமரித்தால் உற்பத் தியை அதிகரிக்க முடியும். ஒட்டு மொத்தமாக இலங்கையில் 25 வீதமான மக்கள் அதிகூடிய வறுமையில் வாடுகிறார்கள். 5 வயதுக்கு குறைந்த சிறுவர்களில் 20 வீதமானோர் நிறை குறைந்தவர்கள். எனவே வறுமையை ஒழிக்க வேண்டுமாயிருந்தால் அரசின் முக்கிய ஸ்தாபனமாகிய திட்டமிடல் அமைச்சு மிகவும் கவனமெடுத்து விஞ்ஞானத்தையும் தொழில் நுட்பத் தையும் பயன்படுத்தி சிறந்த கொள்கைத் திட்டத்தை உருவாக்கி உற்பத்தியை அதிகரிக்க வேண்டும். வடமாகாணத்தில் முன்னோடிச் சமூக ஊக்குவிப்புத் திட்டங்களை ஆரம்பிக்க வேண்டும். கிராம மக்களை அணிதிரட்டி அபிவிருத்தித் திட்டங்களை ஆரம்பிக்க வேண்டும். உயர்நிலை விவசாய அபிவிருத்தித் திட்டங்கள் மூலம் உச்ச விளைவைப் பெறல். சிறுகைத் தொழில் மயமாக்கி கைத்தொழில் கிராமங்களை ஏற்படுத்துதல். வேலையற்றோர் தொழிலற்ற இளைஞர்களுக்கு புதிய வேலைத் திட் டங்களை உருவாக்கல். பெண்களை ஊக்கப்படுத்தி நவீன வீட்டுத் தோட் டங்களை அதிகரித்தல். இயற்கை வளங்களை நீண்டகாலப் பாவிப்புக்கான கட்டமைப்புக்களை உருவாக்கல். நீதி நியாயமான வர்த்தக செயற்பாடுகளை ஊக்குவித்தல். உள்ளக விவசாயத்துக்கு தேவையான உள்ளீடுகளை நேர காலத்துடன் வழங்குதல். புதிய நீர்ப்பாசன வாய்க் கால் முறைகளையும் குளங்களை யும் அமைத்தல், புனரமைத்தல். சுத்தமான குடிதண்ணீரை வழங் கல். எனவே மக்களை ஒன்றுதிரட்டி விழிப்புணர்வு மூலம் பசுமைப் புரட்சியை ஏற்படுத்தி அபிவிருத் தியை ஏற்படுத்தி தன்னி றைவு அடை வதுடன் ஏற்றுமதியை அதிகரித்து வெளிநாட்டு மூலதனத்தை சம் பாதிக்க வேண்டும்.

# கவித்துவத்தின் எல்லையைத் தொட்ட கவிஞர் கண்ணதாசன்

இன்று 32 ஆவது நினைவு தினம்

கவியரசர் கண்ணதாசனின் 32 ஆவது நினைவுதினம் இன்றாகும். இந்த மாபெரும் கவிஞரை- கவியரசரைப்பற்றி உலகெலாம் பரந்து வாழும் தமிழ் மக்கள் இன்று ஒரு சில நிமிடமாவது நினைவு கூராமல் இருக்கமுடியாது.

மானிட வாழ்வில் அவரது நாளாந்த இன்பதுன்பங்களை அவரது தத்துவப் பாடல்கள் மற்றும் ஏனைய பாடல்களையும் பட்டிதொட்டியெங்கும் வானொலியிலும் காணொளியிலும் கேட்டும், பார்த்தும் நாம் மகிழக்கூடியதாக இருக்கின்றது. எனினும், தமிழகத்தில் மட்டுமல்லாது, இலங்கையிலும் மலேஷியா போன்ற இன்னும் பல நாடுகளிலும், நாளாந்த செய்தித் தாள்களிலும், வார, மாத சஞ்சிகைகளிலும் அவரது தத்துவ, ஞான, காதல் வரிகள் காணப்படுகின்றன. தமிழகத்திலிருந்து இலங்கை மற்றும் ஏனைய நாடுகளுக்குச் செல்லும் தமிழ் அறிஞர்களோ இலங்கை அறிஞர்களோ தங்கள் மேடைப் பேச்சின் மத்தியில் கவியரசரின் சில வரிகளையாவது குறிப்பிடத் தவறுவதில்லை.

இம் மாபெரும் கவிஞரை 1983ஆம் ஆண்டு தொடக்கம் நினைவுகூரும் பாக்கியம் கிடைத்துள்ளது. கவியரசரின் வாரிசான கவிஞர் வாலியின் 3ஆவது மாத பிரிவின் துயரையும் இம்முறை நினைவுகூரவுள்ளோம். இலங்கையின் சிரேஷ்ட பத்திரிகையாளரும் 'வீர கேசரி'யின் முன்னாள் பிரதம ஆசிரியரும், 'சுடர் ஒளி' பத்திரிகை யின் முன்னாள் செய்தி ஆலோ சகருமான நடராஜா மற்றும் 'தினக்குரல்' பத்திரிகையின் முன்னாள் [illegible] எழுத் தாளருமான ரவிவர்மன் (பி.மகேந் திரராஜா) ஆகியோருக்கும் கண்ணதாசன் நினைவு நிகழ்வில் அஞ்சலி செலுத்த தீர்மானிக்கப்பட்டுள்ளது.



இந்த நினைவு கூரும் நிகழ்ச்சி எதிர்வரும் 27ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை வெள்ள வத்தை, கொழும்பு - 06, கொழும்பு தமிழ்ச் சங்க ஒழுங்கையில் அமைந்துள்ள கவிஞர் வாலி அரங்கில் மாலை 5.00 மணிக்கு இடம் பெறவுள்ளது. இவ்விழாவுக்கு முன்னிலை விருந்தினராக ஜனநாயக மக்கள் முன்னணியின் தலைவர் மனோ கணேசன் வருகைதரவுள்ளார். அதே நேரம், விழாவின் தலைவராக முன்ன ணியின் உபசெயலாளரும், கொழும்பு மாநகரசபை உறுப்பினருமான சண்குகவரதன், கண்ணதாசன் நினைவுப் பெருவிழா நிகழ்ச்சிகளை வழிநடத்துவார். மறைந்த இரு ஊடகவியலாளர்களுக்கான நினை வுச் சின்னங்கள் அவர்களது குடும் பத்தினருக்கு கவிஞர் வாலி அரங் கில் வைத்து வழங்கப்படும். கவியரசர் நினைவுப் பெருவிழாவில் விசேட அம்சமாக ஊடகவியலாளர்கள் இருவரதும் நினைவஞ்சலி உரைகளை கலைக்கேசரி ஆசிரியர் திருமதி அன்னலெட்சுமி, தினக்குரல் பிரதம ஆசிரியர் வீ.தனபாலசிங்கம் ஆகியோர் நிகழ்த்துவார்கள் என்பது குறிப்பிடத்தக்கது. கடந்த காலங்கள் போலல்லாது இரண்டு மணித்தியாலங்கள் கவியரசர் கண்ணதாசன், கவிஞர் வாலி ஆகியோரின் திரையிசைப் பாடல்களை வானொலி, காணொளி பாடகர்கள் முருகேஸ் குழுவினர் நிகழ்த்துவார்கள். வழமை போல் இவ்விழாவில் அனைவரையும் கலந்துகொள்ளுமாறு அகில இலங்கை கண்ணதாசன் மன்றம் பணிவுடன் வேண்டுகின்றது.

**வேலணை வேணியன்**
**ஸ்தாபகத் தலைவர்**
**அகில இலங்கை**
**கண்ணதாசன் மன்றம்.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கரைச்சிப் பிரதேச சபையின் துணை வீதிகள் கடும் சேதம்

## நிதிப்பற்றாக்குறை என்கிறது பிரதேச சபை

கிளிநொச்சி கரைச்சி பிரதேச சபையின் கீழ் வரும் உள்ளக துணை வீதிகள் பல பல வருடங்களாகப் புனரமைக்கப்படாத நிலையில் உள்ளன. இதனால் தாம் பல்வேறு சிரமங்களை எதிர் கொண்டுள்ளதாக மக்கள் தெரிவிக்கின்றனர்.

பிரதான வீதி, ரயில் பாதை என்பன புனரமைக்கப்பட்ட நிலையில் மக்களின் நாளாந்தப் பாவனையில் உள்ள உள்ளக வீதிகள் எவையும் புனர மைக்கப்படவில்லை. இதனால் நகருக்குத் தமது தேவைகளைப் பூர்த்தி செய்யும் பொருட்டு வருவோர் நெருக்கடிகளை எதிர்கொள்ள வேண்டியுள்ளது என்று மக்கள் குற்றம் சாட்டுகின்றனர்.

இந்தக் குற்றச் சாட்டு குறித்து கரைச்சி பிரதேச சபைத் தலைவரைத் தொடர்பு கொண்டு கேட்டபோது:-

"எமது சபைக்கு உட்பட்ட வீதிகள் திருத்தப்படாதமை உண்மைதான். 1756 வரையான வீதிகள் எமது ஆளுகைக்குள் இருக்கின்றன. இவற்றில் மிகச் சொற்ப அளவான வீதிகளே தார் இட்டும், "கொங்கிறீற்" வீதிகளாகவும் புனரமைக்கப்பட்டுள்ளன. ஏனைய பல முக்கிய வீதிகள் புனரமைக்கப்படவில்லை.

பிரதேச சபைக்கான நிதிப் பற்றாக் குறை காரணமாகவே இந்த நிலை தொடர்கிறது. வடமாகாண சபை இப்போது அமைந்துள்ளதால் இனி வரும் காலத்தில் இந்த நிலை தொடராது என்று நம்புகிறோம்- என்றார். (ஐ-6)



பொருளாதார அபிவிருத்தி அமைச்சின் கீழ் மன்னார் மாவட்டத்தில் உள்ள பட்டதாரி பயிலுநர்கள் 255 பேருக்கு நிரந்தர நியமனம் நேற்றுமுன்தினம் செவ்வாய்க்கிழமை வழங்கப்பட்டன. மன்னார் மாவட்டச் செயலகத்தின் ஜெய்க்கா மண்டபத்தில் இடம்பெற்ற நிகழ்வில் வர்த்தக, வாணிபத்துறை அமைச்சர் றிஸாத் பதியுதீன் கலந்துகொண்டு நியமனக் கடிதங்களை வழங்கினார். (வ-12)

# கிளிநொச்சி முதல் பரந்தன் வரை 11 ரயில் கடவைகளே புனரமைப்பு

## ஏனையவை குறித்து நிர்வாக இழுபறி

கிளிநொச்சி, ஒக்.17

முறிகண்டியில் இருந்து பரந்தன் வரையான ரயில் பாதையில் 11 ரயில் கடவைகளே வரைபடத்தில் உள்ளதாகவும், அதற்கமைய அவை மட்டுமே புனரமைத்துப் பராமரிக்கப்படும் என்றும் தெரிய வருகிறது.

ஆனால் தற்போது 30 இக்கு மேற்பட்ட வீதிகள் இந்த ரயில் பாதையைக் குறுக்கறுப்பதால், அவை அனைத்துக்கும் கடவைகளை அமைப்பதில் முரண்பாடுகள் தோன்றியுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

குறிப்பாக ரயில் பாதை அமைக்கும் நிறுவனங்கள் தமக்கு வழங்கப்பட்ட வரைபடத்தின் அடிப்படையில் 11 கடவைகள் அமைக்கும் பணிகளையே மேற் கொண்டுள்ளதாகவும், மீதியை கரைச்சி பிரதேச சபையினர் அமைக்க வேண்டும் என்று தெரிவித்ததாகவும் கூறப்படுகிறது.

இது குறித்து கரைச்சி பிரதேச சபைத் தலைவரிடம் கேட்ட போது:-

"முன்னர் யாழ். தேவி சேவை இடம்பெற்றபோது இருந்த வரைபடத்தின் அடிப்படையிலேயே தற்போதும் பாதை அமைக்கும் பணிகள் நடைபெறுகின்றன. இதில் 11 கடவைகளை மாத்திரமே தாம் அமைக்க முடியும் என அவர்கள் தெரிவித்துள்ளனர். மீதிக் கடவைகளை அமைப்பது தொடர்பில் தாம் சம்பந்தப்பட்ட அதிகாரிகளிடம் பேசியுள்ளோம் - என்றார்.

இதேவேளை, பொன்னகர் 70 வீட்டுத் திட்டத்துக்கான பிரதான வீதியாக முன்னர் ரயில் பாதையே பயன்படுத்தப்பட்டது. தற்போது ரயில் பாதை புனரமைக்கப்பட்ட நிலையில் மாற்று வீதி எதுவும் இதுவரை அமைக்கப்படவில்லை. இதனால் வீதியைப் பயன்படுத்தும் குடும்பங்கள் பல்வேறு சிரமங்களை எதிர்கொண்டு வருகின்றனர்.

இதன் காரணமாக கிளிநொச்சி டிப்போ சந்தியில் இருந்து திருமுறி கண்டி வரையான பகுதிகளில் வாழும் ஆயிரக்கணக்கான குடும்பங்கள் பாதிப்புக்களை எதிர் கொண்டுள்ளமை குறிப் பிடத்தக்கது. (ஐ-6)

# கொக்கிளாய்க்கு இ.போ.ச. பஸ் சேவை சீராக இல்லை

## மக்கள் குற்றச்சாட்டு, மறுக்கிறது டிப்போ

கிளிநொச்சி, ஒக்.17

முல்லைத்தீவு, கொக்கிளாய், கொக்குத் தொடுவாய் ஆகிய பகுதிகளுக்கான போக்குவரத்து சீராக இடம்பெறுவதில்லையென்றும் இதனால் பாடசாலை மாணவர்கள் ஆசிரியர்கள் எனப் பலரும் பல்வேறு சிரமங்களை எதிர்கொண்டு வருகின்றனர் எனவும் தெரிவிக்கப்படுகிறது.

ஆனால் இந்தக் குற்றச்சாட்டை மறுத்துள்ளார் முல்லைத்தீவு மாவட்ட இ.போ.ச.டிப்போ உதவி முகாமையாளர்.

முல்லைத்தீவில் இருந்து கொக்கிளாய்க்கு செல்லும் இ.போ.ச. பஸ் உரிய நேரத்துக்குச் செல்வதில்லை எனவும், இதனால் கொக்கிளாய், கொக்குத் தொடுவாய் செல்லும் ஆசிரியர்கள், அரச அதிகாரிகள், மாணவர்கள் எனப் பலரும் சிரமங்களை எதிர்கொள்ள வேண்டியுள்ளது என்றும் தெரிவிக்கப்படுகிறது.

காலை 7 மணிக்கு முல்லைத்தீவில் இருந்து புறப்படும் அரச பஸ் 8 மணிக்கு கொக்கிளாயைச் சென்றடைய வேண்டியுள்ள போதிலும் தினமும் காலை 7.30 மணிக்கு புறப்படுகின்றது என்றும் 9 மணி 9.30 மணிக்கே கொக்கிளாயைச் சென்றடைகின்றது என்றும் மக்கள் தெரிவிக்கின்றனர்.

இந்த குற்றச்சாட்டு குறித்து முல்லைத்தீவு இ.போ.ச டிப்போவின் உதவி முகாமையாளரைத் தொடர்பு கொண்டு கேட்டபோது:-

தினமும் காலை 7.30 மணிக்கு முல்லைத்தீவில் இருந்து செல்லும் பஸ் கொக்கிளாய்க்கு 8.30 மணிக்கு சென்றடைந்து விடும். இப்போது வீதிகளும் நல்ல நிலையில் உள்ளன.

இ.போ.ச. உள்ளூர் சேவைகள் அனைத்துமே நட்டத்திலேயே இயங்குகின்றன. மக்களுக்குச் சேவை வழங்கும் நோக்கிலேயே உள்ளூர்ச் சேவைகள் நடைபெறுகின்றன. இது தான் உண்மை என்றார் அவர். (ஐ-6)

தருவது வித்தியா

# இன்றைய நாள்

### உங்களுக்கு எப்படி?

**மேடம்:** மன உறுதியுடன் செயற்பட்டு சில வேலைகளை முடிப்பீர்கள். நண்பர்களின் வருகையால் மகிழ்ச்சியுண்டு. வேலையாள்களின் ஆதரவு கிடைக்கும். மாணவர்கள் உற்சாகத்துடன் காணப்படுவார்கள்.

**இடபம்:** புதிய முயற்சிகள் வெற்றி தரும். எதிர்பார்த்த இடத்திலிருந்து பணவரவு உண்டு. ஆடம்பரச் செலவுகளைக் குறைத்து சேமிக்கத் தொடங்குவீர்கள். முன்கோபம் விலகும். பிரிய மானவர்களைச் சந்தித்துப் பொழுதைக் கழிப்பீர்கள். அலுவலகப் பணிகளை விரைந்து முடிப்பீர்கள்.

**மிதுனம்:** உங்களின் வெளிப்படையான பேச்சை அனைவரும் ரசிப்பார்கள். ஆன்மிகத்தில் ஈடுபாடு அதிகரிக்கும். உத்தியோகத்தில் மேலதி காரியின் பாராட்டைப் பெறுவீர்கள். அயல் வீட்டாரின் ஆதரவு கிடைக்கும்.

**கடகம்:** சிக்கலான, சவாலான காரியங்களையெல்லாம் கையில் எடுத்துக் கொண்டிருக்காதீர்கள். சில நேரங்களில் நன்றி மறந்த உறவுகளை நினைத்து வருத்தப்படுவீர்கள். ்றவர்கள் விடயத்தில் அநாவசியமாக தலையிட வேண் ாம். உத்தியோகத்தில் மறைமுக எதிர்ப்புகள் வந்து நீங்கும்.

**சிங்கம்:** கடன் பிரச்சினைகளுக்குத் தீர்வு காண்பீர்கள். முன்கோபம் விலகும். அரச காரியங்களில் அனுகூலம் உண்டு. அயல் வீட்டாரின் ஆதரவு அதிகரிக்கும்.

**கன்னி:** செயலில் வேகத்தைக் காட்டுவீர்கள். மனக்குழப்பங்கள் நீங்கி தெளிவான முடிவுகளை எடுப்பீர்கள். மாணவர்களின் நினைவாற்றல் அதிகரிக்கும்.

நாளை

ஐப்பசி-01 வெள்ளிக்கிழமை 18.10.2013
திதி: சதுர்த்தசி கா.06.04 வரை
நட்சத்திரம்: பூரணை பி.இ.05.39 வரை
சுபநேரம்: 06.02 - 07.32 வரை
இராகுகாலம்: 10.32 - 12.02 வரை

**துலாம்:** வெளிவட்டாரத் தொடர்பு அதிகரிக்கும். ஆன்மிகத்தில் ஈடுபாடு அதிகரிக்கும். மாணவர்கள் உயர்கல்வியில் கூடுதல் கவனம் செலுத்துவார்கள்.

**விருச்சிகம்:** தன்னம்பிக்கை துளிர்விடும். தைரியமான முடிவுகளை எடுப்பீர்கள். வெளியூர் பயணங்களால் மகிழ்ச்சியுண்டு. உத்தியோகத்தில் திறமைகளை வெளிப்படுத்த நல்ல சந்தர்ப்பங்கள் அமையும்.

**தனுசு:** திறம்படச் செயற்பட்டு சில வேலைகளை முடிப்பீர்கள். ஆன்மிகவாதிகளின் சந்திப்பு நிகழும். அரசு விடயங்களில் அனுகூலமான நிலை காணப்படும். வெளிவட்டாரத்தொடர்பு அதிகரிக்கும். முன்கோபம், வீண் பதற்றம் விலகும்.

**மகரம்:** நம்பிக்கைக்குரியவர்களின் சந்திப்பு நிகழும். உத்தியோகத்தில் மேலதிகாரி, சக ஊழியர்களின் ஆதரவு கிடைக்கும். வியாபாரத்தில் மகிழ்ச்சியுண்டு. மாணவர்களின் எண்ணங்கள் பூர்த்தியாகும்.

**கும்பம்:** எளிதாக முடிய வேண்டிய விடயங்களைக் கூட பலமுறை போராடி முடிப்பீர்கள். நெருங்கியவரிடம் உங்களின் மனக்குறைகளை சொல்லி ஆதங்கப்படுவீர்கள். வியாபாரத்தில் புதிய முதலீடுகளைத் தவிர்க்கவும். உத்தியோகத்தில் நிதானம் அவசியம்.

**மீனம்:** திடீரென்று அறிமுகமாகுபவர்களை வீட்டுக்குள் அழைத்து வர வேண்டாம். உடன் பிறந்தவர்களால் வீண் செலவும், மனக்கசப்பும் வந்து நீங்கும். யாரிடமும் உணர்ச்சிவசப்படாமல் இருப்பது நல்லது. உத்தியோகத்தில் மறைமுகப் பிரச்சினைகள் வரக்கூடும்.

# சுடோக்கு

### எண் விளையாட்டு

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 7 | | | 9 | | 6 | 2 | | |
| | | | | 2 | | | | 8 |
| | | | 8 | | 4 | | 1 | |
| 5 | 4 | | 1 | 8 | | 9 | | |
| 1 | 8 | | 6 | 4 | 9 | | 7 | 2 |
| | | 9 | | 3 | 5 | | 8 | 4 |
| | 5 | | 4 | | 1 | | | |
| 9 | | | | 5 | | | | |
| | | 6 | 7 | | | | | 1 |

### நேற்றைய சுடோக்கின் விடை

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 1 | 4 | 7 | 6 | 3 | 5 | 9 | 2 | |
| 8 | 6 | 5 | 7 | 9 | 2 | 3 | 1 | 4 |
| 2 | 3 | 9 | 8 | 1 | 4 | 6 | 5 | 7 |
| 9 | 2 | 6 | 1 | 4 | 7 | 8 | 3 | 5 |
| 3 | 7 | 8 | 2 | 5 | 6 | 4 | 9 | 1 |
| 5 | 1 | 4 | 9 | 8 | 3 | 2 | 7 | 6 |
| 6 | 5 | 3 | 4 | 2 | 1 | 7 | 8 | 9 |
| 4 | 9 | 2 | 5 | 7 | 8 | 1 | 6 | 3 |
| 7 | 8 | 1 | 3 | 6 | 9 | 5 | 4 | 2 |

சுடோக்கு ஒரு எண் விளையாட்டு. தர்க்க ரீதியான ஒழுங்கு படுத்தல்தான் இதன் அடிப்படை. 1-9 வரையான எண்களை ஒழுங்குபடுத்தி ஒரே கோலத்தை ஏற்படுத்த வேண்டும். இந்தப் பெட்டி 9 நிரல்களையும் 9 நிரைகளையும் கொண்டது. 3X3ஆக உள்ளேயும் 3 நிரல்களையும் 3 நிரைகளையும் கொண்டிருக்கிறது. (உள்ளே இருப்பவற்றை பெட்டிகள், கட்டங்கள், பகுதிகள், உபசதுரங்கள் என்றும் அழைக்கிறார்கள்). இந்த ஒவ்வொரு நிரையிலும் நிரலி லும் 1-9 வரையான எண்கள், இரண்டு தடவைகள் (மீண்டும் மீண்டும்) வராமல் நிரப்பப்பட வேண்டும். அவ்வாறு நிரப்பப் படுகையில் உள் பெட்டிகளுக்குள்ளும் அவ்வாறே 1-9 இலக்கங்கள் இரட்டைப்படாமல் வர வேண்டும். சில கட்டங்கள் ஏற்கனவே நிரப்பப்பட்டிருக்கும் தர்க்க ரீதியில் ஏனையவற்றை நிரப்ப வேண்டியதே வேலை. சுடோக்கு என்பது ஜப்பானியச் சொல். அதன் பொருள் 'தனி எண்' என் பதாகும். 1986 இல் ஜப்பானிய நிறுவனமான 'நிகோலி' இதனை அறிமுகப்படுத்தி வெற்றிகரமாக பரவலாக்கியது. 2005இல் இது உலக அளவில் பிரபல்யமானது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## புரிந்து கொள் என் தோழியே....



என் தோழியே
உன் குரலை
கேட்காத காதுகளும் இல்லை
நீ சண்டை பிடிக்காத
நண்பர்களும் இல்லை
விட்டுக் கொடுத்து
போவம் என்று
ஆசைப்பட்டோம்
உன் பிடிவாத குணமோ
அதற்கும் சம்மதிக்கவில்லை
உன் தன்னம்பிக்கை
ஆணவமாகிவிடக் கூடாது
உன் குணம் கோழைத்தனம்
ஆகிவிடக் கூடாது
பொறுமை இல்லாவிடினும்
உன் வாழ்க்கை
போர்க்களமாகி விடக் கூடாது
தோழியே....

*ச.புவித்ரா,*
*தொழில்நுட்பக் கல்லூரி.*

## அரசியல் பிரவேசத்தில் ஆதிக்கம் செலுத்துவது ஆண்களே

இன்றைய நவீன விஞ்ஞான உலகில் அரசியல் பிரவேசத்தில் அதிகளவில் ஆதிக்கம் செலுத்துவது முழுக்க முழுக்க ஆண்களேதான். ஆண் தன்னகத்தே வீரம், வெற்றி, துணிச்சல், ஆளுமை, ஆற்றல், தாங்குதல், பொறுத்துக் கொள்ளல் போன்ற குணாம்சங்களைக் கொண்டவர்களாகக் காணப்படுவர்.

ஓர் ஆணின் வெற்றிக்குப் பின்னால் ஒரு பெண் இருப்பாள் என்பார்கள். அதே போன்றுதான் அரசியலிலும் பெண்கள் ஆண்களின் பின்னால்தான் இருப்பார்கள். ஆண்கள் எதையும் செய்வார்கள். மனம் தளரமாட்டார்கள். ஆனால் பெண்களோ இதற்கு முற்றிலும் மாறுபட்டவர்களாக இருப்பார்கள்.

இன்றைய அரசியல் காரசாரமானது ஒருவரைக் கவிழ்ப்பதற்குப் பல வகையில் முயற்சி செய்வார்கள். ஒரு ஆண் அரசியலிலே கவிழ்க்கப்பட்டால் அவன் குதிரைபோன்று உடனே துள்ளி எழுந்துவிடுவான். ஆனால் பெண் யானை போன்று தள்ளாடிப் போவதற்குப் பலமணி நேரம் எடுக்கும். இதனால் பெண்களை அரசியலில் ஏற்றுக் கொள்வது கடினமாக உள்ளது. ஒரு பெண்ணால் தமது குடும்பத்தைத் தாங்க முடியும். ஒரு நிறுவனத்தைத் தாங்க முடியும். ஆனால் நாட்டைத் தாங்குவது என்பது முடியாத விடயமாகும். அதற்குத் தனித்திறமை வேண்டும். பெண் அரசியலில் ஈடுபட்டால் அவரை ஏதாவது காரணங்கள் கூறி அரசியலிலிருந்து விலக்கியும் விடுவார்கள். பெண் என்பவள் இன்றைய காலகட்டத்தில் பகலிலோ இரவிலோ செல்வதற்கே பயப்படுகிறார்கள். ஆனால் ஆண்களோ அப்படியல்ல. எதையும் துணிந்து செய்வார்கள். எதிர்த்துப் போராடுவார்கள். எனவே அரசியலில் அதிகளவில் ஈடுபடுவோர் ஆண்களே. அரசியல் பிரவேசத்தில் ஆதிக்கம் செலுத்துவதும் ஆண்களேயாகும்.

*தயாமினி, இணுவில் மேற்கு,*
*இணுவில்.*




## மெழுகுவர்த்தியா...?



நாம் உயர
உயிரும்
உணர்வும்
உடலும்
அறிவும்
நல்வழியும்– தந்து
எமக்காக உரமாகி
உருகி– இன்று
நாம் இன்றி
தனிமையில்
தடுமாறி நிற்கும்
ஜீவன்கள்...

## என் சமூகம்



காதலித்து கைவிட்டால்
ஆணுக்கு
நயவஞ்சகன் துரோகி என்று
பல பெயரிடுவர்
காதலித்து கைவிட்ட
பெண்ணுக்கு
என்ன பெயரிடுவர்...
தாரம் இழந்தால்
பெண்ணுக்கு வாழ்வு
கொடு என்பர்
தாரம் இழந்தால்
ஆணுக்கு
என்ன கொடுக்கும்
இந்த ச் சமூகம்..?

## இளைஞர், யுவதிகளே!

உங்களின் திறமைகளை வெளிக்கொணரவும் பிரச்சினைகள் பற்றிப் பேசவும் தேடல்களுக்குத் தீனி போடவும் 'இளவல்கள் வட்டம்' என்ற இந்தப் பகுதி மலர்ந்துள்ளது. இந்தப் பகுதிக்கான உங்கள் படைப்புக்களையும் ஏதாவது சந்தேகங்களையும் விமர்சனங்களையும் கீழேயுள்ள படிவத்தோடு இணைத்து அனுப்பிவையுங்கள்.

பெயர் :-.................................................

முகவரி :- .................................................

.................................................

.......................... ..........................
திகதி கையொப்பம்

**'இளவல்கள் வட்டம்',**
'உதயன்', 361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

## புகைப்பிடித்தால் அழகு போய்விடும்

பொதுவாக புகைப்பிடிப்பவர்களுக்கு பல்வேறு நோய்கள் ஏற்படுவதற்கான ஆபத்து அதிகம் என்பது எம் அனைவருக்கும் தெரிந்த ஒன்றாகும். ஆனால், புகைப்பிடித்தால் நம் உடல் அழகும் அழிந்துவிடும்.


உடல் தோற்றம் பாதிக்கப்படாமல் இருக்க வேண்டும் என்று ஆசைப்பட்டால் புகைப்பிடிப்பதை முழுமையாகத் தவிர்க்க வேண்டும்.

உடலில் பாதிப்புக்கான அறிகுறிகள் தோன்றும்போதுதான் நாம் தீமையான பழக்கங்களை விட்டு விடுவதற்கு முனைகிறோம். சிகரெட் பிடிக்கும் போது முகத்தில் வீக்கம் போன்ற அறிகுறி தென்பட்டால் உடனடியாக புகைப்பிடிப்பதை நிறுத்திவிட வேண்டும். ஏனெனில் புகைப்பிடித்தல் உடல் தோற்றத்தை சிதைக்கும் மிகப்பெரிய எதிரி.

புகைப்பிடிப்பதால் கண்ணைச் சுற்றி வீக்கம் அல்லது கருவளையம் உருவாகும்.அதனால் முகம் எப்போதும் சோர்வாகத் தோன்றும். புகைப்பிடிப்பவர்கள் அதிகளவில் தூக்கத்தை இழப்பதற்கான வாய்ப்பு இருப்பதால், இளம் வயதிலேயே கண்ணைச் சுற்றி கரு வளையம் உருவாகிறது. இது முகச் சோர்வுக்கு வழிவகுக்கும்.

ஒருவர் தொடர்ந்து புகைப்பிடிப்பதால், சருமத்தை ஆரோக்கியமாக வைத்திருக்கத் தேவையான இரத்த ஓட்டம் தடைப்படும். அதனால், புகைப்பிடிக்காதவர்களை விட, புகைப்பிடிப்பவர்கள் வயதானவர்களாக தோன்றுவார்கள்.

அதிகமாக புகைப்பிடிப்பதால் [illegible] முழுமையாக பாதிப்படையும். அதிக



பல் மஞ்சள் நிறமடைதல் ஒரு ஆரம்ப நிலையே. இதன் தொடர்ச்சியாக அனைத்துப் பற்களும் பாதிக்கப்பட்டு பற்கள் விழுவதற்காக வாய்ப்பு அதிகரிக்கும். எம் எல்லோருக்கும் கண் பார்வை மிகவும் அவசியம். ஆகவே அது பாதிக்கப்படாமல் இருக்க வேண்டுமென்றால், புகைப்பிடிப்பதை நிறுத்த வேண்டும். புகைப்பிடிப்பதால் இளம் வயதிலேயே கண்ணில் படலம் ஏற்படும். [illegible] கண் பார்வையில் பாதிப்பு ஏற்படும்.

## விமர்சனம்

நீங்களும் எழுதலாம்....

அரசியல் பிரவேசத்தில் ஆதிக்கம் செலுத்துவது

**ஆண்களா?**
**பெண்களா?**

உங்கள் காரணங்களை விமர்சனப் பகுதியில் முன் வைத்து விமர்சியுங்கள்.

தரமான விமர்சனங்கள் பிரசுரமாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்

அமரர் டக்டர் அருணாசலம் சிவபாதசுந்தரம் நினைவுப்பேருரை

"CHILDREN ARE NOT MINIATURE ADULTS: KEY ISSUES IN MEDICINES FOR CHILDREN"

பேருரை வழங்குநர்: டக்டர் செல்வி ஷாலினி ஸ்ரீரங்கநாதன்
இடம் : கைலாசபதி கலையரங்கு, யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்.
திகதி : 18.10.2013
நேரம் : 02.30 p.m.

ஆர்வலர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

(சி/12980)(45.5)

---

## உளநல நாள் நிகழ்வு

யாழ்ப்பாணம், ஒக்.17

உலக உளநல நாள் நிகழ்வு இன்று வியாழக் கிழமை காலை 9 மணிக்கு யாழ். இந்து மகளிர் கல்லூரி மண்டபத்தில் நடைபெறுகின்றது.

பிரதிக் கல்விப் பணிப்பாளர் பொ.அருண கிரிநாதன் தலைமையில் நடைபெறும் இந்த நிகழ்வை யாழ்ப்பாண வலயக் கல்வி அலுவலக உள சமூகப் பிரிவினர் ஏற்பாடு செய்துள்ளனர். (வ-9-10)

## ஆண்டுவிழா

சுழிபுரம், ஒக்.17

தொல்புரம் கிழக்கு விக்கினேஸ்வரா சனசமூக நிலையத்தினரின் 48 ஆவது ஆண்டு விழா வித்தியாலய மண்டபத்தில் நாளை வெள்ளிக் கிழமை பி.ப. 2 மணிக்கு தி.உதயசூரியன் தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராக திறை சேரி முகாமைத்துவ கணக்காய்வு திணைக் களப் பணிப்பாளர் ச.க.குசலகுமாரன் தம்பதி யர் கலந்து கொள்வர். (வ-28)

## 'பாடு பாப்பா' இறுவட்டு வெளியீடு நாளை

யாழ்ப்பாணம், ஒக்.17

முன்பள்ளிக் குழந்தைகளுக்கான கல்வயல் குமாராசாமியின் 'பாடுபாப்பா' இறுவட்டு வெளி யீட்டு விழா நாளை வெள்ளிக்கிழமை காலை 9 மணிக்கு நீராவியடி இலங்கை வேந்தன் கலைக் கல்லூரியில் நடைபெறவுள்ளது.

ஆறுதல் நிறுவன நிறைவேற்றுப் பணிப்பாளர் சுந்தரம் டிவகலாலா தலைமையில் நடை பெறவுள்ள இந்த நிகழ்வில் கவிஞர் சோ.பத்ம நாதன், யாழ். பல்கலைக்கழக முன்னாள் தமிழ்த் துறைத் தலைவர் எஸ்.சிவலிங்கராஜா, ஓய்வு நிலை விரிவுரையாளர் கலாநிதி செ.திரு நாவுக்கரசு ஆகியோர் உரை நிகழ்த்துவர்.

இறுவட்டின் முதற்பிரதியை மாகாணக் கல்வி அமைச்சின் ஆரம்பப் பருவ அபிவிருத்திப் பிரிவுப் பணிப்பாளர் செல்வி ஜெயா தம்பையா பெற்றுக் கொள்ளவுள்ளார். கவிஞர் குமராசாமி நிகழ்வில் கௌரவிக்கப்படவுள்ளார். (வ-7)

## அவசர சந்திப்பு

யாழ்ப்பாணம், ஒக்.17

யாழ் கல்வி வலயத்தின் கோப்பாய், நல்லூர் மற்றும் யாழ்ப்பாண கல்விக் கோட்டங்களில் கடமையாற்றும் ஆசிரிய ஆலோசகர் களுக்கும், யாழ் கல்வி வலயத்தில் கடமையாற்றும் உதவிக் கல்விப் பணிப்பாளர்களுக்குமான அவசர சந்திப்பொன்று இன்று வியாழக் கிழமை காலை 9 மணிக்கு வலய முகாமைத்துவ மண்டபத்தில் இடம்பெறவுள்ளது.

இக் கலந்துரையாடலில் சம்பந்தப்பட்டவர்களை தவறாது கலந்து கொள்ளுமாறு யாழ் கல்வி வலய பிரதிக் கல்விப்பணிப்பாளர் வி.எஸ். மாணிக்கராஜா கேட்டுள்ளார். (த-400)

## வெள்ளி, சனி, ஞாயிறு தினங்களில் மின்தடை

யாழ்ப்பாணம், ஒக்.17

உயர் மின் நிலையங்களை இடம் நகர்த்துதல் மற்றும் மொத்த வழங்கல் கட்டமைப்பின் இணைப்பு வேலைகள் என்பவற்றுக்காக நாளை வெள்ளிக்கிழமை காலை 8.30 மணியி லிருந்து மாலை 5.30 மணிவரை கொடிகாமம் பிர தேசத்தின் ஒரு பகுதி, உசன், மிருசுவில், கெற்பேலி, சுன்னாகம், மருதனார் மடம், உடுவில், சங்குவேலி, மானிப்பாய், ஆனைக் கோட்டை, நவாலி, இணுவில், கோண்டாவில், கொக்குவில், நாச்சிமார் கோவிலடி, பூநாறி மரத்தடி, கோம்பையன்மணல் பிரதேசம், உரும்பிராய், மருத்துவபீடப் பிரதேசம் ஆகிய இடங்களிலும்,

நாளை மறுதினம் சனிக்கிழமை காலை 8.30 மணியிலிருந்து மாலை 5.30 மணி வரை கந்தரோடை, மாகியப்பிட்டி, பண்டத்தரிப்பு, இளவாலை, சங்கானை, மாதகல், வட்டுக் கோட்டை, சுழிபுரம், மூளாய், அராலி, காரை நகர் பிரதேசம், தீவகப் பிரதேசம் ஆகிய இடங்களிலும்,

ஞாயிற்றுக்கிழமை காலை 8.30 மணி யிலிருந்து மாலை 5.30 மணி வரை உரும் பிராய், மருத்துவ பீடப் பிரதேசம், கொக்குவில் பிரதேசம், பூநாறி மரத்தடி, கோம்பையன் மணல் பிரதேசம், காக்கைதீவு, மீனாட்சி புரம், கொட்டடி, நாவாந்துறை, குருநகர், பாஷையூர், முஸ்லிம் கல்லூரி வீதி, பொம்மைவெளி பிரதேசம், ஆறுகால் மடப் பிரதேசம் ஆகிய இடங்களிலும் மின்விநியோகம் தடைப்படுமெனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (வ)

---

## இரண்டாம் ஆண்டு நினைவஞ்சலி



அன்னை மடியில் 14.10.1953
இறைவன் அடியில் 17.10.2011

அமரர் பூதத்தம்பி யோகநாதன்
(Director of Customs-சுங்கப் பணிப்பாளர்)

அண்ணா! எங்கிருந்து நீ பாடுகின்றாயோ?
துன்ப கீதமே பாடுகின்றாயோ?
இந்த நிலை என்று மாறுமோ?
அண்ணா உனைக் காணும் இன்ப நாளுமே
வந்து சேருமோ-அண்ணா
உன்னையும் மறப்பதுண்டோ?-மறந்தால்
உள்ளத்தில் அமைதியுண்டோ? அண்ணா
உனை மறப்பதுண்டோ?

அண்ணாரின் பிரிவால் துயருறும் தம்பிமார்கள்
பூ.மகேந்திரநாதன்-கொழும்பு-05
பூ.இரகுநாதன்-கொழும்பு-06
(2912)(64)

## முதலாம் ஆண்டு நினைவு அஞ்சலி



மலர்வு 21.02.1990
உதிர்வு 28.09.2012

செல்வன் தஞ்சகன் தங்கவேலாயுதம்
(மருத்துவபீட மாணவன்)
திதி:17.10.2013
(வியாழக்கிழமை)



அன்பின் ஒளிவிளக்கே புன்னகை நிலவே
ஆண்டுகள் ஆயிரமானாலும் அழியாது
-உந்தன் நினைவு
வண்ண வண்ணக் கனவுகளைச் சுமந்து
வாழ்வில் சிறகடித்துப் பறந்தவனே-தஞ்சக
உயிர்களைக் காக்கும் உந்தன் உன்னத
சேவையினை - காணத் துடித்த
எம்மிதயங்களை இருளாக்கிப் பாதியில்
எமை விட்டு எங்கு சென்றாயோ?

அன்னாரின் ஓராண்டு நினைவுப் பிரார்த்தனை இன்று (17.10.2013) வியாழக்கிழமை மதியம் எமது தற்காலிக இல்லத்தில் நடைபெறும். இந்த நிகழ்வுக்கு வருகைதந்து அவரின் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து இடம்பெறும் மதிய போசனத்திலும் பங்கு கொள்ளுமாறு அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

357, ரயபாக்கம் வீதி,
உக்குளாம் குளம், வவுனியா.
077 280 2296

குடும்பத்தினர்.

(32776)(48.3)

---

## கண்ணீர் அஞ்சலி



யா/மீசாலை வீரசிங்கம் மத்திய கல்லூரி ஆசிரியை
திருமதி வாணிஸ்ரீ தவராசா
அவர்களின் தந்தை
ஆறுமுகம் சிவப்பிரகாசம்

நேற்றுமுன்தினம் (15.10.2013) செவ்வாய்க் கிழமை இறைபதம் அடைந்துள்ளார். அவரு டைய ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திப்பதுடன் அவருடைய குடும் பத்தினருக்கும் ஆழ்ந்த அனுதாபத்தினைத் தெரிவித்துக்கொள் கின்றோம்.

ஆசிரியர் கழகம்
யா/ மீசாலை வீரசிங்கம் மத்திய கல்லூரி.

## எட்டாம் ஆண்டு நினைவலைகள்



பாரினில் 10.04.1986
பரமனடி 17.10.2005

பாலசுப்பிரமணியம் அர்ச்சனா
(திதி:பௌர்ணமி)

பத்து நாலு எண்பத்தி ஆறில்
பாரினிலே வந்துதித்தாய்
பாசமுடன் வளர்த்தெடுத்தோம்
பண்பு மிகு அர்ச்சனாவே
பால் வடியும் முகம் இங்கே
பரிதவிக்க வைக்கிறதே
பத்தொன்பது நாளா?
பத்தொன்பது மாதமா
பத்தொன்பது வருஷம் - வளர்த்த பயிர்
பதினேழு பத்து இரண்டாயிரத்து ஐந்தில்
பரமனடி சேர்ந்து-இன்று
பதினேழு பத்து இரண்டாயிரத்து பதின் மூன்றில்
எட்டாண்டு நினைவம்மா
ஏங்கி நாம் அழுகின்றோம்.

விளையாட்டரங்கு வீதி,
கட்டப்பிராய், கோப்பாய்.

உன் நினைவில்
அப்பா, அம்மா, சகோதரர்கள்.

(32677)(6.4)

## 6 ஆம் ஆண்டு நினைவஞ்சலி



மலர்வு 14.11.1924
மறைவு 25.10.2007

அமரர் வல்லிபுரம் மகேந்திரராஜா
(இளைப்பாறிய பிரதம தபால் அதிபர் – J.P)
திதி: 17.10.2013

குடும்ப ஒளி விளக்காகிய நீங்கள் எம்மோடு இல்லையே!
தாங்குமா எம் இதயம் தினம் தினம் ஏங்குகின்றோம்
உங்களை நினைந்து 6 ஆண்டுகள் சென்றாலும் ஆறாது எம் துயர்!
கண்முன்னே வாழ்ந்த காலம் கனவாகிப் போனாலும்
எம் முன்னே உங்கள் முகம் என்றாளும் உயிர் வாழும்
மண்விட்டு மறைந்து நீங்கள் வானுலகம் சென்றாலும்
மனம் விட்டு மறையாமல் என்றாளும் இருப்பீர்கள்
நினைவில் எம்முடனும் நிஜத்தில் இறைவனிடமும்
கலந்திருக்கும் உங்களின் ஆத்மா சாந்தியடைய
மருதடி விநாயகரை வேண்டுகின்றோம்.

மேதர் ஒழுங்கை,
மானிப்பாய்.

மனைவி, பிள்ளைகள்,
மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

(32776)(15.6.3)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முன்னாள் அதிபரின் நூறாவது பிறந்ததினம் மகாஜனவில் விமரிசையான நிகழ்வுகள்







வலி.வடக்கு, ஒக்.17

தெல்லிப்பழை மகாஜனக் கல்லூரியின் முன்னாள் அதிபர் நவமகாஜனன் சிற்பி தெது.ஜெயரத்தினத்தின் நூறாவது பிறந்த தின நிகழ்வுகள் நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை பகல் தெல்லிப்பழை மகாஜனக் கல்லூரியில் நடைபெற்றன.

நிகழ்வுகளில் பிரதம அதிதியாக அமரரின் மூத்த மகள் திருமதி ஜெயபவானி விக்கினேஸ்வரனும், கௌரவ விருந்தினர்களாக தெல்லிப்பழை துர்க்காதேவி ஆலய தலைவர் ஆறு.திருமுருகன், யாழ்ப்பாணம் பல்கலைக்கழக முன்னாள் துணை வேந்தர் பேராசிரியர் நா.சண்முகலிங்கன், முன்னாள் ஆசிரியர் த.பு.முருகையா, கப்பல் அபிவிருத்தி புனருத்தாரண அமைச்சின் முன்னாள் செயலாளர் ரி.இலங்காநேசன், பழைய மாணவன் சட்டத் தரணி க.செல்வஸ்கந்தனும்.

விசேட அதிதிகளாக ஆளுநரின் செயலாளர் இ.இளங்கோவன், வடமாகாண கல்வி அமைச்சின் செயலாளர் சி.சத்தியசீலன், வடமாகாண கல்வி அமைச்சின் பிரதிச் செயலாளர் ப.விக்னேஸ்வரன் ஆகியோரும் சிறப்பு விருந்தினர்களாக முன்னாள் ஓய்வு நிலை அதிபர் பொ.கனகசபாபதி, வலிகாமம் வலய ஓய்வு நிலை உதவிக் கல்விப் பணிப்பாளர் திருமதி கோகிலா மகேந்திரன், பழைய மாணவர்களான வி.சிவானந்தராசா, வைத்தியக் கலாநிதி என்.கணேசானந்தன், யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலை பிரதிப் பணிப்பாளர் எஸ்.ஸ்ரீபவானந் தன், எஸ்.ஸ்ரீலஜயன் சிரேஷ்ட சுங்க அத்தியட்சகர் கே.நியாஸ் ஆகியோரும் கலந்து கொண்டனர்.

நேற்றுக்காலை 9 மணிக்கு விருந்தினர்களை கல்லூரி முன்றலில் இருந்து மாணவர்கள், சாரணர்கள் மற்றும் ஆசிரியர்கள் 'பாண்ட்' வாத்திய இசையுடன் அழைத்து வந்தனர்.

கல்லூரி மற்றும் தேசியக் கொடிகள் ஏற்றப்பட்டதைத் தொடர்ந்து அமரர் ஜெயரத்தினத்தினம் சிலைக்கு விருந்தினர்கள் மலர் மாலை அணிவித்தனர். தொடர்ந்து கல்விக் கண்காட்சியை திறந்து வைத்ததுடன் இணையத் தளத்தையும் ஆரம்பித்து வைத்தனர்.

மற்றும் ஜெயரத்தினத்தின் நூறாவது பிறந்தநாள் மலர் வெளியீடு பரிசளிப்பு நிகழ்வுகள் மற்றும் கல்லூரி மாணவர்களின் கலை நிகழ் வுகளும் இடம்பெற்றன.

(வ-86)

16ஆம் ஆண்டில் பாதக்கமலங்களுக்கு அஞ்சலி

மண்ணில் 23.05.1923
விண்ணில் 14.10.1997

சுதுமலையைப் பிறப்பிடமாகவும் நவாலி கிழக்கை வசிப்பிடமாகவும் கொண்ட
திருமதி
கண்மணி நாகலிங்கம்
திதி: 17.10.2013



உன் உயிர் தந்து என் உயிர் வளர்த்த தாயே!
தரணியில் நானும் அவதாரம் எடுத்திட துணையாய் இருந்தவளே!
ஈரைந்து மாதங்கள் எனைக் கருவாய் வயிற்றில் சுமந்தவளே!
பசியால் நீ வாடிய போதும் நான் பசியறியாது வளர்த்தவளே!
நோயினால் நீ வாடிய போதும் என் மனம் நோகாமல் பார்த்தவளே!
உன்னை என்னவென்று சொல்வேன் நீ தெய்வமென்று சொன்னாலும்
அது உனக்கு இழுக்குத் தான் நீ தெய்வத்திற்கு மேலே தான்
என் மனதின் அஞ்சலி.

நா.தெட்சணாமூர்த்தி.
திரு-திருமதி நிஷாகரன் மலர்மதி.
திரு-திருமதி நிஷாந்தன் ஸ்ரீமகள்.
திருமதி பு.சிவயோகம்.
திரு-திருமதி க.தர்மரத்தினம் தவமணி.
பேரப்பிள்ளைகள், பூட்டப்பிள்ளைகள்.

145/3, பிரப்பங்குளம் றோட்,
யாழ்ப்பாணம்.

## வாசிப்பு மாதத்தில் விசேட நிகழ்வுகள்

வாசிப்பு மாதத்தை முன் னிட்டு பிரதேச சபைகள் மட்டத்தில் பாடசாலை மாணவர்கள், நூலக அங்கத்தவர்கள் மட்டத்தில் போட்டிகளை நடத்த ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. வலி.தென் மேற்கு பிரதேச சபை மாணவர்கள் மத்தியில் பொது அறிவு, கட்டுரை என இரு போட்டிகளை நடத்தவுள்ளன. பொது அறிவுப் போட்டி தரம் 11-13 வரையான மாணவர்களுக்கு இடையே நடத்தப்படவுள்ளது.

⇗ ⇗ ⇗

சாவகச்சேரி பிரதேச சபையில் மிருசுவில் பொது நூலகத்தில் ஆத்திசூடி மனனம், வர்ணம் தீட்டல் போட்டிகள் இன்று வியாழக்கிழமை மு.ப. 9.30 மணிக்கு நடைபெறவுள்ளது. (ந-9)

⇗ ⇗ ⇗

ஊர்காவற்றுறை பிரதேசசபையின் கீழ் இயங்கும் எழுவைதீவு பொது நிகழ்வுகளுக்கான நூலகத்தால் "வாசிப்பினால் ஆளுமையை வளமாக்கு வோம்" என்ற தொனிப் பொருளில் பல ஏற் பாடுகள் முன்னெடுக்கப்படவுள்ளன. அத்துடன் கதை சொல்லல், பேச்சுப் போட்டி, கட்டுரைப் போட்டி, பொது அறிவுப் போட்டி என்பனவும் நடத்தப்படவுள்ளன.

⇗ ⇗ ⇗

சாவகச்சேரி பிரதேச சபையின் கச்சாய் பொது நூலகத்தால் தரம் 1-13 வரையான பாடசாலை மாணவர்களிடையே சுவரொட்டிப் போட்டி நடைபெறவுள்ளது. இந்தப் போட்டி இன்று வியாழக்கிழமை மு.ப. 10.30 மணிக்கு நூலக மண்டபத்தில் நடைபெறவுள்ளது. (ந-9)

⇗ ⇗ ⇗

சாவகச்சேரி பிரதேச சபையின் கைதடி பொது நூலகத்தினர் தேசிய வாசிப்பு மாதத்தை முன்னிட்டு பல்வேறு செயற்றிட்டங்களை மேற்கொண்டுவருகின்றனர். நூலகத்தின் கணினி [illegible] மாணவர்கள் இணையத்தள வழியாக கற்றல் விடயங்களைப் பெற்றுக் கொள்வதற்கான வசதிகள் ஏற்படுத்திக் கொடுக்கப்பட்டுள்ளன. இணைப்புக் கட்டணத்தை சபை நிதியிலிருந்து வழங்க பிரதேச சபை முடிவு செய்துள்ளது. தேசிய வாசிப்பு மாதத்தையொட்டி பாடசாலை மாணவர்களுக்கான பேச்சு, சித்திரம், கட்டுரைப் போட்டிகளும் முன்பள்ளி சிறார்களுக்கான வர்ணம் தீட் டல் போட்டியும் நடத்தப்படவுள்ளன. (ந-9)

⇗ ⇗ ⇗

சாவகச்சேரி பிரதேச சபையின் நாவற்குழி உப அலுவலகத்தின் கீழ் இயங்கும் நாவற்குழி பொது நூலகத்தினால் மரக்கன்றுகள் நடுதல், நடமாடும் நூலக சேவை, நூலகத்தை அதிக நேரம் பயன்படுத்தும் வாசகர்களுக்கு பரிசில் வழங்கல், இலவச வகுப்புகள் நடத்துதல் போன்ற செயற்றிட்டங்கள் ஆரம்பிக்கப்படவுள்ளன. (ந-13)

⇗ ⇗ ⇗

ஊர்காவற்றுறை பிரதேச சபையின் அனலைதீவு பொது நூலகத்தினால் "வாசிப்பால் வாழ்வை வெல்வோம்" என்ற தொனிப் பொருளில் நிகழ்வுகள் நடைபெறவுள்ளன. மாணவரிடையே பிரிவு ரீதியாக சஞ்சிகை தயாரித்தல், கட்டுரை, சிறுகதை, கவிதை, கவிநயம், பாவோதல் போட்டிகளும், அங்கத்தவரிடையே பொது அறிவுப் போட்டியும் நடத்தப்படவுள்ளன.

## அறிவகங்களை பார்வையிட்டார் பெரேரா

தென்மராட்சி, ஒக்.17

தகவல் தொழில் நுட்ப அமைச்சினால் யாழ். மாவட்டத்தில் அமைக்கப்பட்ட 'நெகனல' அறிவகங்களின் செயற்பாடுகளை அமைப்பின் ஆலோசகர் கே.கே. பெரேரா கடந்த வாரம் அனைத்து பிரதேச "நெசனல" அறிவகங்களுக்கும் திடீர் பயணத்தை மேற்கொண்டு பார்வையிட்டார்.

சாவகச்சேரிநகர் மாதர் கிராம அபிவிருத்திச் சங்கத்துக்குப் பயணம் செய்து பார்வையிட்ட ஆலோசகர் அறிவகத்தின் செயற்பாடுகள் குறித்து தாம் திருப்தியடைந்துள்ளதாகத் தெரிவித்தார்.

(வ-9)

இனிய தாயின் ஈராம் ஆண்டு நினைவில்

மண்ணுக்காய்: 30.06.1951
தெய்வத்துக்காய்: 11.10.2011

திருமதி வரதலக்ஷ்மி
புஸ்பராசா
திதி : சதுர்த்தசி



உங்கள் சாந்தி வேண்டிப் பிரார்த்திக்கும்
குடும்பத்தினர்.

இல. 6, இராஜேஸ்வரி வீதி,
அரியாலை, யாழ்ப்பாணம். (32854)(7.8)

மரண அறிவித்தல்

பெனடிற் யூரி சவுந்தரராஜன் (சந்திரன்)



கொழும்புத்துறை, மணியந்தோட்டத்தைப் பிறப்பிடமாகவும் இலக்கம் 778, ஆஸ்பத்திரி வீதியை வசிப்பிடமாகவும் கொண்ட பெனடிற் யூரி சவுந்தரராஜன் (சந்திரன்) 14.10.2013 திங்கட்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற பெனடிற் மற்றும் புஸ்பம் தம்பதியரின் அன்பு மகனும் காலஞ்சென்றவர்களான வில்மட் - பிலோமினா தம்பதியரின் அருமை மருமகனும், சுதாவின் அன்புக் கணவரும், வசந் (பிரான்ஸ்), வசந்தி, டுசாந்தி, சனோஜ், திசாந்தி, வினோஜ் ஆகியோரின் பாசமிகு தந்தையும், ரவீந்திரன் (பிரான்ஸ்), ராஜன் (பிரான்ஸ்), காலஞ்சென்றவர்களான வசந்தி, சுதன் ஆகியோரின் பாசமிகு சகோதரனும், போலனின் (பிரான்ஸ்) அன்பு மாமனாரும், சுரேசின் அன்பு மைத்துனரும், லைலா, சாமினி, வவா, தர்சினி ஆகியோரின் உடன் பிறவாச் சகோதரனும் ஆவார்.

அன்னாரின் நல்லடக்க ஆராதனை இன்று (17.10.2013) வியாழக்கிழமை பி.ப. 3 மணிக்கு புனித அடைக்கல அன்னை ஆலயத்தில் திருப்பலி ஒப்புக்கொடுக்கப்பட்டு பின்னர் பூதவுடல் புனித கொஞ்சேஞ்சி மாதா சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

778, ஆஸ்பத்திரி வீதி,
முலவச்சந்தி, யாழ்ப்பாணம்.

தகவல்:
குடும்பத்தினர், மைத்துனர்
(சுரேஸ்)

(32873)(5.6.2)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பொது இடத்தில் போதையில் அட்டகாசம்; 6 பேர் கைது

தென்மராட்சி, ஒக்.17

சாவகச்சேரி நுணாவில் சந்திப் பகுதியில் பொது இடத்தில் மது போதையில் அமைதிக்குப் பங்கம் விளைவிக்கும் வகையில் குழப்பம் விளைவித்த ஆறு பேரை சாவகச்சேரி பொலிஸார் கைது செய்தனர்.

குறித்த ஆறு பேரையும் நேற்று முன்தினம் பொலிஸார் நீதி மன்றில் முற்படுத்தினர்.

இதன் போது அவர்களை சமூகப் பணிகளில் ஈடுபடுத்து வதற்காக நீதி மன்ற சமுதாயம் சார் சீர்திருத்தப் பிரிவினரிடம் ஒப்படைக்குமாறு நீதிவான் உத்தர விட்டார்.

சிறு குற்றங்களில் ஈடுபடுவோருக்கு சிறைத் தண்டனை விதிக்காமல் சமூகப் பணிகளில் ஈடுபடுத்தவென சிறைச்சாலைகள் மறுசீர மைப்பு புனர்வாழ்வு அமைச்சால் நீதிமன்றங்கள் தோறும் சமுதாயம்சார் சீர்திருத்தப் பிரிவுகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளமை தெரிந்ததே.

இந்தப் பிரிவு சாவகச்சேரி நீதிமன்றக் கட்டடத் தொகுதியில் இயங்குகின்றது. அதற்கான உத்தி யோகத்தரும் நியமிக்கப்பட்டு கடமையாற்றி வருகிறார் என்பது குறிப்பிடத்தக்கது. (வ-9)

## யாழ்ப்பாணக் கல்வி நிலையம்
**The Jaffna Education Center**
(சீயோன் தேவாலயத்துக்கு அருகில்)

Spoken English With Grammer
Short hand Typing
சிங்களம்

ESOL,IELTS போன்ற பரீட்சைக்கு தயார் செய்து விடல் ஆகிய வகுப்புகள் நடைபெறு கின்றன.

**புதிய பிரிவு ஆரம்பம் 18.10.2013**
பாட முடிவில் சான்றிதழ் வழங்கப்படும்
ஆசிரியை: இ.லோகநாயகி
T.P: 077 677 9340
(32750) (3.4.8)

## ஆங்கில இலக்கண வகுப்பு
**(Grammar -Personal Classes)**

கொக்குவில் பகுதியில்
தொடர்பு:071 712 4037
(32879)(3.4.8)

## மலிவு விற்பனை

எங்குமே கிடைக்காத மலிவு விலையில் Sony Mega - 21" 14500/=, Sony Panasonic 29" 16000/=, DVD 3000/=, Box, அம்பிளிபயர் என்பன. தொடர்பு: 077 044 0570

சோனி ரேட் சென்ரர் (கொமர்ஷல் வங்கி எதிரில்)
56, கே.கே.எஸ் வீதி, சுன்னாகம். (32853) (7.6)

## விற்பனைக்கு

பழைய வீடு ஒன்றை உடைத்து அதன் பகுதிகளை வாங்க விரும்புபவர்கள் தொடர்பு கொள்ளவும்.
தொடர்பு:077 664 2892 (32875) (3.4.8)

## மணமகள் தேவை

1980இல் பிறந்த 4இல் செவ்வாய் 27½ பாவமுடைய லண்டன் பிரஜாவுரிமை பெற்ற மணமகன் வந்துள்ளார். படித்த அழகான மணமகள் தேவை. சீதனம் எதிர்பார்க் கப்பட மாட்டாது. 077 607 0862 (32868) (7.6)

## பணிப்பெண் தேவை

எவ்வித பொறுப்புமற்ற பணிப்பெண் ஒருவர் உடன் தேவை. ஆதரவற்ற வர்களுக்கு முன்னுரிமை அளிக்கப்படும். தகுந்த சம்பளம் வழங்கப்படும்.
தொடர்பு:077 516 7472 (சி/18106) (3.4.8)

# பயிர் சிகிச்சை முகாம்

நெளுக்குளம், ஒக்.17

வவுனியாவில் பயிர்ச் சிகிச்சைமுகாமொன்று இடம்பெறவுள்ளதாக வவுனியா பிரதி விவ சாயப் பணிப்பாளர் அ.ஷகீலாபானு அறி வித்துள்ளார்.

வவு னியா இலுப்பை யடிச் சந்தியிலுள்ள கோவிற்குளம் கமநல கேந்திர நிலையத்தில் இன்று காலை 7.30 மணியளவில் இந்த முகாம் ஆரம்பமாக வுள்ளது.

இதில் கலந்து கொள் ளும் பாடவிதான உத்தியோகத்தர்கள் பயிர் நோய்த்தாக்கம், அதற்குரிய சிகிச்சை முறைகள் என்பன தொடர்பாக விளக்க மளிக்கவுள்ளனர்.

இந்த முகாமில் விவ சாயிகளைக் கலந்து கொண்டு பயன்பெறு மாறு வவுனியா பிரதி விவசாயப் பணிப் பாளர் அறிவித்துள் ளார். (க-402)

# புத்தி என்பது சாதாரண அறிவுத் திறன் அல்ல

பொதுவாக மக்கள் எண்ணுவதுபோல புத்தியானது சாதாரண அறிவுத் திறன் அல்ல. சிரத்தை, ஆர்வம் அல்லது நம்பிக்கை, நிதானம் அல்லது உறுதிப்பாடு இவற்றால் நிரம்பிய, அமைதியான ஒரு நிலைப் பாட்டைக் கொண்ட அறிவுத் திறன்தான் அதுவாகும்.

ரிதம், சத்தியம், யோகம், மகாதத்துவம் ஆகியவற்றால் உரு வேற்றப்பட்ட அறிவுத் திறன்தான் புத்தி. இந்தப் புத்திக்கு நிதானித்து ஆழ்ந்து சிந்தித்தல், பிரித்தறிதல் ஆகியவற்றுக்கு மட்டும் சக்தியுண்டு என்பதல்ல. ஆனால் ஆழச் சிந்தித்தல், விசாரணை, பாரபட்சமற்ற தீர்ப்பை வழங்கவும் சக்தியுண்டு.



நன்றி
தெய்வீகம் மலரும் பொழுது
**சாயி சிந்தனை**

இதோ!
சித்த ஆயுர்வேத முறைப்படி தயாரிக்கப்பட்ட இருமல் நிவாரணி!
தீராத இருமல்,சளி,இளைப்பு மற்றும் நுரையீரல்,சுவாச நாளங்களில் உண்டாகும் சளி நோய்கள், தொண்டையில் ஏற்படும் நமைச்சல் ஆகிய நோய்களை விரைவில் குணமாக்கும் அதியற்புத தேசிய ஔஷதம்

## சித்தாரா அதிமதுரம் ஆடாதோடை இருமல் பாணி

யாழ்.குடாநாட்டின் அனைத்து பார்மஸிகளிலும்,கடைகளிலும் பெற்றுக்கொள்ளலாம்.

*Manufactured By:*
SITHARA PRODUCTS
Puttalam Road, Chilaw.
(Reg.No.:-6382) AR/PR/No.228

யாழ்.மாவட்ட ஏக விநியோகஸ்தர்:
சிவா நறுமணப் பூங்கா
இல.288, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.
தொ.பே.: 021 222 2567
(குறிப்பு: சத்திரச் சந்திக்கு அண்மையில்)
(12666)(5.6.3)

உ
சிவமயம்

வல்வை ஸ்ரீமுத்துமாரி அம்மன்
## கல்யாண மண்டபத் திறப்பு விழாவும் கலை நிகழ்ச்சிகளும்

**காலம் :** விஜய வருடம் ஐப்பசி மாதம் முதலாம் நாள் (18.10.2013)
காலை 6.02 தொடக்கம் 7.32 வரையுள்ள சுபவேளை

**தலைமை :** கா.தர்மகுலசிங்கம்
(தர்மகர்த்தா சபைத் தலைவர்,
வல்வை ஸ்ரீ முத்துமாரி அம்மன் தேவஸ்தானம்)

**இடம் :** புதிதாக அமைக்கப்பட்ட வல்வை ஸ்ரீ முத்துமாரி அம்மன் கல்யாண மண்டபம், வல்வெட்டித்துறை. திறப்பு விழாவைத் தொடர்ந்து கலை நிகழ்ச்சிகள் நடைபெறும்.

வல்வைப் பொது மக்கள் மற்றும் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

வல்வை ஸ்ரீ முத்துமாரி அம்மன் தேவஸ்தானம்
பதிவு இல. HA/5/JA/639 – தர்மகர்த்தா சபை
வல்வெட்டித்துறை.
(தனிப்பட்ட அழைப்புக்கள் இல்லை)

## வவுனியா வெளிவட்ட வீதி, அருள் மிகு ஸ்ரீ சிந்தாமணி விநாயகர் ஆலயம் கோபுர தரிசனம் கோடி புண்ணியம் இராஜகோபுர திருப்பணி

விநாயகர் அடியார்களே!

ஸ்ரீ சிந்தாமணி விநாயகர் ஆலய சப்ததள இராஜகோபுரக் கட்டட திருப்பணி வேலை 18.10.2013 வெள்ளிக்கிழமை அன்று ஆரம்பிக்கப்படவுள்ளது. இதற்கு தங்களாலான உதவியினை பணமாகவோ அல்லது காசோலையாகவோ வழங்க விரும்பும் அடியார்கள் **சிந்தாமணி விநாயகர் ஆலய பரிபாலனசபை கணக்கு இல.070-07204443-101 (செலான் வங்கி) வவுனியா** என்ற விலாசத்துக்கு வரவு வைக்கலாம். வரவு வைக்கப்பட்ட பணத்திற்குரிய பற்றுச் சீட்டின் போட்டோ பிரதியை ஆலயத்திற்கு அனுப்பி வைக்கவும். பொருள்களாக வழங்க விரும்பும் அடியார்கள் ஆலய பொது முகாமையாளருடன் தொடர்பு கொண்டு பொருள்களை ஆலயத்தில் வழங்கி உதவுமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

வெளிவட்ட வீதி,
வவுனியா,
T.P: 024 222 1408 (29814)(6.4)

ஆலய பரிபாலன சபை,
ஸ்ரீ சிந்தாமணி விநாயகர் ஆலயம்,
வவுனியா

## அடகுப் பொருள்கள் ஏல விற்பனைக்கான அறிவித்தல்

**ஹற்றன் நஷனல் வங்கி பருத்தித்துறை,நெல்லியடி, சாவகச்சேரி** ஆகிய கிளைகளில் 25.08.2012 இற்கு முன்னர் அடகு வைத்து இதுவரை மீட்கப்படாத, காலா வதித் திகதியை நீடிக்க ஆவன செய்யாத வாடிக்கையா ளரின் அடகு நகைகள் **20.10.2013 தொடக்கம் 29.10.2013 (ஞாயிறு-செவ்வாய்) வரை காலை 9.00 மணி தொடக்கம் மாலை 7.00 வரை இல.212,214 ஆஸ்பத்திரி வீதியில்** அமைந்துள்ள எமது யாழ் கிளையில் பகிரங்க ஏலத்தில் விடப்படும் என்பதனை அறியத் தருகின்றோம்.

ஏல விற்பனைத் திகதியினை பிற்போடும் மற்றும் ஏலத்தினை இரத்துச் செய்யும் உரிமைகள் வங்கிக்கு உண்டு.

(சி/13101)(5.6.3) **ஹற்றன் நஷனல் வங்கி.**

## கோப்பாய் பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கம்(வ-து)
## பருத்தித்துறை வீதி, கோப்பாய் தெற்கு, கோப்பாய்

பதிவு இலக்கமும் திகதியும் : யா/1573, 1972.02.18 — தொலைபேசி இல: 021 223 0395

### பதவி வெற்றிடம்

எமது சங்கத்தில் கீழ் குறிப்பிடப்பட்ட பதவிக்கு ஆள்சேர்ப்பு செய்வதற்கு தகுதி வாய்ந்தவர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன

01) பதவி :- **பொது முகாமையாளர்**
பதவி குறியீடு :- 101/08
சம்பள அளவுத்திட்டம் **(66/2006 இன்படி)** :- 11200 - 140X10 - 150X10 - 14100
வெற்றிட எண்ணிக்கை :- 01

**அங்கீகரிக்கப்பட்ட தகைமைகள்**

அ) கூட்டுறவுப்பணியாளர் 09ஆவது சம்பளத்திட்டத்தில் முகாமை அல்லது மேற்பார்வை மட்டப்பதவி ஒன்றில் மூன்று (03) வருடங்களுக்கு குறையாத அனுபவம். அல்லது கூட்டுறவுப் பணியாளர் 10ஆவது சம்பளத்திட்ட முகாமை அல்லது மேற்பார்வை மட்டத்திலான பதவியொன்றில் ஆகக்குறைந்தது ஆறு(06) வருடங்களுக்கு குறையாத அனுபவம்.

அல்லது

ஆ) அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகப் பட்டமொன்றுடன் அல்லது அதற்கு சமனான தகைமையொன்றுடன் அங்கீகரிக்கப்பட்ட வர்த்தக அல்லது கைத்தொழில் நிறுவனம் ஒன்றில் முகாமை மட்டத்திலான பதவியொன்றில் ஆகக் குறைந்தது நான்கு (04) வருடங்களுக்கு குறையாத அனுபவம்.

அல்லது

இ) கூட்டுறவுப் பணியாளர் உயர் தராதரப் பத்திரப் பரீட்சையில் சித்தியுடன் கூட்டுறவு நிறுவனம் ஒன்றில் 04 வருட கால அனுபவம் அல்லது க.பொ.த உயர்தரப் பரீட்சையில் 03 பாடங்களுடனான சித்தியுடன் அங்கீகரிக்கப்பட்ட வர்த்தகம் அல்லது கைத்தொழில் நிறுவனம் ஒன்றில் முகாமை மட்டத்திலான பதவியில் ஆகக் குறைந்தது ஆறு (06) வருடங்கள் சேவையாற்றிய அனுபவம்.

02) பதவி :- சாரதி
பதவிக் குறியீடு :- 312/13
சம்பள அளவுத்திட்டம் **(66/2006 இன்படி)** :- 9950- 85X10 - 90X10 - 11700
வெற்றிட எண்ணிக்கை :- 01

**அங்கீகரிக்கப்பட்ட தகைமைகள்**

5ஆம் வகுப்பு கல்விச் சான்றிதழும் பஸ் அல்லது லொறி அல்லது இழுவைப்பெட்டியுடன் டிராக்ரர் சாரதி அனுமதிப் பத்திரத்துடன் நான்கு(04) வருடங்களுக்கு குறையாத அனுபவம்.

**குறிப்பு:-**

- விண்ணப்பதாரி விண்ணப்ப முடிவு திகதியன்று 45 வயதிற்கு குறைந்தவராக இருத்தல் வேண்டும்.
- சங்கப் பணியாளர்களுக்கு வயதெல்லை கவனத்தில் கொள்ளப்படமாட்டாது.
- சங்கப் பணியாளர்களுக்கும் சங்க எல்லைப்பரப்புக்குட்பட்டவர்களுக்கும் முன்னுரிமை வழங்கப்படும்.
- சங்கங்களில் கடமையாற்றுவோர் விண்ணப்பிப்பதாயின் தாங்கள் தொழில் செய்யும் சங்கத்தினூடாக தலைவரின் சிபார்சுடன் விண்ணப்பிக்கப்படல் வேண்டும்.
- விண்ணப்பப் படிவங்களை சங்க அலுவலகத்தில் ரூபா 30.00 செலுத்திப் பெற்றுக் கொள்ளலாம்.

**திகதி : 17.10.2013**

இ.உதயசூரியன்
தலைவர்
கோப்பாய் ப.தெ.வ.அபி.கூ.சங்கம்.(வ/து)

**விண்ணப்ப முடிவு திகதி : 11.11.2013**

விண்ணப்பதாரி விண்ணப்பங்களை பூரணப்படுத்தி கீழ் வரும் முகவரிக்கு விண்ணப்ப முடிவு திகதிக்கு முன்னதாக கிடைக்கக்கூடியதாக அனுப்புதல் வேண்டும்.

**தலைவர்,**
**கோப்பாய் பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கம்.(வ/து)**
**பருத்தித்துறை வீதி, கோப்பாய் தெற்கு, கோப்பாய்.**

**கடைகள் வாடகைக்கு**
**மேற்படி எமது சங்க அலுவலகக் கட்டடத்தின் கீழ்த் தளத் தொகுதியில் உள்ள இரு கடைகள் சகல வசதிகளுடன் வாடகைக்கு உண்டு.**
(32880)(5.6)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நேற்று நடைபெற்ற உலக சிறுவர் தின நிகழ்வுகள்







யாழ்ப்பாணம், ஒக்.17
யாழ்.மாவட்ட சிறுவர் அபிவிருத்திக் குழுவினர் சிறுவர் சபையின் உலக சிறுவர் தின நிகழ்வுகள் நேற்றுப் புதன் கிழமை யாழ்.வேம்படி மகளிர் கல்லூரி மண்டபத்தில் மாவட்ட சிறுவர் சபைத் தலைவர் தி.செந்தூரன் தலைமையில் நடைபெற்றது.

நிகழ்வில் மாவட்ட அரச அதிபர் சுந்தரம் அருமைநாயகம், மேலதிக அரச அதிபர் திருமதி ரூபினி வரதலிங்கம், வட மாகாண நன்னடத்தை சிறுவர் பராமரிப்புச் சேவை ஆணையாளர் தி.விஸ்வரூபன், வேம்படி மகளிர் கல்லூரி உயர்தரப் பாடசாலை அதிபர் திருமதி ச.வேணுகா, யாழ்.மாவட்ட பிரதேச செயலர்கள் உட்படப் பெருமளவு சிறுவர்களும் கலந்துகொண்டனர்.

முன்னதாக யாழ். அரச அதிபர் சுந்தரம் அருமைநாயகம் மங்கல விளக்கேற்றி நிகழ்வை ஆரம்பித்து வைத்தார். வேம்படி மகளிர் கல்லூரி மாணவிகள், புனித பொஸ்கோ வித்தியாலய சிறுவர்கள் உட்படப் பாடசாலைச் சிறுவர்களின் நடனம், நாடகம் உட்பட கலை நிகழ்வுகள் இடம்பெற்றன.

சிறுவர்களுக்கு விழிப்புணர்வூட்டும் குறும்படக் காட்சியும் காண்பிக்கப்பட்டது. குறும்படத்தின் பிரதியை வெளியிட்ட அரச அதிபர் ஏனைய பிரதேச செயலர்களுக்கும் குறும்படப் பிரதிகளை வழங்கினார். (வ-7)



# வலி.மேற்குப் பிரதேச சபையின் தலைமை அலுவலகம் நாளை திறப்பு

யாழ்ப்பாணம், ஒக்.17
வலிகாமம் மேற்கு பிரதேச சபைக்கென உள்ளூராட்சி உட்கட்டமைப்பு மேம்பாட்டு நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் நிர்மாணிக்கப்பட்ட தலைமை அலுவலக க் கட்டடம் நாளை வெள் ளிக்கிழமை நண்பகல் 12 மணிக்கு திறந்து வைக்கப்படவுள்ளது.

பிரதேச சபைத் தலைவர் திருமதி நா.ஜங்கரன் தலைமையில் நடைபெறும் நிகழ்வில் முதன்மை விருந்தினர்களாக வடக்கு மாகாண சபை முதலமைச்சர் க.வி. விக்னேஸ்வரன், நாடாளுமன்ற உறுப்பினர் மாவை. சேனாதிராஜா ஆகியோரும் சிறப்பு விருந்தினர்களாக நாடாளுமன்ற உறுப்பினர்களான ஈ.சரவணபவன், அ.விநாயகமூர்த்தி, எம்.ஏ.சுமந்திரன், சுரேஷ் பிரேமச்சந்திரன், சி.சிறிதரன் ஆகியோரும் கௌரவ விருந்தினர்களாக மாகாண சபையின் அமைச்சர்களும் கலந்துகொள்வர்.

நிகழ்வில் கட்டட நிர்மாணத்தில் பங்காற்றியவர்களுக்கான கௌரவிப்பும் இடம்பெறும். வடக்கு மாகாண முதலமைச்சர் மற்றும் அமைச்சர்கள் ஆகியோர் கலந்துகொள்ளும் முதலாவது பொது நிகழ்வு இது என்பது குறிப்பிடத்தக்கது. (வ-9)

## விற்பனைப் பிரதிநிதிகளால் காத்திருக்கும் நோயாளர்கள்

யாழ்ப்பாணம், ஒக்.17
அரச வைத்தியசாலைகளின் வெளிநோயாளர் பிரிவுகளில் கடமையில் உள்ள மருத்துவ அதிகாரிகளை மருந்து விற்பனைப் பிரதிநிதிகள் ஒருவர் பின் ஒருவராகச் சென்று முற்றுகையிடுவதால் தாம் நீண்ட நேரம் காத்திருக்க வேண்டிய நிலை ஏற்படுவதாக நோயாளர்கள் கவலை தெரிவிக்கின்றனர்.

வாகனங்களில் வரும் மருந்து விற்பனைப் பிரநிதிகள் தமது விற்பனைப் பொருள்களான மருந்துகளை அறிமுகப்படுத்தும் நடவடிக்கையில் ஈடுபடுவதால் நோயாளர்கள் நீண்ட நேரம் காத்திருக்க வேண்டியுள்ளது. எனவே உரிய அதிகாரிகள் இவ்விடயத்தில் நடவடிக்கை எடுக்குமாறு வேண்டுகோள் விடுக்கப்பட்டுள்ளது. (வ-9)

## இந்து ஆலயம் எரிக்கப்பட்டது மோதிக் கொண்ட இளைஞர்கள்

### வவுனியா பம்பைமடுவில் சம்பவம்

வவுனியா, ஒக்.17
வவுனியா பம்பைமடு பாரதிபுரம் பகுதியில் இந்து ஆலயம் ஒன்றில் வைக்கப்பட்டிருந்த சிலை தூக்கி வீசப்பட்டு ஆலயமும் எரிக்கப்பட்ட சம்பவத்தால் இங்குள்ள இளைஞர் குழுக்களுக்கிடையில் முறுகல் நிலையொன்று தோன்றியுள்ளது.

வவுனியா பம்பைமடுப் பகுதியில் பெருமளவு முஸ்லிம் குடும்பங்களுக்கு வீட்டுத் திட்டத்தின் மூலம் வீடுகள் கட்டப்பட்டு கையளிக்கப்படவுள்ள நிலையில், அதற்கு அருகில் ஏற்கெனவே வசித்து வந்த முஸ்லிம் மக்கள் பள்ளிவாசல் ஒன்றை அமைத்துள்ளனர். அந்தப் பகுதியில் இந்துக்கள் பிள்ளையார் ஆலயமொன்றைக் கட்டி வழிபட்டு வந்தனர். இந்த நிலையில் அண்மையில் பிள்ளையார் சிலை தூக்கியெறியப்பட்டு ஆலயமும் எரிக்கப்பட்டதைத் தொடர்ந்து குறிப்பிட்ட இடத்தில் இரண்டு குழுக்களுக்கிடையே மோதல் ஏற்பட்டது.

இதன்போது கற்கள், தடிகள் என்பன தாராளமாகப் பயன்படுத்தப்பட்டன. அங்குவந்த பொலிஸார் இந்த மோதலைக் கட்டுப்படுத்தினர்.

பொலிஸாரால் சமரசப் பேச்சுவார்த்தைகளும் நடத்தப்பட்டன. மீண்டும் அந்த இடத்தில் பிள்ளையார் சிலை வைக்கப்பட வேண்டும் எனவும், இல்லையேல் அந்தப் பகுதியில் போராட்டம் தொடரும் எனவும் இளைஞர் குழுவொன்று எச்சரிக்கை செய்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (க-402)

பரிசில் நாள் நிகழ்வில்...



கைதடி எழுதிடல் அ.த.க.பாடசாலையின் பரிசில் நாள் நிகழ்வு கடந்த சனிக்கிழமை பாடசாலை மண்டபத்தில் இடம்பெற்றது. முதன்மை விருந்தினர்களாக தென்மராட்சி கல்வி வலய ஆரம்பப் பிரிவு உதவிக் கல்விப்பணிப்பாளர் ந.சர்வேஸ் வரன், பண்டாரவளை கல்வி வலய உதவிக் கல்விப் பணிப்பாளர் சி.மதியழகன் ஆகியோர் கலந்து கொண்டனர். (ந-9)

## ஸ்கந்தவரோதயா ஆரம்ப பாடசாலையின் பரிசளிப்பு விழா

யாழ்ப்பாணம், ஒக்.17
கந்தரோடை ஸ்கந்தவரோதய ஆரம்பப் பாட சாலையின் நிறுவுநர் நினைவு தினமும் பரிசளிப்பு விழாவும் நாளை வெள்ளிக்கிழமை பி.ப. ஒரு மணிக்கு ஒறேற்றர் மண்டபத்தில் நடைபெறவுள்ளது. பாடசாலை அதிபர் வ.நந்தீஸ்வரன் தலைமையில் நடைபெறவுள்ள இந்த நிக்ழ்வில் பிரதம விருந்தினராக கொழும்பு பழைய மாணவர் சங்க உறுப்பினர் திருமதி யோ.யோகராஜனும் சிறப்பு விருந்தினராக வலி காமம் வலய உதவிக் கல்விப் பணிப்பாளர் (ஆங்கிலம்) எஸ்.கணேசலிங்கமும் கலந்துகொள்ளவுள்ளார்.

நினைவுப் பேருரையை மானிப்பாய் இந்துக் கல்லூரியின் ஓய்வுநிலை அதிபர் எஸ்.உதயபாலன் நிகழ்த்துவார். (வ-10)

# பாடசாலைக் காணியில் வசிக்கும் குடும்பங்களை வெளியேற்றுக

### மாகாணக் கல்வியமைச்சரிடம் வேண்டுகோள்

அக்கராயன், ஒக்.17
அக்கராயன் ஆரம்ப வித்தியாலயத்துக்குரிய காணியில் வசிக்கின்ற ஐந்து குடும்பங்களுக்கு மாற்றிடமொன்றை வழங்கி அந்தக் குடும்பங்களை அங்கிருந்து வெளியேற்றுமாறு வடமாகாணக் கல்வி அமைச்சரிடம் வேண்டுகோள் விடுக்கப்பட்டுள்ளது.

குறித்த பாடசாலையின் அபிவிருத்திச் சங்கத்தினர் வட மாகாண கல்வியமைச்சரிடம் இந்த வேண்டுகோளை விடுத்துள்ளனர்.

மேற்படி விடயம் தொடர்பாக கிளிநொச்சி அரச அதிபர், கரைச்சிப் பிரதேச செயலர், வலயக் கல்விப் பணிப்பாளர் மற்றும் மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர்கள் ஆகியோருக்குப் பல தடவைகள் மனுக்கள் கையளித்த போதிலும் இது வரை எதுவித நடவடிக்கை யும் மேற்கொள்ளப்பட வில்லை.

**இந்தப் பாடசாலைக் காணியில் 5 குடும்பங்களையும் வைத்துக் கொண்டு பாடசாலையை இயக்க முடியாதுள்ளது.**

இந்தப் பாடசாலைக் காணியில் 5 குடும்பங்களையும் வைத்துக் கொண்டு பாடசாலையை இயக்க முடியாதுள்ளது. மாணவர்களின் வகுப்பறைகளுக்கு மிக அருகில் குடிசைகள் அமைந்துள்ளமை பெரும் இடராக உள்ளதாகவும் பெற்றோர்களும், மாணவர்களும் தெரிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (க-18)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 1,50,000 மாணவருக்கு பார்வைக் குறைபாடுகள்



கொழும்பு. ஒக். 17
நாட்டிலுள்ள 1 லட்சத்து 50 ஆயிரம் பாடசாலை மாணவர்கள் பார்வைக் குறைபாட்டுக்கு உள்ளாகியுள்ளனர் இவ்வாறு சுகாதார சேவைகள் பணிப்பாளர் பாலித்த மஹிபால தெரிவித்துள்ளார்.

நாட்டிலுள்ள பாடசாலை மாணவர்களில் 4 லட்சத்து 58 ஆயிரம் பேர் பல்வேறு விதமான பார்வைக் குறைபாடுகளால் துன்புறுகின்றனர்.

ஒரு லட்சத்து 60 ஆயிரம் மாணவர்கள் அரைகுறைப் பார்வையுடன் அவதிப்படுகின்றனர் என்று அவர் கூறினார்.

இது குறித்து அவர் மேலும் தெரிவித்ததாவது:-

பாடசாலை மாணவர்களை இலக்காகக் கொண்டு 'விஷன் 2020' செயற்றிட்டமானது கண்களைப் பரிசோதித்து பொருத்தமான மூக்குக் கண்ணாடிகளை வழங்கும் நடவடிக்கையை மேற்கொள்கிறது.

அந்த மூக்குக் கண்ணாடிகள் உடைந்து சேதமடையும் ஒவ்வொரு சந்தர்ப்பத்திலும் அவை மீளவும் சீர்படுத்திக் கொடுக்கப்படும்.

2020 ஆம் ஆண்டில் நாட்டில் இருந்து குருட்டுத் தன்மையை ஒழித்துவிடுவதற்கு செயற்படுத்தப்பட்டு வரும் 'விஷன் 2020' செயற்றிட்டத்தின் கீழ் இதுவரையிலும் பார்வைக் குறைபாடுகளால் துன்புறும் 40 ஆயிரம் பாடசாலை மாணவர்களுக்கு இலவசமாக மூக்குக் கண்ணாடிகள் வழங்கப்பட்டுள்ளன.

இந்தத் திட்டத்துக்காக அரசிடமிருந்து எந்தவொரு உதவித் தொகையும் பெறப்படவில்லை. செலவாகும் தொகைகள் அன்பளிப்புகள் மூலமாகவே கிடைத்துள்ளன.

சுகாதார அமைச்சர் மைத்திரி பால சிறிசேனாவின் வழிகாட்டலில் மூக்குக் கண்ணாடிகளைத் தயாரிக்கும் பட்டறையொன்று தேசிய கண் வைத்தியசாலையில் ஏற்கனவே நிறுவப்பட்டுள்ளது.

அதன் மூலம் பாடசாலை மாணவர்களுக்கும், குறைந்த வருமான மீட்டும் முதியோர்களுக்கும் இலவசமாக மூக்குக் கண்ணாடிகளைப் பெற்றுக் கொடுப்பதற்கு ஒழுங்குகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன-என்றார். (ச-22)


## கிறீன் ஞாபகார்த்த வைத்தியசாலை
## மானிப்பாய்
### வாய் பல் சிகிச்சை நிலையம்

**Dr. R. விசாகறுபன்**

ஞாயிறு தவிர்ந்த ஏனைய நாள்களில் பிற்பகல் 5.30 மணிக்கு மானிப்பாய் கிறீன் ஞாபகார்த்த வைத்திய சாலையில் வாய் பல் சிகிச்சை நடைபெறும் என்பதை மகிழ்ச்சியுடன் அறியத் தருகின்றேன்.

Dr.R.விசாகறுபன், B.D.S (பெரதெனியா), பல் வைத்திய நிபுணர் அவர்கள் சிகிச்சை அளிப்பார்.

அரசாங்க விடுமுறை நாள்களில் மதியம் 12.00 மணிக்கு நடைபெறும். இங்கு வருகை தந்து நோயாளிகள் பயன்பெறுமாறு கேட்டுக் கொள்கின்றேன்.

Dr.V.DAVID RETNANATHAN
வைத்திய மேலதிகாரி
077 617 1451
(32904)(7.6)



## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

விண்ணில் 1944 ♦ 02 ♦ 23



மண்ணில் 2012 ♦ 10 ♦ 26

**அமரர் முத்தையா – கனகசிங்கம்**

கனவுகள் சுமந்த கண்கள் கண்ணீரில் வாடுதய்யா?
நினைவுகளில் என்றும் நீங்காது வாழ்கின்றீர்
ஆண்டு ஒன்று ஆனாலும் ஆறாத்துயரில் தவிக்கின்றோம்
உங்கள் ஆத்மா சாந்தியடைய இறைவனை
வேண்டுகின்றோம்.

உறவினர்கள்,
அரியாலை.








## மணமகள் தேவை

யாழ். இந்து கௌரவ குடும்பம் 9.21.1979 இரவு 11.55 புனர்பூசம் 4ஆம் பாதம் சூரியன். செவ்வாய் 4ஆம் இடத்திலும். 42 பாவமுடைய தனியார் நிறுவனம் ஒன் றில் வேலை செய்யும் மணமகனுக்கு பொருத்தமான மணமகளை எதிர்பார்க்கின்றோம்.

T.P: 077 3384974 A/L படித்தவர்.



உதயன்
விளம்பரத் தொடர்புகளுக்கு
advt@uthayan.com
0215671111



## வீடு வாடகைக்கு

யாழ்ப்பாணம் மின்சார நிலைய வீதி 3ஆம் ஒழுங்கையில் அதாவது யாழ் போதனா வைத்தியசாலைக்கு பின்புறமாக அமைந் துள்ள சகல வசதிகளுடனும் கூடிய வீடு வாடகைக் குண்டு.

தொடர்பு: 077 582 0084 (32885) (7.6)



## வீடு வாடகைக்குண்டு

கோவில் வீதி பொஸ்கோ பாடசாலைக்கு அருகில் சகல வசதிகளுடன் கூடிய வீடு வாடகைக்குண்டு.

(சிறிய குடும்பம், ஆசிரியர்கள் விரும்பத்தக்கது) (32883) (7.6)

தொடர்பு: 021 222 1820, 077 789 4384



## கேள்வி அறிவித்தல்
## யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்

1. மருத்துவபீட உணவகம் - திருநெல்வேலி
2. பாலசிங்கம் ஆண்கள் விடுதி உணவகம் - திருநெல்வேலி
3. ஆனந்தக்குமாரசாமி பெண்கள் விடுதி உணவகம் - திருநெல்வேலி
4. பிரதான உணவகம் - திருநெல்வேலி
5. இராமநாதன் நுண்கலைக்கழக உணவகம் - மருதனார்மடம்
6. மருத்துவபீட மாணவர் விடுதி உணவகம் - யாழ்ப்பாணம்
7. சித்தமருத்துவத்துறை உணவகம் -

மேற்படி உணவகங்களை நடத்துவதற்கு யாழ்ப்பாணப் பல்கலைக்கழக பதிவாளர் பணிமனையில் 2013-11-04 ஆம் திகதி முற்பகல் 10.00 மணிவரை பொறியிடப்பட்ட கேள்விகள் ஏற்றுக்கொள்ளப்படும்.

மீளளிக்கப்படும் கேள்வி வைப்புப் பணமாக ரூபா 2000/= உம் மீளளிக்கப்படாத கட்டணமாக ரூபா 500/= உம் தனித் தனியாக பல்கலைக்கழக நிதிக் கிளை யில் செலுத்தி பெற்றுக்கொண்ட பற்றுச் சீட்டினைச் சமர்ப்பித்து கேள்விப் படிவங்களை இப்பல்கலைக்கழக நலச் சேவைகள் கிளையிலிருந்து பெற்றுக் கொள்ளலாம். ஒவ்வொரு உணவகத்துக்கும் தனித்தனி கேள்விப்படிவங்கள் அனுப்பப்படுதல் வேண்டும். மேற்குறிப்பிட்ட கேள்விப் படிவங்களில் அனுப்பப்படாத விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும். கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் விண்ணப்பிக்கும் உணவகத்தின் பெயர் தெளிவாகக் குறிப்பிடப்படல் வேண்டும்.

மேலதிக விவரங்களை அலுவலக நேரங்களில் நலச்சேவைகள் கிளையில் இருந்து பெற்றுக்கொள்ளலாம்.

பதிவாளர்
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்.
14.10.2013
(சி/12884) (7.6.3)



## வலி மேற்குப் பிரதேச சபை
## தலைமை அலுவலக புதிய கட்டட
## திறப்பு விழா அழைப்பு

**தலைமை**

**கௌரவ தவிசாளர் திருமதி நா. ஐங்கரன்**

**காலம்: 18.10.2013 , நேரம்: நண்பகல் 12 மணிமுதல் 1 மணிவரை**

### பிரதம விருந்தினர்கள்

**கௌரவ க.வி. விக்னேஸ்வரன்**
*முதலமைச்சர் – வடக்கு மாகாண சபை*

**கௌரவ மாவை .சோ. சேனாதிராசா**
*நாடாளுமன்ற உறுப்பினரும் தமிழ்த் தேசியக்கூட்டமைப்பின் செயலாளர் நாயகமும்*

### சிறப்பு விருந்தினர்கள்

**கௌரவ .ஈ. சரவணபவன்**
*நாடாளுமன்ற உறுப்பினரும் வட்டுக்கோட்டைத் தொகுதி அமைப்பாளரும்*

**கௌரவ .அ. விநாயகமூர்த்தி**
*நாடாளுமன்ற உறுப்பினர்*

**கௌரவ .எம்.ஏ. சுமந்திரன்**
*நாடாளுமன்ற உறுப்பினர்*

**கௌரவ சுரேஸ். க. பிரேமச்சந்திரன்**
*நாடாளுமன்ற உறுப்பினர்*

**கௌரவ சி. ஸ்ரீதரன்**
*நாடாளுமன்ற உறுப்பினர்*

### கௌரவ விருந்தினர்கள்

**கௌரவ அமைச்சர்கள்**
*வடக்கு மாகாண சபை*

*அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.*
*வலி மேற்குப் பிரதேச சபை*





அன்பான வாடிக்கையாளர்களுக்கு

Deewali Offer

## தீபாவளி
## நல்வாழ்த்துக்கள்

**மூர்த்தி டிஜிற்றல் கலர் லாப்**
62/20 ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்



**தீபாவளி விசேட சலுகைகள்.**

4R - 11/=

அல்பம் பிரதிகளுக்கு
10 + 15 : 80/=
10 + 30 : 170/=
12 + 30 : 190/=

High Quality Banner (ISQ) 50/=

03.11.2013 வரை மட்டுமே


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



கொழும்பு காலிமுகத் திடலில் நேற்று ஹஜ் தொழுகை நடைபெற்றது. இதில் பெரும் எண்ணிக்கையான முஸ்லிம் மக்கள் கலந்துகொண்டனர்.

# 47,000 பாலியல் தொழிலாளர் 94,000 வாடிக்கையாளர்கள்

## இலங்கையின் நிலை இது தான்

கொழும்பு.ஒக் 17

இலங்கையில் 35,000 முதல் 47,000 வரையான பெண் பாலியல் தொழிலாளர்கள் உள்ளனர் என்றும் இவர்களைத் தேடி ஒரு நாளைக்கு 70,000 முதல் 94,000 வாடிக்கையாளர்கள் செல்கின்றனர் என்றும் பாலியல் நோய்கள் மற்றும் எச்.ஐ.வி எயிட்ஸ் ஒழிப்பு அமைப்பு தெரிவித்துள்ளது.

இலங்கையில் எச்.ஐ.வி தொற்று அதிகரிப்பதற்கான காரணங்கள் தொடர்பில் ஆய்வு செய்யப்பட்டபோது, அதற்கு முறைகேடான பாலியல் தொடர்புகளே பிரதான காரணம் எனக் கண்டறியப்பட்டதாகவும் இதனால், குறித்த பெண் பாலியல் தொழிலாளர்கள் விசேட அவதானத்துக்குரியவர்கள் என்றும் அந்த அமைப்பின் விசேட நிபுணர் தர்ஷனி விஜேவிக்கிரம கூறியுள்ளார்.

உலகில் எச்.ஐ.வி தொற்றுக்கு உள்ளானவர்களின் எண்ணிக்கை 3 கோடி 40 இலட்சமாகும். 2011ஆம் ஆண்டில் மாத்திரம் நாளொன்றுக்கு 7,000 பேர் இந்தத் தொற்றுக்கு ஆளாகியுள்ளனர். எச்.ஐ.வி தொற்றுக்கு உள்ளானவர்களில் 97 சதவீதமானவர்கள் குறைந்த மற்றும் மத்திய வருமானம் பெறும் நாடுகளிலேயே காணப்படுகின்றனர்.

தெற்காசிய வலயத்தில் மாத்திரம் 2.5 மில்லியன் எச்.ஐ.வி தொற்றுக்குள்ளானவர்கள் வசிக்கின்றனர். இந்தத் தொகையானது 2001ஆம் ஆண்டில் காணப்பட்ட தொகையை விட 7 இலட்சம் பேரைக் குறைவாகவே கணிப்பிட்டுக் காட்டுகின்றது.

எவ்வாறாயினும், இலங்கை, இந்தியா, பங்களாதேஷ், பிலிப்பைன்ஸ் மற்றும் இந்தோனேஷியா போன்ற நாடுகளில் எச்.ஐ.வி தொற்றுக்கு உள்ளாகின்றவர்களின் எண்ணிக்கை அதிகரித்துக்கொண்டே செல்வதாக தர்ஷனி விஜேவிக்கிரம மேலும் குறிப்பிட்டார். (த)

## பாராட்டு விழா

யாழ்ப்பாணம், ஒக்.17

காரைநகர் ஊரி அ.மி.த.க வித்தியாலயப் பாராட்டு விழா இன்று வியாழக்கிழமை பிற்பகல் 3 மணிக்கு பாடசாலை திறந்த வெளியரங்கில் இடம்பெறவுள்ளது.

வித்தியாலய அதிபர் இ.ஸ்ரீதரன் தலைமையில் இடம்பெறும் இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராக வட மாகாண கல்வி அமைச்சின் பிரதிச் செயலாளர் ப.விக்னேஸ்வரன் கலந்துகொள்வார்.

சிறப்பு விருந்தினர்களாக தீவக வலயக் கல்விப்பணிப்பாளர் ரி.ஜோன் குயின்ரஸ், ஓய்வு பெற்ற தீவக வலயக் கல்விப் பணிப்பாளர் ஜி.வி.இராதாகிருஷ்ணன் மற்றும் காரைநகர் அபிவிருத்திச் சபைத் தலைவர் சிவா. மகேசன் ஆகியோர் கலந்துகொள்ளவுள்ளனர். (த-400)

## கட்டட திறப்பு விழா

யாழ்ப்பாணம், ஒக்.17

மாவை மத்திய சனசமூக நிலையத்தின் புதிய கட்டடத் திறப்பு விழா நாளை காலை 9 மணிக்கு இடம்பெறவுள்ளது.

நிலையத் தலைவர் க.சுப்பிரமணியம் தலைமையில் இடம்பெறும் இந்த நிகழ்வில் பிரதம விருந்தினர்களாக யாழ் மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் மாவை சேனாதிராசா, வலி வடக்குப் பிரதேச சபைத் தவிசாளர் சோ.சுகிர்தன், வடக்கு மாகாண சபை உதவிச் செயலாளர் பா.ஜெயகரன் ஆகியோர் கலந்துகொள்ளவுள்ளனர். (த-400)

# போயா தினத்தில் மிருகப்பலியை தவிர்க்கவேண்டும் முஸ்லிம்கள்

## இலங்கை முஸ்லிம் குருமார்கள் கோரிக்கை

கொழும்பு.ஒக் 17

ஹஜ் பெருநாள் கொண்டாட்டத்தையடுத்து போயா தினம் வருவதைக் கருத்தில் கொண்டு, அந்தத் தினத்தில் மிருகப்பலி கொடுப்பதைத் தவிர்க்குமாறு இலங்கை முஸ்லிம் குருமார்கள் முஸ்லிம் வழிபாட்டாளர்களிடம் வேண்டுகோள் விடுத்துள்ளனர்.

இந்த நாட்டின் பௌத்த மக்களின் மனங்களை நோகடிக்காமல் இருப்பதற்காக இந்த வேண்டுகோளைத் தொழுகையின்போது கூடியிருந்த மக்களிடம் விடுத்ததாக முஸ்லிம் குருவான மௌலவி எம்.ஹனான் தெரிவித்தார்.

எம்மோடு வாழும் மக்களின் சமய,கலாசார மரபுகளை நாம் மதிக்கவேண்டும் என அவர் தொழுகையின் பின்னர் கூறினார்.

இஸ்லாத்தில் ஒத்து வாழ்தல் என்பது கட்டாயமாக்கப்பட்டுள்ளது. ஆனால், மிருகப்பலி கொடுத்தல் என்பது விருப்பத்துக்கு உரியது மட்டுமேயாகும். எனவே, பெரும்பான்மை மக்களின் மனதைப் புண்படுத்தும் விலங்குப்பலியைத் தவிர்த்துக்கொள்ளலாம் என மதினா பல்கலைக்கழகத்தைச் சேர்ந்த இலங்கை அறிஞர் ஷேக் முயூன் அபாஸ் கூறினார்.

மிருகங்களை இறைச்சிக்காக வெட்டுவது தொடர்பிலான மாற்று வழிகளை நாம் ஆராய வேண்டும். கொண்டாட்டங்களின் போது மிருகங்களை வெட்டவும் மாமிசத்தைப் பகிரவும் நாட்டின் பல பாகங்களிலும் மிக நவீனமான இறைச் சிக்காக மிருகங்களை வெட்டும் மடுவங்களை அமைப்பது இவ்வாறான பிரச்சினைகளை வெற்றிகரமாக எதிர்கொள்ளும் ஒரு வழியாகும் என்றும் அபாஸ் கூறினார்.

இதன் மூலம் தனியாள்கள் தாமே பலிகொடுக்கவேண்டிய தேவை அற்றுப்போகும். இந்த விடயத்தில் முஸ்லிம் தொண்டு நிறுவனங்கள் கவனிக்கவேண்டுமென அவர் கூறினார். (த)

# 3 இலங்கையர் கியூ பொலிஸாரால் கைது

சென்னை,ஒக் 17

வெவ்வேறு முகாம்களைச் சேர்ந்த இலங்கைத் தமிழ் அகதிகள் 15 பேரை ஏமாற்றிப் பணம் பறித்தமைக்காக இலங்கைத் தமிழர் மூவர் உட்பட நால்வர் கியூ பிரிவுப் பொலிஸாரினால் தேசிய பாதுகாப்பு சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இந்த நால்வரில் இருவர் மண்டபம் முகாமைச் சேர்ந்தவர்கள் என்றும் தெரிவிக்கப்படுகின்றது. தமிழ் நாட்டின் முகாம்களில் வசிக்கும் 15 பேரிடமிருந்து இந்த நால்வரும் 20 இலட்சம் வரையான பணம் மற்றும் நகைகளையும் பெற்றனர் எனக் கூறப்பட்டுள்ளது. இவர்கள் இந்த 15 பேரையும் ஆஸ்திரேலியாவுக்குச் சட்ட விரோதமாக அனுப்புவதாகக் கூறி பணம் பெற்றதை ஒப்புக்கொண்டுள்ளனர்.

பணம் கொடுத்தவர்களில் சிலர் தாம் ஏமாற்றப்படுவதாக உணர்ந்து பொலிஸில் முறையிட்டதைத் தொடர்ந்து சந்தேக நபர்களான சிவசங்கர், ஸ்ரீஜயன் ஆகியோரையும் வேறு இரு வரையும் பொலிஸார் கைது செய்தனர். பணம் வாங்கியவர்களில் சதீஸ்குமார், வீரமணி ஆகிய இருவரும் தலைமறைவாகியுள்ளனர்.

தேசிய பாதுகாப்புச் சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்ட நால்வரும் கோயம்புத்தூர் மற்றும் புழல் மத்திய சிறையில் தடுத்து வைக்கப்பட்டுள்ளனர் என்று இந்தியச் செய்திகள் தெரிவித்தன. (த)

# முதலாம் பக்கத் தொடர்ச்சிகள்

## வடக்கு - கிழக்கு

அந்த மக்களுக்கான பாதுகாப்பையும் அவர்களுக்கான உரிமையையும் பெற்றுக்கொடுக்காத காரணத்தால் முஸ்லிம் மக்கள் பெரும் துன்பங்களை எதிர் நோக்கினர்.

அந்தச் சந்தர்ப்பத்திலேயே, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தன், முஸ்லிம் மக்களுக்காகக் குரல் கொடுத்து அவர்களின் பிரச்சினையையும் சர்வதேசம் வரை எடுத்துச் சென்றார். இந்தக் காரணத்தினால் முஸ்லிம் மக்கள் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் மீதும் அதன் தலைமைத்துவத்தின் மீதும் நம்பிக்கை வைத்துள்ளனர்.

எனவே தமிழ் - முஸ்லிம் மக்களை இணைத்து அனைவருக்குமான நல்லதொரு ஆட்சியை வடக்கு - கிழக்கில் அமைத்து அவர்களைப் பாதுகாப்போம்.

**அரசுடன் இணையத் தயாரில்லை**

அரசுடன் இணைந்து செயற்படவேண்டிய அவசியம் தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கு இல்லை. இணைந்து செயற்படப் போவதுமில்லை. நாம் சட்டத்தின் அடிப்படையிலேயே எமது நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றோம். இதில் யாருடைய தலையீடும் அல்லது அடக்கு முறையும் இருக்கக் கூடாதென்பதே எமது பிரதான நோக்கமாகும்.

மத்திய அமைச்சரவைக் கூட்டத்துக்கு எம்மை அரசு அழைத்திருப்பதற்கான காரணத்தைப் புரிந்து கொள்ள முடியவில்லை. மத்திய அமைச்சரவைக் கூட்டத்தில் நாம் கலந்து கொள்வது தொடர்பில் எமது கட்சியில் கலந்துரையாடிய பின்னர் முடிவுகளை எடுக்க முடியும்.

வெறுமனே அரசியல் காரணங்களினால் முரண்டு பிடித்துக் கொண்டு அரசைப் பகைத்துக் கொள்வதனால் எவ்வித அர்த்தமுமில்லை. அதனால் நாம் அரசை எதிர்க்கப் போவதுமில்லை. ஆகவே முடிந்தவரை, அரசின் ஒத்துழைப்போடு வடக்கு மாகாணத்தில் எமது மக்களுக்காக அனைத்து நடவடிக்கைகளையும் எடுப்போம்.

**தமிழரசுக் கட்சி தன்னிச்சையாக செயற்படவில்லை**

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பானது தமிழ்க் கட்சிகள் பலவற்றை உள்ளடக்கிய மக்கள் கூட்டமைப்பாகும். இதில் தமிழரசுக் கட்சியையும் ஒரு கூட்டுக் கட்சியாகவே நாம் கருதுகின்றோம்.

தமிழரசுக் கட்சி தனித்துச் செயற்படுகின்றது என்ற கூற்றை எம்மால் ஏற்றுக்கொள்ள முடியாது. வடக்கு மாகாண சபையைப் பொறுத்தவரை ஒவ்வொரு கட்சியிலுமுள்ள அங்கத்தவர்களுக்கு அமைச்சுப் பதவி கொடுத்து கட்சி நடத்துவது கடினமானது. நாம் எமக்கு கிடைத்துள்ள பதவிகளைக் கட்சி அடிப்படையில் பார்க்காது தகுதி அடிப்படையிலேயே பார்க்கின்றோம்.

இதன் காரணத்தினாலேயே அண்மைக் காலங்களில் கட்சிக்குள் சில கருத்து முரண்பாடுகளும், மனஸ்தாபங்களும் ஏற்பட்டன. எனினும் இன்று எமது கூட்டமைப்பு ஒற்றுமையாகவே செயற்பட ஆரம்பித்துள்ளது - என்றார். (த-5)

## கடல்

பட்ட முல்லைத்தீவு மற்றும் வடமராட்சி கிழக்கு மக்கள் கடந்த சனிக்கிழமை நிகழ்ந்த திடீர் சீற்றத்தாலும் பாதிக்கப்பட்டுள்ளனர்.

பாதிக்கப்பட்டவர்கள் தொடர்பான விபரங்களை நேரடியாகச் சென்று திரட்டியிருந்தேன். திரட்டப்பட்ட விவரங்களை முதலமைச்சரிடம் கையளித்துள்ளேன் " என்று அவர் மேலும் கூறினார்.

பாதிக்கப்பட்ட மக்களுக்கு உடனடியாக நிவாரண உதவிகளைப் பெற்றுக்கொடுப்பது தொடர்பில் நேற்றைய கலந்துரையாடலில் ஆராயப்பட்டுள்ளது. இடர் முகாமைத்துவ அமைச்சினூடாக குறித்த நிவாரணத்தைப் பாதிக்கப்பட்டவர்களுக்குப் பெற்றுக் கொடுப்பது தொடர்பில் ஆராயப்பட்டுள்ளது" என்றும் அமைச்சர் குறிப்பிட்டார். (த-5)

## யாழ். நகரில்

ரியா வீதியிலுள்ள வீடு ஒன்றின் மலக்குழியிலிருந்தே இந்தக் குண்டு மீட்கப்பட்டது. பல வருடங்களாக இராணுவத்தினர் அந்தப் பகுதி முழுவதையும் தம் கட்டுப்பாட்டில் வைத்திருந்தனர். கடந்த வருடமே அந்த வீதி மக்கள் பயன்பாட்டுக்கு விடுவிக்கப்பட்டது.

இந் நிலையில் அங்கு சென்ற வீட்டு உரிமையாளர் மலசல கூடக் குழியைத் துப்பரவு செய்த போதே அதற்குள் குண்டு இருந்தமை கண்டறியப்பட்டது. அங்கு விரைந்த இராணுவத்தினர் அதனை மீட்டு சென்றனர். (த-4)

## பேனா

உள்ளிட்ட இருவரைப் பொலிஸார் நேற்று முன்தினம் கைது செய்தனர். அவர்களிடம் மேற்கொண்ட விசாரணைகளின் போதே பேனா வடிவிலான பிஸ்டல் ரகத் துப்பாக்கி மீட்கப்பட்டுள்ளது.

இவர்கள், புத்தளம், சிலாபம், வென்னப்புவ, மாரவில மற்றும் தங்கொட்டுவ போன்ற பிரதேசங்களில் இடம்பெற்ற கொள்ளைச் சம்பவங்களுடன் தொடர்புடையவர்கள் என்று தெரிவிக்கப்படுகின்றது. (த)

## இனி ஒருபோதும்

காகச் சேவையாற்றாது அவர்களின் சுய நலத்துக்காக மக்களைக் கொல்ல நினைப்பது தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினதும் சர்வதேசத்தினதும் சதித் திட்டமாகும். இதைத் தொடர்ந்தும் நடைமுறைப்படுத்தினால் தற்போது வடக்கில் வாழும் மக்களும் இறக்க நேரிடும்.

தமது சுயவிருப்புக்காக மத்திய அரசைக் கட்டுப்படுத்த முடியாது. இலங்கையைப் பொறுத்த வரையில் அனைத்து மாகாணங்களுக்கும் அனைத்து இன மக்களுக்கும் ஒரே சட்டமே செயற்படுகின்றது. இதில் வடக்கு மாகாணத்துக்கு ஒரு மாதிரியும் ஏனைய மாகாணங்களுக்கு வேறு மாதிரியும் சட்டத்தைப் பிரயோகித்தால் அது சட்டச் சிக்கலையும், பிரிவினையையும் ஏற்படுத்தும் என்றார்.

கட்சியின் செயலர் ஞானசார தேரர் தெரிவிக்கையில், வடக்கையும், கிழக்கையும் ஒன்றிணைத்துத் தனிநாட்டுக் கோரிக்கையை நடைமுறைப்படுத்தத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு நினைத்தால் அதற்கான தகுந்த பதிலடியைக் கொடுப்போம்.

கிழக்கில் முஸ்லிம் தீவிரவாத சக்திகளும் வடக்கில் புலித் தீவிரவாதிகளும் ஒன்றிணைந்து வடக்கிலும் கிழக்கிலும் வாழும் தமிழ், முஸ்லிம் மக்களைக் கொன்று குவிக்கவே திட்டம் தீட்டுகின்றனர் - என்றார். (த-5)

## 3 தினங்களில்

தீவு மற்றும் வவுனியா மாவட்டங்களில் முன்னெடுக்கப்படும் என்று மன்னார் பிரஜைகள் குழுவினர் தெரிவித்துள்ளனர். 1990 ஆம் ஆண்டிலிருந்து 2009 ஆம் ஆண்டு வரையில் காணாமற் போனவர்கள் தொடர்பிலான விவரங்கள் ஜனாதிபதி ஆணைக்குழுவினால் திரட்டப்பட்டு வருகின்றன.

ஒவ்வொரு மாவட்டத்துக்கும் பயணம் மேற்கொள்ளும் மன்னார் பிரஜைகள் குழுவினர் காலை 9 மணி முதல் மாலை 6 மணி வரை சகல இடங்களிலும் பதிவு நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றனர். இதற்கமைய காணாமற்போனோரின் உறவுகள் பொலிஸ் பதிவு, மனித உரிமைகள் ஆணைக்குழுவில் செய்யப்பட்ட பதிவுகளின் பிரதிகள் உள்ளிட்ட ஆவணங்களை கொண்டு வருமாறு கேட்கப்பட்டுள்ளனர்.

யாழ்ப்பாணத்தில் முன்னெடுக்கப்பட்ட பதிவு நடவடிக்கைகளின் போது 750 பேர் வரையில் பதிவுகளை மேற்கொண்டுள்ளனர். இதுவரை பதிவு செய்வதற்குத் தவறியவர்கள் இன்று வியாழக்கிழமை திருமதி என். கமலநாயகி, இல.16, கச்சேரி கிழக்கு ஒழுங்கை, யாழ்ப்பாணம் என்ற முகவரியில் பதிவு செய்ய முடியும். தொடர்பு கொள்வதாயின் 0212221037 என்ற இலக்கத்துடன் தொடர்பு கொள்ளுமாறு அறிவிக்கப்பட்டுள்ளது.

கிளிநொச்சியில் முன்னெடுக்கப்பட்ட நடவடிக்கையில் 500 பேர் பதிவுகள் செய்துள்ளனர். பதிவு செய்யத் தவறியவர்கள் திருமதி யோகராசா கனகரஞ்சினி, இல.59 தொண்டமான் நகர், கிளிநொச்சி என்ற முகவரியில் பதிவு செய்ய முடியும்.

நேற்றுப் புதன்கிழமை முல்லைத்தீவு மாவட்டத்தில் மேற்கொள்ளப்பட்ட பதிவு நடவடிக்கைகளில் 325 பேரே பதிவு செய்துள்ளனர். எஞ்சியவர்கள் பதிவு செய்வதற்கு வசதியாக, கள்ளப்பாடு வடக்கு பொதுநோக்கு மண்டபத்திலும், 10 ஆம் வட்டாரம், வற்றாப்பளை, புதுக்குடியிருப்பு (தற்போதைய மாகாண சபை உறுப்பினர் கனகசுந்தரசுவாமியின் வதிவிடம்) பதிவுகள் இடம்பெறவுள்ளன.

இன்று வியாழக்கிழமை வவுனியா இறம்பைக்குளம், புனித அந்தோனியார் ஆலயத்தில் பதிவுகள் மேற்கொள்ளப்படவுள்ளன. அத்துடன் நாளை வெள்ளிக்கிழமை மன்னார் மாவட்டத்தில் பதிவுகள் மேற்கொள்ளப்படவுள்ளன.

இந்தப் பதிவுகள் தொடர்பில் மேலதிக தகவல்களைப் பெற விரும்புவோர் மன்னார பிரஜைகள் குழுவின் செயலர் சிந்தாத்துரை 0771139897 என்ற இலக்கத்துடன் தொடர்பு கொள்ளுமாறு அறிவிக்கப்பட்டுள்ளது (த-5)

## மாகாண

கிழமை யாழ். வீரசிங்கம் மண்டபத்தில் இடம் பெற்றது. இதில் 9 உறுப்பினர்கள் பங்கேற்கவில்லை.

இதன் பின்னர் பங்கேற்காத 9 உறுப்பினர்களும் முள்ளிவாய்க்காலில் பதவிப்பிரமாணம் செய்வதாகத் தெரிவிக்கப்பட்டிருந்த போதும் பின்பு மன்னார் ஆயரின் தலையீட்டினால் அது கைவிடப்பட்டது. அவ்வாறிருந்தும் கடந்த 14 ஆம் திகதி திங்கட்கிழமை ரெலோ உறுப்பினர் க.சிவாஜிலிங்கம் முள்ளி வாய்க்காலிலும், புளொட் உறுப்பினர்கள் கந்தரோடையிலும், ஈ.பி.ஆர்.எல்.எவ் மற்றும் ரெலோ உறுப்பினர்கள் இருவர் கொழும்பில் முதலமைச்சர முன்பாகவும் பதவியேற்றிருந்தனர்.

ஈ.பி.ஆர்.எல்.எவ். சார்பில் தெரிவு செய்யப்பட்டிருந்த நான்கு பேர் பதவியேற்காமலிருந்தனர். இந்த நிலையில் வவுனியாவில் நேற்று மூன்று உறுப்பினர்கள் பதவிப் பிரமாணம் செய்துள்ளனர்.

ஈ.பி.ஆர்.எல்.எவ்வைச் சேர்ந்தவரகளான க.சர்வேஸ்வரன்,ம.தியாகராஜா, க.சிவமோகன் ஆகியோர் தமது பதவிப் பிரமாணத்தைச் செய்து கொண்டனர்.

வவுனியா உள்வட்ட வீதியில் அமைந்துள்ள சிந்தாமணி ஆலயத்தில் இருந்து ஊர்வலமாக அழைத்துவரப்பட்ட வட மாகாணசபை உறுப்பினர்கள் இந்திரன்ஸ் விருந்தினர் விடுதியில் சட்டத்தரணி கே.தயாபரன் முன்னிலையில் பதவிப் பிரமாணம் செய்து கொண்டனர.

இந்த நிகழ்வில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர சிவசக்தி ஆனந்தன் கலந்து கொண்டார். பதவியேற்காத மற்றைய உறுப்பினரான இந்திரராசா உடல் நலக் குறைவினால் வரவில்லையென்று தெரிவித்த சிவசக்தி ஆனந்தன், அவரும் விரைவில் பதவியேற்பார் என்று கூறினார். (த-5)

## ஆனையிறவு

நடவடிக்கைகள் தற்போது நிறைவடைந்துள்ளன.

இதனையடுத்து பரீட்சார்த்தமான ரயில் சேவை கிளிநொச்சியிலிருந்து ஆனையிறவு வரை நீடிக்கப்பட்டுள்ளது.

பளை வரையான ரயில் பாதைப் புனரமைப்புப் பணிகள் தற்போது மேற்கொள்ளப்பட்டு வருவதாகவும் இன்னும் ஒரு மாத காலத்துக்குள் அந்தப் பணிகள் பூர்த்தி செய்யப்படும் என்றும் தெரிவிக்கப்படுகின்றது. (த-5-6)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




## இன்றைய ஆட்டங்கள்

யாழ்ப்பாணம், ஒக். 17
மாலுசந்தி மைக்கல் விளையாட்டுக் கழகத்தால் யாழ். மாவட்டத்திலிருந்து அழைக்கப்பட்ட கழகங்களுக்கு இடையில் நடத்தப்படும் 7 பேர் பங்கு கொள்ளும் உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டித் தொடரில் இன்று வியாழக்கிழமை இடம்பெறவுள்ள ஆட்டங்களில் மோதவுள்ள அணிகளின் விவரம் வருமாறு:-

**பி.ப 3.30 மணி**
இளவாலை யங் ஹென்றிஸ் விளையாட்டுக் கழகம் எதிர் சக்கோட்டை சென்.சேவியர் விளையாட்டுக் கழகம்.

**மாலை 4.30 மணி**
வதிரி டைமன்ஸ் விளையாட்டுக் கழகம் எதிர் பொலிகை விண்மீன் விளையாட்டுக் கழகம். (த-23)

# வென்றது யாழ்.சென்றல்



யாழ்ப்பாணம், ஒக்.17
நியூ ஸ்ரார் பிறீமியர் லீக் கிரிக்கெட் சுற்றுப்போட்டித் தொடரில் கடந்த ஞாயிற்றுக் கிழமை கொக்குவில் இந்துக் கல்லூரி மைதானத்தில் இடம் பெற்ற ஆட்டம் ஒன்றில் யாழ்.சென்றல் விளையாட்டுக்கழக அணி வெற்றிபெற்றுள்ளது.

யாழ்.சென்றல் விளையாட்டுக்கழக அணிக்கும் மானிப்பாய் பரிஷ் விளையாட்டுக் கழக அணிக்கும் இடையிலான இந்த ஆட்டத்தில் முதலில் துடுப்பெடுத்தாடிய யாழ். சென்றல் விளையாட்டுக்கழக அணியினர் 20 பந்துப் பரிமாற்றங்கள் நிறைவில் 8 இலக்குகளை இழந்து 209 ஓட்டங்களைப் பெற்றனர்.

இதில் றஜீவ்குமார் 86 ஓட்டங்களையும், சுதர்சன் 44 ஓட்டங்களையும், பாலேந்திரா 24 ஓட்டங்களையும்,றொகான் 20 ஓட்டங்களையும், விஸ்ணு ஆட்டமிழக்காது 15 ஓட்டங்களையும் தமது அணி சார்பாகப் பெற்றனர்.

பந்துவீச்சில் மானிப்பாய் பரிஷ் விளையாட்டுக்கழக அணி சார்பில் கிசோக்குமார் 4 இலக்குகளையும், வினோத் 2 இலக்குகளையும், சுபாஸ், பிரதீஸ் ஆகியோர் தலா ஓர் இலக்கைக் கைப்பற்றினர்.

210 ஓட்டங்களைப் பெற்றால் வெற்றியென்ற நிலையில் பதிலுக்குத் துடுப்பெடுத்தாடிய மானிப்பாய் பரிஷ் விளையாட்டுக் கழக அணியினர் 20 பந்துப் பரிமாற்றங்கள் நிறைவில் சகல இலக்குகளையும் இழந்து 168 ஓட்டங்களையே பெற்றனர்.

இதில் கிசோக்குமார் 75 ஓட்டங்களையும் , துவாரகன் 24 ஓட்டங்களையும் தமது அணி சார்பாகப் பெற்றனர்.

பந்துவீச்சில் யாழ்.சென்றல் விளையாட்டுக் கழக அணி சார்பில் சுபாதீஸ் 3 இலக்குகளையும்,கலிஸ்ரன், யசிந்தன், றஜீவ்குமார் ஆகியோர் தலா 2 இலக்குகளையும், றொகான் ஓர் இலக்கையும் வீழ்த்தினர். (த-23)

## அரையிறுதி ஆட்டம் இன்று





பருத்தித்துறை, ஒக்.17
பருத்தித்துறை உதைபந்தாட்ட லீக்கின் அனுமதியுடன் நவசக்தி விளையாட்டுக் கழகத்தின் 50 ஆவது ஆண்டு நிறைவை முன்னிட்டு நடத்தப்பட்டு வரும் உதைபந்தாட்ட சுற்றுப் போட்டியின் இரண்டாவது அரையிறுதி ஆட்டம் இன்று வியாழக்கிழமை மாலை 4 மணிக்கு வதிரி பொமர்ஸ் விளையாட்டுக் கழக மைதானத்தில் நடைபெறவுள்ளது.
இதில் மயிலங்காடு ஞானமுருகன் அணியை எதிர்த்து மணற்காடு சென்.அன்ரனிஸ் அணி மோதவுள்ளது. (த-422)

## சுற்றுப் போட்டிகளுக்கு விண்ணப்பிக்கலாம்



தென்மராட்சி, ஒக்.17
அமரர் திருமதி கேதீஸ்வரி இராதாகிருஷ்ணன் நினைவாக யாழ்.மாவட்ட விளையாட்டுக் கழகங்களுக்கிடையிலான கிரிக்கெட் மற்றும் உதைபந்தாட்டச்சுற்றுப் போட்டிகளை சாவகச்சேரி சிவன் விளையாட்டுக் கழகத்தினர் நடத்தவுள்ளனர்.
சாவகச்சேரி நகர சபை பொது விளையாட்டு மைதானத்தில் நடத்தப்படவுள்ள போட்டிகளில் எட்டுப் பேர் கொண்ட எட்டு பந்து பரிமாற்ற கிரிக்கெட் போட்டியும், 11 பேர் கொண்ட உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டியும் நடத்தப்படவுள்ளன.
கிரிக்கெட் சுற்றுப் போட்டி எதிர்வரும் 19, 20 ஆகிய திகதிகளிலும் உதைபந்தாட்டப் போட்டிகள் எதிர்வரும் 26, 27 ஆகிய திகதிகளிலும் நடத்தப்படவுள்ளன.
இந்தச் சுற்றுப் போட்டிகளில் பங்குபற்ற விரும்பும் விளையாட்டுக் கழகங்கள் நாளை வெள்ளிக்கிழமைக்கு முன்னர் தொடர்பு கொள்ளுமாறு கழகச் செயலாளர் அறிவித்துள்ளார். (ங-23)

★ ★ ★

முல்லைத்தீவு விசுவமடு தோழர்கள் விளையாட்டுக் கழகத்தின் இருபதாவது ஆண்டு நிறைவையொட்டி மென்பந்து துடுப்பாட்டச் சுற்றுப் போட்டியொன்று நடத்தப்படவுள்ளது.
முல்லைத்தீவு மாவட்ட விசுவமடு மகா வித்தியாலய பழைய மாணவர்களின் ஏற்பாட்டில் நடைபெறவுள்ள இந்தச் சுற்றுப் போட்டியில் கலந்து கொள்ள விரும்பும் விளையாட்டுக் கழகங்கள் எதிர்வரும் 17 ஆம் திகதிக்கு முன்னதாக சுயமாகத் தயாரிக்கப்பட்ட தமது விண்ணப்பங்களை தலைவர்/ செயலாளர், தோழர்கள் விளையாட்டுக் கழகம், குறிஞ்சி புத்தக சாலை, விசுவமடு என்ற முகவரிக்கு அனுப்பி வைக்குமாறு கேட்கப்பட்டுள்ளது. (த-6)

## சதுரங்கத்தில் முதலிடம்



யாழ்ப்பாணம், ஒக். 17
தெல்லிப்பழை மகாஜனக் கல்லூரியின் முன்னாள் அதிபர் நவமகாஜனன் சிற்பி தெ.து.ஜெயரத்தினத்தின் 100 ஆவது பிறந்த நாளையொட்டி யாழ். மாவட்டப் பாடசாலைகளின் 15 வயதுப் பிரிவு ஆண்களுக்கான சதுரங்கப் போட்டியில் முதலாமிடத்தைப் அளவெட்டி அருணோதயக் கல்லூரி மாணவன் கு.சயிந்தன் பெற்றுக் கொண்டார். (த-23)

## ஆட்டங்களில் வென்ற அணிகள்



யாழ்ப்பாணம், ஒக்.17
மாலுசந்தி மைக்கல் விளையாட்டுக்கழகம் யாழ். மாவட்டத்திலிருத்து அழைக்கப்பட்ட கழகங்களுக்கு இடையில் நடத்தும் 7 பேர் பங்குகொள்ளும் நட்சத்திர அணிகளுக்கு இடையிலான உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டித் தொடரில் கடந்த திங்கள், செவ்வாய்க்கிழமைகளில் இடம் பெற்ற ஆட்டங்களில் வெற்றி பெற்ற அணிகளின் விவரம் வருமாறு:-
கடந்த திங்கட்கிழமை இடம் பெற்ற ஆட்டத்தில் பருத்தித்துறை ஐக்கிய விளையாட்டுக்கழக அணியை எதிர்த்து கரணவாய் கொலின்ஸ் விளையாட்டுக்கழக அணி மோதிக்கொண்டது.
இதில் இரு அணியினரும் ஆட்டநேர முடிவில் தலா 5 கோல்களைப் பெற்றமையால் ஆட்டம் சமநிலையில் முடிவடைந்தது. வெற்றி தோல்வியைத் தீர்மானிப்பதற்காக 5 சமநிலை தவிர்ப்பு உதைகள் வழங்கப்பட்டன. இதில் பருத்தித்துறை ஐக்கிய விளையாட்டுக் கழக அணி 3:2 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்றது.
கடந்த செவ்வாய்க்கிழமை இடம்பெற்ற முதலாவது ஆட்டத்தில் ஊரெழு றோயல் விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து மணற்காடு சென். அன்ரனிஸ் விளையாட்டுக் கழகஅணி மோதிக்கொண்டது.
இதில் ஊரெழு றோயல் விளையாட்டுக் கழக அணி 6:2 என்ற கோல் கணக்கில் வெற்றிபெற்றது.
இரண்டாவது ஆட்டத்தில் அல்வாய் நண்பர்கள் விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து ரெட்றேஞ்சர்ஸ் விளையாட்டுக்கழக அணி மோதிக்கொண்டது.
இதில் ரெட்றேஞ்சர்ஸ் விளையாட்டுக்கழக அணி1:0என்ற கோல்கணக்கில் வெற்றி பெற்றது. (த-23)

## அருணோதய மாணவி இரண்டாமிடம்



யாழ்ப்பாணம், ஒக். 17
தெல்லிப்பழை மகாஜனக் கல்லூரியின் முன்னாள் அதிபர் நவமகாஜனன் சிற்பி தெ.து.ஜெயரத்தினத்தின் 100 ஆவது பிறந்த நாளையொட்டி யாழ். மாவட்டப் பாடசாலைகளின் 15 வயதுப் பிரிவு பெண்களுக்கான சதுரங்கப் போட்டியில் இரண்டாமிடத்தை அளவெட்டி அருணோதயக் கல்லூரி மாணவி ச.வேணுகா பெற்றுக்கொண்டார். (த-23)

## அக்கராயன் பொலிஸாரின் கிரிக்கெட் போட்டிகள்

அக்கராயன், ஒக்.17
கிளிநொச்சி அக்கராயன் பொலிஸார் 8 பந்துப் பரிமாற்றங்கள் கொண்ட கிரிக்கெட் போட்டி ஒன்றை சனிக்கிழமை நடத்தவுள்ளனர்.
10 அணிகள் பங்குகொள்ளும் இந்தப் போட்டி ஸ்கந்தபுரம் இல.1 பாடசாலை மைதானத்தில் நடைபெறவுள்ளது.
பொலிஸாருக்கும் மக்களுக்கும் இடையில் நல்லிணக்கம், புரிந்துணர்வு என்பவற்றை ஏற்படுத்தும் வகையில் இந்தப் போட்டி நடத்தப்படவுள்ளதென அக்கராயன் பொலிஸார் தெரிவித்தனர்.

## விபுலானந்தன் கிண்ண கூடைப்பந்தாட்ட முடிவுகள்



யாழ்ப்பாணம், ஒக்.17
முன்னாள் மாணவ முதல்வர் பொன்.விபுலானந்தன் ஞாபகார்த்த வெற்றிக் கிண்ணத்துக்காக யாழ்.மாவட்டப் பாடசாலை 19 வயதுப்பிரிவு ஆண், பெண் இருபாலாருக்கும் இடையில் யாழ். மத்திய கல்லூரி மாணவ முதல்வர் சபை நடத்தும் கூடைப்பந்தாட்டச் சுற்றுப் போட்டித் தொடரில் வெற்றி பெற்ற அணிகளின் விவரம் வருமாறு:-
கடந்த செவ்வாய்க்கிழமை இடம்பெற்ற பெண்களுக்கான ஆட்டத்தில் திருக்குடும்ப கன்னியர் மட அணியை எதிர்த்து யாழ்.

*ஆண்களுக்கான ஆட்டத்தில் யாழ்.இந்துக் கல்லூரி அணியை எதிர்த்து சென். பற்றிக்ஸ் கல்லூரி அணி மோதிக் கொண்டது.*

[illegible] அணி மோதிக் காண்டது.
இதில் திருக்குடும்ப கன்னியர் மட அணி 25:18 என்ற புள்ளி அடிப்படையில் வெற்றி பெற்றது.
ஆண்களுக்கான ஆட்டத்தில் யாழ்.இந்துக் கல்லூரி அணியை எதிர்த்து சென். பற்றிக்ஸ் கல்லூரி அணி மோதிக் கொண்டது.
இதில் யாழ்.இந்துக்கல்லூரி அணி 42:30 என்ற புள்ளி அடிப்படையில் வெற்றிபெற்றது.
[illegible] இடம் பெற்ற பெண்களுக்கான ஆட்டத்தில் மருதனார்மடம் இராமநாதன் மகளிர் கல்லூரி அணியை எதிர்த்து கொக்குவில் இந்துக்கல்லூரி அணி மோதிக் கொண்டது.
இதில் கொக்குவில் இந்துக் கல்லூரி அணி 36:27 என்ற புள்ளி அடிப்படையில் வெற்றி பெற்றது.
ஆண்களுக்கான ஆட்டத்தில் சென்.ஜோன்ஸ் கல்லூரி அணியை எதிர்த்து மானிப்பாய் ஏஞ்சல் சர்வதேச பாடசாலை அணி மோதிக் கொண்டது. இதில் சென்.ஜோன்ஸ் கல்லூரிஅணி 52:24 என்ற புள்ளி அடிப்படையில் வெற்றி பெற்றது. (த-23)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பிக் பாஷ் லீக்கில் டில்ஷான்?

ஆஸ்திரேலியாவின் 20/20 தொடரான பிக் பாஷ் லீக் தொடரில் இலங்கையின் திலகரட்ண டில்ஷான் பங்குபற்றுவார் என எதிர்பார்க்கப்படுகிறது. அவரது டெஸ்ட் ஓய்வைத் தொடர்ந்தே அவர் மீதான ஆர்வம் அதிகரித்துள்ளது.

இவ்வாண்டுக்கான பிக் பாஷ் லீக் தொடர் டிசெம்பரில் ஆரம்பித்து ஜனவரி வரை இடம்பெறவுள்ள நிலையில், இதற்கு முன்னர் இத்தொடருக்காக டில்ஷான் கருத்திற் கொள்ளப்படவில்லை. ஜனவரி முடிவு வரை திலகரட்ண டில்ஷான் இலங்கை அணிக்காகப் போட்டிகளில் பங்குபற்ற வேண்டியிருக்கும் எனக் கருதப்பட்டது.

ஆனால் தற்போது அவர் டெஸ்ட் போட்டிகளிலிருந்து ஓய்வு பெற்றுள்ள நிலையில், பாகிஸ்தான் அணிக்கெதிரான ஒருநாள் சர்வதேசப் போட்டித் தொடர் டிசெம்பர் 27ஆம் திகதி முடிவடைந்ததும் பிக் பாஷ் லீக் தொடரில் பங்குபற்றும் வாய்ப்பு ஏற்பட்டுள்ளது.

இதற்கு முன்னர் திலகரட்ண டில்ஷான் 2010 ஆம் பருவ காலத்துக்கான ஆஸ்திரேலிய உள்ளூர் 20/20 தொடருக்காக நியூ சௌத் வேல்ஸ் அணிக்காக ஒப்பந்தம் செய்யப்பட்டிருந்த போதிலும், அத்தொடரில் பங்குபற்றியிருக்கவில்லை. இந்நிலையில் திலகரட்ண டில்ஷான் சிட்னி தண்டர்ஸ் அணிக்காக ஒப்பந்தம் செய்யப்படுவார் என்ற எதிர்பார்ப்பு நிலவுவதோடு, அந்த கிரிக்கெட் அணியும் அதற்கான விருப்பை வெளியிட்டுள்ளது. பிக் பாஷ் லீக் தொடரில் ஏற்கனவே இலங்கையர்களான முத்தையா முரளிதரன், லசித் மலிங்க ஆகியோர் விளையாடியுள்ளமை குறிப்பிடத்தக்கது. (து)



# சச்சினின் முடிவால் கவலை

இந்திய அணியின் நட்சத்திரத் துடுப்பாட்ட வீரர் சச்சின் டெண்டுல்கர் டெஸ்ட் போட்டிகளிலிருந்து ஓய்வுபெற முடிவெடுத்துள்ளமை கவலை தருவதாக இந்திய அணியின் இளம் துடுப்பாட்ட வீரர் விராத் ஹோக்லி தெரிவித்துள்ளார்.

சச்சின் டெண்டுல்கர் சர்வதேசப் போட்டிகளிலிருந்து ஓய்வு பெறவுள்ள நிலையிலேயே விராத் ஹோலி இவ்வாறு தனது கருத்துக்களை வெளியிட்டுள்ளார்.

சச்சின் டென்டுல்கர் துடுப்பெடுத்தாடுவதைப் பார்த்து தான் வளர்ந்ததாகக் குறிப்பிட்ட விராத் ஹோக்லி, அவரைப் போன்று துடுப்பெடுத்தாட விரும்பியதாகக் குறிப்பிட்டார். எனவே சச்சின் டெண்டுல்கர் ஓய்வு பெறுவது மிகவும் வருத்தமான தருணமாக தனக்கு அமையும் என அவர் குறிப்பிட்டார்.

சச்சின் டெண்டுல்கரே இந்தியாவுக்கு அதிகப் போட்டிகளை வென்று கொடுப்பவராக இருந்திருக்கிறார் எனத் தெரிவித்த விராத் ஹோக்லி, தங்கள் அனைவருக்கும் மிகுந்த மன உத்வேகத்தை வழங்கியதாகக் குறிப்பிட்டார்.

24 வருடங்களாக சச்சினின்றி ஓர் இந்திய அணி இருக்குமெனத் தாங்கள் எண்ணியிருக்கவில்லை எனக் குறிப்பிட்ட விராத் ஹோக்லி, இறுதித் தடவையாக சச்சின் டெண்டுல்கர் மைதானத்திற்குள் காலடி எடுத்து வைக்கும் போது தான் எவ்வாறு உணர்வார் எனத் தெரியவில்லை எனக் குறிப்பிட்டுள்ளார். (து)



# பயிற்சிக்கு திரும்பினார் மெஸ்ஸி

தொடைப்பகுதி காயத்தில் இருந்து மீண்ட பார்சிலோனா அணியின் நட்சத்திர வீரர் மெஸ்ஸி, மீண்டும் பயிற்சிக்குத் திரும்பினார்.

ஸ்பெயினில் உள்ளூர் கிளப் அணிகள் பங்கேற்கும் லா லிகா உதைபந்தாட்டத் தொடர் நடக்கிறது. இதில் நடப்புச் சம்பியன் பார்சிலோனா உள்ளிட்ட 20 அணிகள் பங்கேற்கின்றன.

பார்சிலோனா அணிக்காகத் தொடர்ந்து நான்கு முறை பிபா சிறந்த வீரர் விருது வென்ற ஆர்ஜென்ரீனாவின் லியோனல் மெஸ்ஸி பங்கேற்கிறார். அல்மிரியா அணிக்கு எதிரான லீக் போட்டியில் பங்கேற்ற போது பார்சிலோனாவின் மெஸ்சிக்குத் தொடை பகுதியில் காயம் ஏற்பட்டது. இதற்காக இரண்டு வாரம் சிகிச்சை மேற்கொண்ட இவர், தற்போது முழுமையாக குணமடைந்து பயிற்சிக்குத் திரும்பியுள்ளார். இதையடுத்து ஒசாசுனா அணிக்கு எதிரான அடுத்த லீக் போட்டியில் மெஸ்ஸி களமிறங்குவார் எனத் தெரிகிறது. (து)




# சச்சின் போட்ட 'ஜெர்சி' யாருக்கும் கிடையாது

இந்திய அணியின் நட்சத்திர துடுப்பாட்ட வீரர் சச்சின் டெண்டுல்கருக்கு மரியாதை செலுத்தும் வகையில் அவரது 'ஜெர்சி'க்கும் மும்பாய் இந்தியன்ஸ் அணி ஓய்வை அறிவித்துள்ளது. தனது 200ஆவது டெஸ்ட் போட்டியுடன் ஓய்வு பெறப் போவதாக சச்சின் அறிவித்துள்ளார். இதனையடுத்து இவர் அணிந்து வந்த 10ஆம் எண் 'ஜெர்சி'க்கும் மும்பாய் இந்தியன்ஸ் அணி ஓய்வை அறிவித்துள்ளது.

சச்சின் டெண்டுல்கர் தனது 200ஆவது மற்றும் இறுதி டெஸ்ட் கிரிக்கெட் போட்டியை மும்பாயின் வான்கடே மைதானத்தில் நவம்பர் மாதம் ஆடவுள்ளார்.

இந்திய அணியிலும் 10ஆம் எண் 'ஜெர்சி'யுடன் தான் சச்சின் ஆடி வருகிறார்.

இது குறித்து மும்பாய் இந்தியன்ஸ் உரிமையாளர் நீத்தா அம்பானி கூறுகையில், இது எங்களுக்கு மிகவும் நெகிழ்ச்சியான தருணம்.

சச்சினைக் கௌரவப்படுத்த அவர் அணிந்த 10ஆம் எண் 'ஜெர்சி'யை இனி யாருக்கும் ஒதுக்குவதில்லை என முடிவு செய்துள்ளதாகத் தெரிவித்துள்ளார்.

சமீபத்தில் ச ம்பியன்ஸ் லீக் தொடர் வெற்றியைக் கொண்டாட மும்பாய் இந்தியன்ஸ் அணி நிர்வாகம் நடத்திய விருந்துக்கு, அணி நிர்வாகிகள், வீரர்கள் என அனைவருமேசச்சினைகௌரவிக்கும்வகையில் 10ஆம்எண் ஜெர்சி அணிந்து வந்திருந்தனர் என்பது குறிப்பிடத்தக்கது. (து)



# பாகிஸ்தான் கிரிக்கெட் சபை கலைப்பு

பாகிஸ்தான் கிரிக்கெட் சபை அந்நாட்டின் பிரதமரால் கலைக்கப்பட்டுள்ளது. கிரிக்கெட் சபையின் காப்பாளர் என்ற வகையில் பிரதமர் நவாஸ் ஷெரிப் அந்த நாட்டுக் கிரிக்கெட் சபையைக் கலைத்துள்ளார். கலைக்கப்பட்டுள்ள பாகிஸ்தான் கிரிக்கெட் சபைக்குப் பதிலாக 5 பேர் கொண்ட இடைக்கால முகாமைத்துவக் குழுவொன்றும் பிரதமரால் நியமிக்கப்பட்டுள்ளது.

பாகிஸ்தான் கிரிக்கெட் சபையின் இடைக்காலத் தலைவராகப் பதவி வகித்த நஜம் சேதி, முன்னாள் கிரிக்கெட் சபைத் தலைவர் ஷகாரியார் கான், முன்னாள் வீரர்கள் ஸகீர் அப்பாஸ், ஹரூன் றஷீத் ஆகியோரோடு, பாகிஸ்தான் கிரிக்கெட் அணியின் முன்னாள் முகாமையாளரான நவீட் சீமாவும் இக்குழுவில் நியமிக்கப்பட்டுள்ளனர்.



இது தொடர்பாக பாகிஸ்தான் கிரிக்கெட் சபை வெளியிட்ட அறிக்கையில், பாகிஸ்தான் கிரிக்கெட் சபையின் காப்பாளரான பாகிஸ்தானின் பிரதமர் பாகிஸ்தான் கிரிக்கெட் சபையின் யாப்பின் 41ஆவது பகுதியின்படி கிரிக்கெட் சபையைக் கலைத்துள்ளதாக அறிவித்துள்ளது. எனினும் பாகிஸ்தான் கிரிக்கெட் சபையின் நாளுக்குநாள் நடவடிக்கைகளை மேற்கொள்ளவும் உள்ளூர், சர்வதேச தொடர்புகளைத் தொடர்ந்தும் பேணுவதற்குமாக 5 பேர் கொண்ட இடைக்கால முகாமைத்துவக் குழுவொன்று நியமிக்கப்பட்டுள்ளதாகவும் அறிவிக்கப்பட்டுள்ளது. (து)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பழி தீர்த்தது இந்தியா

ஆஸ்திரேலிய அணிக்கெதிரான இரண்டாவது ஒருநாள் சர்வதேசப் போட்டியில் 9 இலக்குகள் வித்தியாசத்தில் பெரு வெற்றி பெற்று பழி தீர்த்துக் கொண்டது இந்தியா.

இந்திய ஆஸ்திரேலிய அணிகள் பங்குபற்றும் 7 ஒருநாள் சர்வதேச போட்டிகள் இந்தியாவில் இடம் பெற்று வருகின்றன. இதில் முதலாவது போட்டியில் ஆஸ்திரேலிய அணி 72



ஓட்டங்களால் வெற்றி பெற்றது.

இந்தச் சூழ்நிலையில் இரு அணிகளுக்கும் இடையேயான இரண்டாவது போட்டி நேற்று ஜெய்பூரில் இடம்பெற்றது.

நாணயச் சுழற்சியில் வெற்றி பெற்ற ஆஸ்திரேலிய அணி முதலில் துடுப்பெடுத்தாடக் களமிறங்கி 50 பந்துப்பரிமாற்றங்கள் நிறைவில் 5 இலக்குகளை மட்டும் இழந்து 359 ஓட்டங்களைப் பெற்றுக் கொண்டது.

ஆரம்பத்தில் துடுப்பெடுத்தாடுவதற்கு இடர்பட்ட ஆஸ்திரேலிய அணி வீரர்கள் நேரம் செல்லச் செல்ல இந்திய பந்து வீச்சாளர்களைப் புரட்டி எடுக்கத் தொடங்கினர். ஆஸி. வீரர்களின் துடுப்பில் பட்ட பந்துகள் பெரும்பாலானவை நாலாபுறமும் சிதறி எல்லைக் கோடுகளைத் தாண்டின. இதனால் இந்தியப் பந்து வீச்சாளர்களை மட்டுமன்றி களத்தடுப்பாளர்களையும் நொந்து நூலாகச் செய்தனர் ஆஸி. துடுப்பாட்ட வீரர்கள்.

அவ்வணியைச் சேர்ந்த 5 வீரர்கள் அரைச் சதத்தைக் கடந்தனர். ஆரேஞ் பின்ஞ் 50 ஓட்டங்களையும் வோற்சன் 59 ஓட்டங்களையும் ஹோஹஸ் 83 ஓட்டங்களையும் மார்ஸ் வெல் 52 ஓட்டங்களையும் பெற்று ஆட்டமிழந்ததோடு அணித்தலைவர் பெய்ஸி அதிரடியாகத் துடுப்பெடுத்தாடி 50 பந்துகளில் 8 நான்கு ஓட்டங்கள், 5 ஆறு ஓட்டங்கள் அடங்கலாக ஆட்டமிழக்காது 92 ஓட்டங்களைப் பெற்றுக் கொடுத்தார்.

இந்திய பந்து வீச்சாளர்கள் சார்பாக வினாய் குமார் 2 இலக்குகளையும், அஸ்வீன் ஓர் இலக்கினையும் கைப்பற்றினர்.

இதனை அடுத்து 360 என்ற இமாலய வெற்றி இலக்குடன் களமிறங்கிய இந்திய அணிக்கு ஆரம்பத் துடுப்பாட்ட வீரர்களான றோகித் சர்மா, தஷீர் தவான் ஆகியோர் நல்லதொரு அடித்தளத்தினை இட்டுக் கொடுத்தனர்.


இவர்கள் இருவரும் அதிடியாக ஆடி அணியின் ஓட்ட எண்ணிக்கையை மளமளெவன உயர்த்தினர். இந்திய அணி 176 ஓட்டங்களைப் பெற்றிருந்த போது தனது முதலாவது இலக்கை இழந்தது. தொடக்கம் முதல் அதிரடியாக ஆடிக் கொண்டிருந்த தஷிர் தவான் 86 பந்துகளில் 95 ஓட்டங்களைப் பெற்றிருந்த வேளை பௌல்கினர் பந்து வீச்சில் ஹட்டினிடம் பிடிகொடுத்து ஆட்டமிழந்து வெளியேறினார்.

இதனை அடுத்து களம்புகுந்த விராட் ஹோர்லி சர்மாவுடன் இணைந்து வாண வேடிக்கை காட்டினார்ர். இவரின் துடுப்பில் பட்ட பந்துகளில் பெரும் பாலானவை எல்லைக் கோடுகளைத் தாண்டியமை பார்வையாளருக்கு விருந்தாக அமைந்தது.

இவ்விருவரும் இணைந்து மேலதிக இலக்குகளை இழக்காமல் 43.3 பந்துப் பரிமாற்றங்களில் 362 ஓட்டங்களைப் பெற்று 9 இலக்குகளால் இந்திய அணியை வெற்றி பெறச் செய்தனர்.

இந்திய அணி சார்பாக றோகித் சர்மா 123 பந்துகளில் 17 நான்கு ஓட்டங்கள் 4 ஆறு ஓட்டங்கள் அடங்கலாக 141 ஓட்டங்களையும், விராட் ஹோலி 52 பந்துகளில் 8 நான்கு ஓட்டங்கள், 7 ஆறு ஓட்டங்கள் அடங்கலாக 100 ஓட்டங்களையும் ஆட்டமிழக்காமல் பெற்றுக்கொண்டனர்.

இந்தப் போட்டியின் ஆட்டநாயகனாக றோகித் சர்மா தெரிவு செய்யப்பட்டார். இந்த வெற்றியின் மூலம் இந்திய அணி 1-1 என்ற அடிப்படையில் சமநிலையில் காணப்படுகிறது. (400)



## எழுப்புதல் ஐக்கிய உபவாச ஜெபம்

மானிப்பாய் ஏஞ்சல் சர்வதேசப் பாடசாலையில்....

யாழ். கிறிஸ்தவ சபைகள் ஸ்தாபனங்களின் ஐக்கியத்துடன் இணைந்து சர்வதேச ஜெப வலையமைப்பு நடத்தும் எழுப்புதல் ஐக்கிய உபவாச ஜெபம். வடமாகாணத்திலுள்ள கிறிஸ்தவர்கள் அனைவரும் இலங்கை தேசத்துக்குகாக ஒருமனப்பட்டு ஜெபிக்க ஒன்று கூடும்படி உங்களை அன்புடன் அழைக்கின்றோம்.

நாள் - 18/10/2013 நேரம்: காலை 9.00- 3.00

யாழ். கிறிஸ்தவ சபைகள் ஸ்தாபனங்கள்

## விசேட கருத்தரங்குகள்

* அரச முகாமைத்துவ உதவியாளர் அதிசிறப்பு (Supra) பதவியுயர்த்த பரீட்சை மற்றும் தரம் II, III இற்கான தடை தாண்டல் பரீட்சைக்கானது. சனி, ஞாயிறு காலை 9.00 மணிக்கு
* SLEAS பரீட்சைக்கு ஒவ்வொரு ஞாயிறும் காலை 9.00 மணி - 4.00 மணி வரை
* ஏனைய பரீட்சைக்கான பொது உளச்சார்பு பொது அறிவு விடயங்கள் ஒவ்வொரு சனியும் 12.30 - 4.30 மணி வரை.

யாழ்ப்பாணக் கல்லூரி
பட்டப்படிப்புகள் பிரிவு யாழ் நகர்.
075 416 4564 (32903) (7.8)

## வீணைகள் விற்பனைக்கு

எம்மிடம் தரமான வீணைகள் (ஏகாந்தம், மரகதம்) விற்பனைக்கு வந்துள்ளன.
தொடர்பு : K.P. பாலகிருஷ்ணன் (32871) (7.8)
பூநாறி மரத்தடி, K.K.S. வீதி, கொக்குவில். 021 222 2940

## Personal 8 Group classes

வங்கியியல் கற்கை நெறி
CBF
Structure of Accounts
DBF
Accounting Analysis & planning
K.ஸ்ரீபரன் B.BA (F.M. Spl) 0774598430

## கனடா, அமெரிக்கா, போலந்து, சைப்பிரஸ், ஹொலண்ட் இத்தாலி, படிக்க கை நிறைய சம்பாதிக்க வழிகாட்டும் விசேட கருத்தரங்கும்- உடனடி அனுமதியும்

சர்வதேச தரத்திலான விசா விற்பன்னர்கள் கலந்து சிறப்பிக்கின்றனர்

இடம் :- திசைகாட்டி கேட்போர் கூடம்
காலம் :- 20/10/2013 ஞாயிறு காலை- 9 மணிக்கு பதிவுகள் ஆரம்பமாகி மு.ப.11 மணிக்கு கருத்தரங்கு ஆரம்பமாகும்.
பிரவேசம்:- இலவசம் (நிபந்தனைகளுடன்)

தேசிய அடையாள அட்டை/ கடவுச் சீட்டு/ சாரதி அனுமதிப் பத்திரம்/ சுயவிபரக் கோவை அவசியம்.
தொலைபேசி மூலம் முன்பதிவு செய்தல் வேண்டும்
(ஏதாவது ஒரு காரணத்திற்காக அனுமதி மறுக்கப்படலாம்)
குறிப்பு " உடனடி அனுமதி" என்பது வெளிநாட்டுக் கல்லூரிகள் வழாங்கும் நுழைவு அனுமதியாகும்.
குறிப்பிட்ட நாட்டிற்குரிய 'விசா' என்பது குறித்த நாட்டின் தூதுவராலயத்தால் மட்டும் வழங்கப்படும்.
இதனை எம் இளைய சமூகம் வேறு பிரிந்து விளங்கிக் கொள்ளல் வேண்டும்.
இவ் அடிக்குறிப்பானது எமது கௌரவ இயக்குநர் சபைக் கட்டளைப்படி இங்கே பிரசுரமாகின்றது.

திசைகாட்டி (பிறைவேற்) லிமிட்
175, பருத்தித்துறை வீதி, ஆனைப்பந்தி, யாழ்ப்பாணம்.
தொ.பே: 021 221 9016, 021 568 9090

## மணல் விற்பனைக்கு

கட்டட வேலைகளுக்கும் பூச்சு வேலைகளுக்கும் சிறந்த மணல் மண் விற்பனைக்கு உண்டு.
4 1/2 ரக்டர் 19, 000/= தொடர்புகளுக்கு
கண்ணா
077 6766499, 0777 590792

## Study in UK

SPOT ADMITION
18.10.2013 - JAFFNA

October / December இற்கான அனுமதிகள் தற்போது ஏற்றுக்கொள்ளப்படுகின்றன

Colleges
* Yearly Payment £ 3500
* IELTS Overall : 4.5 or B1

Universities
* Yearly Payment £ 3950 - £ 6450
* IELTS overall band: Minimum 5.5

011 7 555511 /14/18
021 7538395 / 021 2227230

நீங்கள் ஏன் Exponet ஐ தெரிவுசெய்ய வேண்டும்

Gnanarasa Arulajeyan (Jaffna)
Thillainathan Suthakan (Jaffna)

EXPONET
379-1/2 Galle Road, Colombo 06.
197, Arasady Road, Jaffna.
E-Mail: nimal@expogroup.lk
Web: www.expogroup.lk

## Spoken English

Veta Fluency Diploma
DMI COMPUTER EDUCATION
veta
Experts in English Training
Come, let's speak fluent English

Spoken English புதிய பிரிவுகள் ஆரம்பம்.

| யாழ்ப்பாணம் | நெல்லியடி | சாவகச்சேரி | சுன்னாகம் |
|---|---|---|---|
| Sat, Sun 7.00 a.m. | Sat, Sun 3.30 p.m. | Tue,Thu | Sat, Sun 11.00 a.m. |
| Wed, Fri 9.30 a.m. | Wed, Fri 3.30 a.m. | 9.30 a.m. | Wed, Fri 11.30 a.m. |

UK A1-Exam B1-Exam
IELTS
* Unique Test Tips
* Latest course Materials

DMI COMPUTER EDUCATION

| யாழ்ப்பாணம் | நெல்லியடி | சாவகச்சேரி | சுன்னாகம் |
|---|---|---|---|
| No.113, கன்னாதிட்டி வீதி, | M.M.V. வீதி, | No.174, கண்டி வீதி, | No.130, K.K.S. வீதி, |
| Tel.: 021 222 3403 | Tel. : 021-226 2470 | Tel. : 021-227 0775 | Tel. : 021-224 1970 |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்ரெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 17.10.2013 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.